# நாமக்கல் கவிஞரின் தமிழ்ப் பணி

முனைவர் சா. வளவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி

முனைவர் சா. வளவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை- 600 113

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: திரு. இரா. ராஜா, அமெரிக்கா)

வரிசை எண் : 4

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Nāmakkal Kaviñarin Tamilppani |
| Author | : | Dr. S. Valavan<br>Professor (Retd.)<br>Department of Tamil<br>Pachayappa's College<br>Chennai-600 010 |
| General Editor | : | Dr. D. Renganathan<br>Associate Professor<br>Faculty of Tamil Language and Linguistics<br>International Institute of Tamil Studies |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 636 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 88 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | A Critical Study on the contributions<br>of Nāmakkal Kaviñar |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

நாமக்கல் கவிஞரின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் கடவுள் உண்டு என்னும் கருத்தை வலியுறுத்தும் பிரச்சாரப் பாடல்களே என்பார் க. கைலாசபதி (ப.11)

இயேசு கிறிஸ்து, இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இரமண மகரிஷி பற்றிப் பாடியுள்ள நாமக்கல்லாரின் பாடல்கள் மேற்கூறிய கூற்றை உறுதிப்படுத்துகின்றன.

**ஜாதியில் உயர்ந்தோம் என்னும்**
**சனியனும் அகந்தை நீங்கத்**
**தாழ்ந்தவர் குடிசை தோறும்**
**தலையினால் பெருக்கிவாரும்** (ப.11)

எனும் பாடலில் சாதியினால் உயர்வு தாழ்வு கூடாது எனும் சமூகச் சீர்திருத்தக் கருத்தினை முன்வைத்துப் பாடல் புனைந்துள்ளார் நாமக்கல் கவிஞர்.

சித்தர்களும் முக்தர்களும் செறிந்து வாழ்ந்து
சேர்த்துவைத்த தவப்பயனின் சிறப்பேயாகும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அருணகிரி நாதருடைய அருளைத் தேக்கி
முக்திநெறி காட்டுகின்ற மோனஞான
முழுமதியாம் ரமண மகா முனிவன் ஜோதி

என சமய நெறிகளை மனங்கொண்டு சமத்துவம் பேசும் கவிஞரின் குரல்கள் நூலாசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டு விளக்கப்படுகின்றன.

பாரதியின் வழிநின்று பாடல்கள் பாடியுள்ள நாமக்கல் கவிஞரின் பாடல்களில் எளியநடை, எளியபதங்கள், புதிய சிந்தனை எனக் காணமுடிகிறது. தேசிய விடுதலை குறித்த சிந்தனை கொண்ட நாமக்கல்லார் பாரதி, காந்தியடிகள், ஜவகர்லால் நேரு, திலகர், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற தலைவர்கள் குறித்தும் பாடல்கள் புனைந்து பாடியுள்ளார்.

திருக்குறளுக்கு உரை எழுதியுள்ள தமிழ் ஆய்வுச் சிந்தனையாளராகக் கவிஞர் அமைகிறார்.

காலத்திற்கு ஏற்றாற் போன்றும் விளக்கத்தில் வேறுபாடு காட்டுகின்றார். சான்றாக, திருவள்ளுவர் அரசியல் பற்றிக் கூறும்போது, நாமக்கல் கவிஞரும், பரிமேலழகரும் வேறுபடுகின்றனர்.

அரசருக்குரிய செய்திகளாகப் பரிமேலழகர் கூறியதையெல்லாம் கவிஞர் பொதுமக்களுக்குரியதாக எண்ணி விளக்கம் தருவதைக் காணமுடிகின்றது.

பொருட்பால் முழுவதையும் பரிமேலழகர் அரசனுக்குரியதாக எண்ணி விளக்குகிறார்.

கவிஞர் எல்லோருக்கும் பொதுநீதியைக் கூறுவதாகக் கூறுகின்றார். 'செங்கோன்மை', 'கொடுங்கோன்மை', வெருவந்த செய்யாமை, ஒற்றாடல் ஆகிய அதிகாரங்கள் அரசனுக்கு மட்டும் உரியனவாகப் பரிமேலழகர் வழியிலேயே கூறுகின்றார்.

> கவிஞர் சில அதிகாரங்களில் அதிகாரங்களின் கருத்தை முன்னுரையாக அதிக விளக்கத்தில் கூறுகின்றார். இம் முன்னுரை பரிமேலழகரிடம் காணப்படவில்லை. (ப.59)

என்பதான ஒப்பீட்டாய்வில் திறம்படவிளக்கி நூலாசிரியர் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் அவர்களின் பன்முகத் தன்மைகளை விளக்கியுள்ளார். நூலாசிரியருக்கு எனது பாராட்டுகள்.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்துவரும் இந்நிறுவன இணைப் பேராசிரியர் முனைவர் தா. ரெங்கநாதன் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனத் தமிழ்ப்பணிகளை ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## ஆசிரியரைப் பற்றி



முனைவர் சா. வளவன் காஞ்சிபுரம் மாவட்டம் ஆற்பாக்கம் எனும் கிராமத்தில் பிறந்தவர். தந்தை தமிழாசிரியர் திரு. சாம்பசிவம். அவர் பணி மாற்றம் அடிக்கடி நிகழ்ந்ததால் தொடக்கக் கல்வியைத் திருமழிசையிலும் திருப்பெரும்பூதூரிலும் கற்கத் தொடங்கிப் பள்ளியிறுதி வகுப்பைத் திரும்பெரும்பூதூரிலேயே முடித்தவர். கல்லூரிப்படிப்பு பச்சையப்பனில் தொடங்கி முடிந்தது. புகுமுகவகுப்பு, இளங்கலை, முதுகலை, எம்.லிட்., பிஎச்.டி., என எல்லாவற்றையும் பச்சையப்பன் கல்லூரி தந்தைதைப் போலவே பணியையும் தந்தது. முப்பத்தேழு ஆண்டுகள் பணியாற்றியவர்.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வரங்குகளில் கலந்துகொண்டு கட்டுரைகளைப் படித்தவர். நூற்றுக்கும் மேற்பட்ட இளமுனைவர்களை (எம்பில்.) உருவாக்கியவர். ஐந்து முனைவர் பட்ட ஆய்வாளர்களை உருவாக்கியவர். எண்மர் முடிக்குந் தறுவாயில் உள்ளனர். தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள் எல்லாவற்றுடனும் பாடத்திட்டக்குழு, தேர்வுக்குழு, வினாத்தாள் குழு என ஏதேனும் ஒருவகையில் தொடர்புகொண்டு தலைவராகவோ, உறுப்பினராகவோ விளங்கிப் பணியாற்றியவர். சிங்கப்பூரில் உள்ள நன்யாங் பல்கலைக்கழகத்தின் முனைவர்பட்ட ஆய்வினை மதிப்பீடு செய்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அகாடெமிக் கவுன்சில், செனட் உறுப்பினராகப் பணியாற்றியவர். பச்சையப்பன் கல்லூரியின் மாலைக் கல்லூரி முதல்வராகவும் விளங்கியவர்.

பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்/ பதிப்பித்தவர். பொதுமொழியியல், நாட்டுப்புறவியல் கட்டுரைகள் ஆகியன பல பல்கலைக் கழகங்களில் பாடமாக்கப்பட்டுள்ளன. பெண்படைப்பாளர் தம் படைப்புகள், பிள்ளைத்தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகிய ஆய்வுநூல்கள் வரவேற்பைப் பெற்ற நூல்களாகும். இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் நூல் மதிப்புரைகளை, கட்டுரைகளை எழுதியவர். வானொலி, தொலைக்காட்சிகளில் இலக்கிய உரையாற்றியவர். பல பல்கலைக்கழகங்களுக்கும், இந்திய ஆட்சிப்பணிப் படிப்புக்கும் பாடக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியவர்.

# முன்னுரை

தமிழ்நாட்டில் வாழ்ந்து இந்திய விடுதலைக்காகப் பாடிய கவிஞர் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. பத்மபூஷண் விருதைப்பெற்ற பெருங்கவிஞர். மாற்றுத்திறன் கொண்டவர் என்பதால் சிறந்த ஓவியராகவும் விளங்கினார். பாமரமக்களையும் கவரும் வண்ணம் எளிய நடையில் கவிதை புனைந்தவர். அந்த எளிமை கதை, நாடகம், பிற உரைநடைகளிலும் அதே எளிமை, பாமரரைக் கவரும் இயல்பிலும் மிளிர்ந்தது. சிறந்த சொற்பொழிவாளர். சிறந்த உரையாசிரியர். பிறரைப் பாராட்டும் பண்பினர். தாயைப் போற்றிய தனயன் என்பதால் அவர்க்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. போலித்தனமில்லாமல் கள்ளங்கபடமற்று வாழ்ந்து நாட்டிற்கும் மொழிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளை சார்பில் என்னைச் சொற்பொழிவாற்ற அழைத்தபோது என் நெஞ்சம் நன்றியில் கரைந்தது. மாபெரும் கவிஞரை, நாட்டுக்குழைத்தவரை, பல்திறன் மிக்கவரைப் படிக்கும் பேறு வாய்த்ததை எண்ணி மகிழ்ந்தேன். அவருடைய வாழ்க்கை வரலாற்றிலும் பிற படைப்புகளிலும் கவிதையில் தெரிவது போலவே தமிழன் இதயத்தைக் கண்டேன். நாமக்கல் இராமலிங்கம் எனும் நாட்டுக் கவிஞரை இளைய தலைமுறையினர் போற்றுதல் வேண்டும். நெருக்கடி மிக்க இக்காலத்தில் ஆற்றல் மிக்க இளைஞர் உள்ளத்தில் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் தமிழினப் பற்றும் தொடர்ந்து வளர்ந்து வலிவு பெற்றாக வேண்டும்.

முன்னரே நாமக்கல் கவிஞரைப் பற்றிப் பல நூல்கள் வந்துவிட்டன. அவர்தம் மருகர் முனைவர் கி.ர. அனுமந்தன் அரியநூலைப் படைத்துவிட்டார். நாமக்கல் கவிஞரின் படைப்புகளில் காந்தியமும் தேசியமும் தொட்டவிடமெல்லாம் துலங்கும். அவற்றைப்பற்றியும் நூல் வந்துவிட்டது. எனவே அவர்தம் படைப்புகளும் வாழ்வியல் கூறுகளும் மீள்பார்வை செய்யப்பட்டுள்ளன. பொழிவாகப் பொழியும் வாய்ப்பினைத்தந்து, அதனைத் தாமே நூல் வடிவிலும் ஆக்கிப் பெருமைப்படுத்திய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இன்றைய மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும் இந்நாள் இயக்குநர் நாடகவியல் பேராசிரியர் முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்களுக்கும் என்னை நினைவூட்டி, ஊக்கப்படுத்தி, ஒருங்கிணைக்கும் பணியைச் செய்த முனைவர் தா. ரெங்கநாதனுக்கும் பணிவு கலந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**சா. வளவன்**

# பொருளடக்கம்


பக்கம்

அணிந்துரை

ஆசிரியரைப் பற்றி

முன்னுரை

1. நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி 1

2. நாமக்கல் கவிஞர் காட்டும் வாழ்வியல் நெறிகள் 63

# நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி

'நாமக்கல் கவிஞர்' என மக்களால் அன்புடன் அழைக்கப்படும் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் அரசியல் கொந்தளிப்பும், சமுதாயக் கிளர்ச்சியும் பண்பாட்டுத் துறையில் மறுமலர்ச்சியும் தோன்றிய காலத்தில் வாழ்ந்தவர்.

இவரது காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதி. சீருடனும் சிறப்புடனும் உயர்ந்த குறிக்கோளுடனும் ஒரு சமுதாயம் வாழ வேண்டுமானால் அந்த வாழ்வில் அமைதி நிறைந்திருக்க வேண்டும். அமைதி இல்லாத வாழ்வில் பண்பாடு, நாகரிகம், குறிக்கோள் என்பவை தோன்றா. தோன்றினாலும் நிலைத்து வளரா. ஒவ்வொரு குடும்பமும் இவை நிலைபெற அமைதியான வாழ்வை உருவாக்கிக் கொள்ளவேண்டும். நெருக்கடி மிக்க இக்காலகட்டத்தில் அமைதியைக் குடும்பத்தில் நிலைபெறச் செய்ய இயலுமா என்று எண்ணத் தோன்றும். முன்னோர் வாழ்ந்த காலகட்டங்களிலும் நெருக்கடிகள் இருந்தன என்பதை மனங்கொண்டால், அவர்கள் அவற்றை எதிர் கொண்ட தன்மையை ஆராய்ந்தால், இயலும் என்றே கூறமுடியும்.

நாமக்கல் கவிஞரின் 120 ஆவது பிறந்த நாளை (19.10.2007) அண்மையில் கொண்டாடினோம். நூற்றிருபது ஆண்டுகட்கு முன்பிருந்த தமிழ்நாட்டு நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். அடிப்படை வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை, கல்வி கற்கும் நிலையில் பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படாமை, படித்தவர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தமை முதலிய சூழல்களை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய வசதிகள் பெருகியிருக்கிற இன்றைய நிலையில் நெருக்கடிகள் உள்ளன என்றால் அன்றைய நிலையில் எவ்வாறு இருந்திருக்கும்?

இவற்றுக்கிடையேதாம் மக்கள் வாழ்ந்தார்கள்; போராடினார்கள்; படிப்படியே வெற்றிபெற்றுத் தம் மக்களை உயர்த்த முயன்றார்கள். பெண்கள் கல்வி கற்பதற்குத் தடை இருந்த காலத்தில் அவர்கள் பெற்ற குழந்தைகளுக்கு உயர்ந்த சிந்தனைகளை ஊட்டி அமைதி வழியில் குடும்பமும் சமுதாயமும் செல்வதற்கு வழிகாட்டியிருக்கிற பாங்கினைப் பாராட்ட வேண்டும்.

படிப்பறிவில்லாத பாமரத்தாய்தான் நாமக்கல் கவிஞர் ஒழுக்க சீலராக உருவாக அடிப்படை அமைத்தவர்.

ஏழு பெண் குழந்தைகளுக்குப் பின் எட்டாவது பிள்ளையாகப் பிறந்தவர் இராமலிங்கம். அம்மணி அம்மாள் பெற்ற நன்மணி. பட்டை தீட்டத்தீட்ட வைரம் ஒளி கூடுவது போல் ஒளியேறப் பெற்றவர் இராமலிங்கம். தாய் சொன்ன இரு தாரக மந்திரங்களைத் தவறாமல் நாள்தோறும் மூன்று முறை ஒலித்து ஒலித்துப் பின்பற்றியவர். அவை,

**பொய் சொல்லாதே**

**போக்கிரி என்று பேரெடுக்காதே**

என்பன. அவர் காதில் நாளும் அன்னையால் ஓதப்பெற்ற மந்திரங்கள் அவை என்றே குறிப்பிடுகின்றார் இராமலிங்கம். குழந்தைப் பருவத்தில் படிப்பறிவில்லா அன்னையார் ஒலித்த கொள்கைகளை இளைய வயதில் வள்ளுவத்தில் கண்டார்; காந்தியாரின் வாழ்க்கையைக் கண்டார். எந்தக் கோணத்தில் எவை பதியவைக்கப் படுகின்றனவோ அக்கோணத்திலேயே அப்பொருளைத் தொடர்ந்து காண்பர் என்பதற்கு இராமலிங்கரின் நோக்கமும் வாழ்வும் சான்றுகளாகும்.

குழந்தைப் பருவத்தில் பல் திறனும் அரும்பும். அதன் மனத்திற்கு அருகில் இருப்பது எது என்று அறிந்து அதனை வளர்த்து விடுவது ஒரு முறை. இத்துறையில் ஈடுபாட்டினை உண்டாக்கிவிட்டால் அதன் வளர்ச்சிக்கு நல்லது என எண்ணி அப்போக்கில் செலுத்துவது ஒருமுறை. வளர வளரத் திறன்களும் வளரும். ஒன்றை ஒன்று முந்தவும் பிந்தவும் சூழல் காரணமாகிவிடலாம். ஈடுபாடில்லாப் பாடத்தால் தானாக எதையாவது கை கிறுக்கத் தொடங்கிவிடும். அது ஓவியமானால் ஓவியக் கலைஞர் ஆகிவிட முடியும். அதற்கு வளரும் போது தடை ஏற்படின் அதிலிருந்து விலகத் தோன்றிவிடும். அதற்கு ஆதரவு பெருகினால் ஓவிய வித்தகராகி விட முடியும். இராமலிங்கத்திற்குப் பல அனுபவங்கள் இவ்வாறு வாய்த்தன. பல்துறை வித்தகரானார் இராமலிங்கம். கவிஞர், ஓவியர், பாடகர், நாடகாசிரியர், நாவலாசிரியர், தன்வரலாற்றாசிரியர், ஆய்வாளர் எனப் பன்முகம் கொண்ட வித்தகர் அவர்.

குழந்தைக்குப் போலச் செய்தல் இயல்பாகும். ஒன்றைப் பார்த்து அப்படியே செய்ய முயல்வது அதன் இயல்பு. மொழியையும் போலச் செய்தல் மூலமே கற்றுக்கொள்கிறது என்பர். கூத்துப்பாட்டு ஒருமுறை இராமலிங்கரை ஈர்த்தது. அந்த

மெட்டில் பாடத் தோன்றியது அவருக்கு. பாட்டும் எழுந்தது. வாய்ப்பும் கிட்டியது போலச் செய்தல் ஒப்புமையாக்கமாக வளர்ந்தது. பாட்டுக்கலை அவருள்ளத்தே வளர்ந்தது.

கூத்தினைப் போலவே நாடகமும் அவரை ஈர்த்தது. அவற்றோடு ஒன்றிப் போவார் இராமலிங்கம். நாடகமேடை அவர்க்கு எவ்வளவு உதவிற்று என்பதை அவரே பலமுறை கூறியுள்ளார்.

> **என்னுடைய கவிதை உள்ளமும் சித்திர வித்தையும் பண்படுவதற்கு மிகவும் உதவியாக இருந்தது நாடகமேடை**

என்னும் கூற்று குறிப்பிடத்தக்கதாகும்.

கிட்டப்பா சகோதரர்களுடைய நட்பால் அவர்களுடைய நாடகங்களுக்குப் பாட்டுக்கள் பல எழுதிக் கொடுத்தார். காட்சிகளுக்கு ஏற்ப, திரைச்சீலைகளில் ஓவியங்கள் தீட்டித்தந்தார். சுவைமிகுந்த பொழுது போக்காக இராமலிங்கத்திற்கு இவை அமைந்தன. கவிஞராகவும் ஓவியராகவும் பட்டை தீட்டியது நாடக மேடை.

இந்தியாவில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்த சமுதாய, சமயச் சீர்திருத்த வாதியர் இராஜாராம் மோகன்ராய், இரவீந்திரநாத் தாகூர், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் முதலிய பெரியோர் அவர்தம் புரட்சிக் கருத்துக்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். இக்கொள்கைகளில் அவர் நன்கு ஊறியதன் விளைவாக இந்தியப் பண்பாட்டின் மீது அவருக்குத் தனிப்பற்று ஏற்பட்டது.

**நாமக்கல் கவிஞரின் கவித்திறன்**

தமிழ் இலக்கியத் துறைக்கு இராமலிங்கம் பிள்ளை அவர்கள் செய்துள்ள தொண்டுகளில் எல்லாம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது அவர் அவ்வப்போது புனைந்துள்ள கவிதைகளே ஆகும்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமுதாய நிலைகள், தேவைகள் ஆகியவற்றின் பின்னணியில் தாம் இலக்கியங்கள் தோன்றுகின்றன.

> **இலக்கியம் வெறும் சூனியத்திலிருந்து தோன்றுவதில்லை. குறிப்பிட்ட சமுதாயத்தின் பின்னணியிலேயே இலக்கியம் தோன்றுகின்றது**

என்பார் வில்பர் ஸ்காட் எனும் அமெரிக்க அறிஞர். நாமக்கல்லாரின் படைப்புகள் இவர்தம் கருத்திற்குப் பொருந்தி வருகின்றன.

## வாழ்வியல் களஞ்சியத்தின் கவிதை குறித்த கருத்துகள்

ஓர் அனுபவத்தின் கற்பனை உணர்வைத் தேர்ந்தெடுக்கப் பட்ட சொற்கள் கொண்டு அவற்றின் பொருள், ஒலி, குறிப்பு ஆற்றல் (Suggestive Power) ஆகியவற்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி வெளிப்பாட்டைத் தோற்றுவிக்க முயலும் இலக்கிய வகையே கவிதை (poetry) ஆகும். எல்லாச் சமுதாயமும் கவிதையையே தலைசிறந்த இலக்கிய வகையாகக் கருதுகின்றன. கவிதை மந்திர மொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் மிகப் பழைய மக்களின் ஓசை நயமுடைய வாய்மொழிக் கதைகளிலுமே அதன் தோற்றத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

ஓசையமைப்புகளைக் கவிதைகள் பல்வேறு வகைகளில் பயன்படுத்துகின்றன. யாப்பு வகைகள் மொழிக்கு மொழி மாறுபடக் காணலாம். காலத்திற்கேற்பவும் பயன்பாடுகளுக் கேற்பவும் கவிதைப் பொருள்கள் மாறுபடும். எளிதில் கூறவியலாத அனுபவங்களைக் கவிதை உவமைகள், உருவகங்கள் மூலமாக அறிவிக்க முயலுகிறது.

நாமக்கல் கவிஞர் இளைய வயதிலேயே ஒலியையும் குறிப்பு ஆற்றலையும் மனதில் பதிய வைத்துக்கொண்டவர். ஒப்புவமையாக்கத்தால் உருவான அவர்தம் கவிதை இவற்றை உறுதிப்படுத்தும். அவர் தம் கவிதைப் பொருள் பல. அவற்றுக் கேற்பவும் பண்பாட்டைக் காக்கும் நோக்கத்திற்கேற்பவும் ஒலி யமைப்பு அவர்தம் கவிதைகளில் மாறி விளங்குகின்றது.

கவிதை என்றால் என்ன? எது கவிதை என்பது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் மேலை நாடுகளில் கூறப்பட்டுள்ளன.

> **மிக உயர்ந்த சொற்களை மிகச்சிறிய முறையில் உள்ளடக்கியது கவிதை**

என்பார் கோலரிட்சு.

> **அமைதியில் பெறப்பட்ட ஆற்றலுடைய உணர்ச்சிகளின் தன் வெளிப்பாடே கவிதை**

என்பார் வேர்ட்சுவொர்த்து.

> **அழகை ஒலிநயத்தோடு படைப்பது கவிதை**

என்பார் எட்கார் ஆலன்போ.

> **வாழ்வு பற்றிய ஆய்வே**

என்பார் அர்னால்டு.

கவிதை அறிவியலிலிருந்து மிகவும் வேறுபட்டது. அவை இரண்டின் தன்மைகளும் வெவ்வேறானவை.

கவிதை கதைப் போக்கினது (Narrative), நாடகப் பாங்கினது (Dramatic), தன்னுணர்ச்சிக் கூற்றினது (Lyric) என மூவகைப்படும் என மேலைநாட்டினர் சொல் உணர்ச்சி ஒலி நயம், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் கவிதையை விளக்கினர். ஒப்பிட்டும் காட்டினர்.

தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்யுளியலில் ஏழு வகையான இலக்கிய வகைகளையும் அவற்றிற்குரிய முப்பத்து நான்கு கூறுகளையும் பகுத்துக் கூறுகிறார். கவிதையின் சொற்கேட்பார்க்குப் பொருள் கண்கூடாதல் வேண்டும் என்பதால் அதற்குரிய மெய்ப்பாடுகளைத் தொகுத்து எட்டு வகையென்றும் விரித்து முப்பத்திரண்டு என்றும் மெய்ப்பாட்டியலில் கூறினார். உவமையின் தன்மையும் அதன் வகைகளும் உவமச் சொற்கள் வருமிடங்களும் உவமைக்குரிய மரபும் வேறுபாடுகளும் உவமையியலிலும் கூறினார். கவிஞன் எவ்வாறு மரபுகெடாது சொற்களை வழங்கிட வேண்டும் என்பதை மரபியலில் வலியுறுத்தி இளமை, ஆண்பால், பெண்பால் பெயர்கள் இவையெனக் குறிப்பிட்டு, நூலின் இலக்கணத்தையும் தந்தார். கவிதையும் அதன் பொருளும் கவிஞன் விரும்பியவாறே படிப்போரைச் சென்றடைய வழிகாட்டினார் தொல்காப்பியர். ஒரு கவிதையில் கவிஞனின் ஆளுமைக்கே முதலிடம் என்பது மேலை நாட்டுப் புனைவியலாரின் கருத்தாகும். ஆளுமை வெளிப்பட நாமக்கல் கவிஞர் கவிதைகளை இயற்றினார் என்பதை மறுப்பாரிலர்.

> **இசையால் ஈர்க்கப்படுவதும் உணர்ச்சி உந்தலால் தோன்றும் ஒத்த உடலியக்கமும் இவ்விரண்டின் இயைபால் தோன்றும் 'லயமும்' மனிதனிடம் இயல்பாக உள்ள தன்மைகள். இசை 'லயம்' என்பன போலவே மற்றொன்றைப் பார்த்துச் செய்யும் போன்மைப் பண்பும் மனிதனுக்கு இயற்கையானது ஆகும். செய்யுளின்பாற்படும் பா வகைகள் எல்லாம் மேலே குறிப்பிட்ட இசை, 'லயம்' என்பவற்றின் இசைபால் தோன்றி இன்புறுத்துவன. இவ்வாறு இயற்கையாக,**

**இயல்பூக்கங்கள் போல் அமைந்த இம் மனிதப் பண்புகள்தாம் பல்வேறு நிலைகளில் மேலும் மேலும் வளர்ச்சியுற்று இறுதியில் கவிதையாக மலர்ந்தன**

என்னும் கூற்று குறிப்பிடத்தக்கதாகும். இசை, லயம், போன்மைப் பண்பினைச் சிறுவயது முதலே வளர்த்துக் கொண்ட நாமக்கல் கவிஞர் மனிதப் பண்புகளை இயல்பாக வளர்த்துக் கொண்டார்.

கவிதைக்கு வரைவிலக்கணம் கூறுவது கடினம். ஆழ்ந்த உணர்வையோ, அனுபவத்தையோ, உயர்ந்த கருத்தையோ, அழகிய மொழியில் நெஞ்சை அள்ளத்தக்க வகையில் வெளிப்படுத்துவதே கவிதை என்னும் கருத்தைப் பொதுவாகப் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

கவிதை சொல்லோடும், பொருளோடும் விளையாடும் ஒரு கலை. அஃது அறிவியலைக் காட்டிலும் அழகியலோடு அதிகம் தொடர்புடையது. அழகியல் உள்ளம் சார்ந்தது. உள்ளம், உணர்ச்சி ஊறும் இடம். எனவே கவிதை, பெரிதும் உணர்ச்சி, உத்வேகம், மெய்ப்பாடு, கற்பனை என்பவை பற்றியது.

பாரதியின் கவிதைகளில் பகுத்தறிவை விட உணர்ச்சி வேகமே அதிகம் எழுச்சியூட்டுவதைக் காண முடிகின்றது. அவ்விதம் கூறுவதினால் கவிஞர்கள் பகுத்தறிவுக்கு முதன்மை அளிப்பவர்கள் அல்லர் எனப் பொருளாகாது. பாலுக்குள் சர்க்கரைப் போல, உணர்ச்சிக்குள் பகுத்தறிவைக் கலந்தே கவிஞர்கள் தருகின்றனர்.

அனுபவித்துக் கவிதையை இரசிப்பவர்களுக்குப் பகுத்தறிவு இனிக்கவே செய்யும்.

கவிதை, கவிஞனின் சுய அனுபவமாக, உருவெடுப்பது. அவ்விதமான ஓர் அனுபவக் கவிதையாக,

**புவியினுக்கு அணியாய் ஆன்றே**
**பொருள் தந்து புலத்திற் றாகி**
**அவியாகத் துறைகள் தாங்கி**
**ஐந்திணை நெறிய ளாவி**
**சவியுறத் தெளிந்து தண்ணென்(று)**
**ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்**
**கவியெனக் கிடந்த கோதா**
**வரியினை வீரர் கண்டார்**

**(கம்ப.ஆர.காண்.சூர்.பட)**

என்னும் கவிதையைக் கூறலாம். தமிழ்க் கவிதையை அதன் உச்சிக்கே எடுத்துச் சென்ற கவியரசர் கம்பர், கவிதை எவ்விதம் அமைய

வேண்டும் என்று விளக்கி இருப்பதை இதிற் காண்கின்றோம். இஃது அவரது அனுபவம். இருப்பினும் கவிதையைப் பற்றித் தமிழர் எத்தகைய கருத்துக் கொண்டிருந்தனர் என்பதற்கு இச்செய்யுள் நல்ல எடுத்துக்காட்டு.

ஆங்கிலத்தில், மரபுரீதியான கவிதை அமைப்பு விதிகளைப் பின்பற்றாது கட்டற்ற கவிதை (Free verse) என்னும் பெயரில் பாடப்பெற்று வந்த கவிதைப் பாங்கில் தமிழில் வசன கவிதை என்று பெயரிட்டு மணிக்கொடி கவிஞர்கள் எழுதலாயினர்.

வசன கவிதையே பிற்காலத்தில் புதுக்கவிதை ஆயிற்று. செய்யுள் இலக்கண வரம்புகள் எவையும் இல்லாமல் போனாலும், புதுக்கவிதை பாடுவோர் படிமம், குறியீடு, உருவகம் முதலிய உத்திகளைப் பின்பற்றிக் கவித்துவத்தை நிலைநாட்டுகின்றனர். படிமம் என்பது பிரதிமை அல்லது வடிவம். மனம் நினைப்பதை, கண்கள் கண்டதைச் சொல்லால் பிரதி பண்ணுதல் படிமமாகும். ஒன்றை இன்னொன்றால் குறிப்பிடுவது குறியீட்டு உத்தி முறையாகும்.

இறுக்கம், புதுக்கவிதையின் மற்றுமொரு சிறப்பியல்பு எனலாம். கவிதை குறித்த இவ்வளவு விளக்கங்களைக் கொண்டு கவிஞரின் படைப்புகளில் கவிதைத் திறனைக் கண்டாலும் எல்லாம் பொருந்தியே வருகின்றன.

ஒரு படைப்பாளரின் இலக்கியப் படைப்புகளை ஆராயும் போது அவர்தம் படைப்புக்களின் நோக்கினையும் போக்கினையும் முழுமையாகப் புரிந்து கொள்வதுடன் அவர் வாழ்ந்த காலத்தின் பின்னணியை ஆராய்வதும் இன்றியமையாததாகிறது. கவிஞரின் உணர்ச்சிகள் உன்னதமானவை. ஆனால் அவை கவிதைகளாக வெளிப்படும் போது இசை வடிவம் என்னும் எல்லையோடு நின்று விடுகின்றன.

நாமக்கல் கவிஞர் தம் இளம் வயதிலிருந்தே கவிபாடத் தொடங்கினார். இவரின் பாடல்களைப் பக்திப்பாடல்கள், தேசியப் பாடல்கள், தமிழுணர்வுப் பாடல்கள் என மூன்றாகப் பகுக்கலாம். இவரின் கவிதை நூலான தமிழன் இதயம், அவளும் அவனும் ஆகிய நூல்களைச் சான்றுகளாகக் கொண்டு ஆராயலாம். அவளும் அவனும் நூலில் அழகிய விருத்தங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இவர் காலத்தில் வாழ்ந்த இருபெரும் கவிஞர்கள் பாரதியாரும், பாரதிதாசனும் ஆவர். இக்கவிஞர்களோடு இராமலிங்கரும் ஒத்து இயங்குகின்றார்.

பக்திப்பாடல்

இராமலிங்க அடிகளின் பாடல்களில் சமரச சன்மார்க்கமும், விவேகானந்தரின் சமய ஒருமைப்பாட்டு உணர்வும் மலிந்து கிடந்தன. சமயப் புத்துணர்வுக்கு இவர் பாடல்கள் வழிகாட்டின.

சான்றாக,

**காந்தியடிகள், மதங்கள் யாவும் ஒரு மரத்தினின்றும் தோன்றிய பல கிளைகளைப் போன்றவை என்கின்றார்**
**(Gandhiji, Harijan, 1937: ப.407)**

இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு பாரதியின் கவிதையை நோக்குவோமாயின் பல தெய்வ வணக்கங்கள் பாரதியார் கவிதைகளில் இடம் பெற்றாலும் எல்லா மதங்களினுடைய உட்பொருள் ஒன்றைப் பாடும் கருத்துடையவராகப் பாரதியார் காணப்படுகின்றார். பாரதி பராசக்தி, கண்ணன் முதலிய பல தெய்வங்களைப் பாடினார். பாரதிக்குப் பின் வந்த நாமக்கல் கவிஞரும் தம் பாடல்களில் சமய ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்துகின்றார். இவர் எல்லா மதங்களும் வழிபடும் 'கடவுள் ஒருவரே' என்னும் கருத்துடையவராக இருக்கின்றார். மனிதன்தான் சமய வேறுபாட்டிற்குக் காரணமே தவிரக் கடவுள் அன்று என்று நாமக்கல் கவிஞர் கூறுகின்றார்.

**உலகெலாம் படைத்துக் காத்தே**
**உருவிலா தழித்து நாளும்**
**உண்மையாய் எண்ண மாளா**
**ஒருவனாய் அருவ னாகிச்**
**சலமிலா தெண்ணு வோர்க்குச்**
**சத்திய மயமே யாகித்**
**தனித்தனி பிரிந்த போதும்**
**தானதிற் பிரியா னாகி**
**மலரின்மேல் தேவனாகி**
**மாதொரு பாக னாகி**
**மாலொடு புத்த னாகி**
**மகம்மதாய் ஏசு வாகிப்**
**பலபல தெய்வ மாகிப்**
**பற்பல மதங்க ளாகிப்**
**பக்குவப் படியே தோன்றும்**
**பரமனார் பெருமை போற்றி** (நா.க.பா.ப. 1)

பராசக்தி, கண்ணன், முருகன் பற்றித் தனித்தனியே பாடல்கள் பாடியுள்ளார். மேலும் பகவத்கீதையின் சிறப்புக்களையும் பாடியுள்ளார். இங்ஙனம் பொதுமையுறப்பாடி மனிதரே பிரித்து, பிரிந்து வாழ்கின்றமையைச் சுட்டுகின்றார்.

*பகவத் கீதையைப் படித்திடுவோம்*
*பகவான் அருள் பெறத் துடித்திடுவோம்*
*மிகவும் நல்லறி வுண்டாகும்*
*மீறிய ஆசைகள் துண்டாகும்*
*நால் வகையோகமும் ஆய்ந்திடலாம்*
*நமக்கெது சரியெனத் தேர்ந்திடலாம்*
*நூல்களின் எல்லையும் அதுவேயாம்*
*நுண்ணறி வென்பதும் இதுவேயாம்*
*(நா.க.பா.ப. 421)*

இப்பாடலின் வழிக் கீதையின் புனிதத்தை விளக்கியதோடு நில்லாமல் பக்தியை இலக்கியமாக்குகின்றார். நூலால் வரும் நுண்ணறிவும் பக்தி என்கிறார். காதலையும் கடவுளையும் இணைத்தும் பாடியுள்ளார்.

*விடிதல் என்று சொலும் காலம்-கீழ்*
*வெளிச்சம் காணுவது போலும்*
*அடவி என்ற சொல்லாலே-மர*
*அடர்த்தி தோன்றுவது போலே*
*புடவை என்று சொலும்போது-மனம்*
*புகுந்து நிற்கும் ஒருமாது*
*கடவுள் என்ற பெயர் சொன்னால் - அதில்*
*காதல் சக்தி வரும் முன்னால் (நா.க.பா.ப. 427)*

என்று பாடுகின்றார். விடியலையும் அடவியையும் புடவையையும் எண்ணும்போது மனக்காட்சிகள் உருவாவனபோல இறை என்கிற போது காதல் சக்தி மனக்காட்சியில் உருவாகப் பழக்குகின்றார் கவிஞர்.

கடவுள் நம்பிக்கையை மக்களிடையில் தம் பாடல்கள் வழி எளிதில் கொண்டு சென்றார்.

தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கம் தோன்றிக் கடவுள் மறுப்புக் கொள்கையைப் பரப்பிய காலத்தில் வாழ்ந்த நாமக்கல் கவிஞரின் பக்திப்பாடல்களில் அதனை எதிர்ப்பதைக் காண முடிகின்றது. முன்னோரின் பழக்கங்களையும் அவர்கள் இயற்றிய நூல்களையும் தெய்வக்குறியாக எண்ணிப் போடப்படும் பிள்ளையார் சுழி முதலியவற்றையும் எள்ளுவதையும் அவமதிப்பதையும் கண்டிக்கிறார். மேலும்,

**தெய்வபக்தி தீமை செய்ய இடந்தராது**
**தீங்குவர நேர்ந்தாலும் இடிந்திடாது**
**தெய்வ நிலையில்லாத நெஞ்சினோரே**
**தீங்கிழைக்க ஒரு சிறிதும் அஞ்சிடாதார்**

*(நா.க.பா.ப. 393)*

என்னும் வரிகளில் தெய்வபக்தியின் அவசியத்தை எடுத்துரைக்கின்றார்.

'கடவுள் அனைத்துப் பொருள்களிலும் உள்ளார்' என்கிறார் இராமலிங்க சுவாமிகள் (வள்ளலார்). பாரதியாரும் இயற்கையில் கடவுள் உள்ளார் என்னும் கருத்தை வலியுறுத்த பல தோத்திரப்பாடல்கள் பாடியுள்ளார். சூரியனையுமே கடவுளாக வழிபடும் பழக்கம் நம்மிடையே ஆதிகாலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது.

இப்பழைய முறையினைப் பின்பற்றி அனைத்து இயற்கைப் பொருளிலும் கடவுள் உள்ளார் என்று பாடினாலும் அப்பாடல்களில் இயற்கையின் தோற்றத்திற்குக் காரணம் கடவுள் என்ற கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடுகின்றார். இதற்குக் காரணம் இயற்கையின் பல்வேறு செயல்களிலும் கடவுள் ஒருவர் இருப்பதை மக்கள் உணர வேண்டும் என்னும் ஆர்வமே ஆகும்.

**"உண்டு" என்பதைக் கண்டிலேன் தெளியப்**
**பண்டைநம் முன்னோர் பகர்ந்ததை யெல்லாம்**
**படித்துப் பார்த்தேன்; பாடமும் கேட்டேன்;**
**ஒடித்துப் பிரித்தும் ஊன்றி எண்ணினேன்**
**நீறுபூசியெந் நேரமுங் கழித்தேன்**
**'கண்டிகை தரித்தால் காணலாம்' என்றார்**
**கண்டிகை கனத்தும் கண்டிலேன் பொருளை;**

*(நா.க.பா.ப. 454)*

தமக்கு விளங்கவில்லை முதலில் என்பதை உணர்த்தி மாறுபட்ட கருத்துடையோர் மனப்பாங்கிற்கு ஏற்பவே தொடங்கி, தம் கருத்தை இறுதியில் விளக்கி மீட்டுருவாக்கம் செய்ய முயன்றுள்ளார் கவிஞர்.

இப்பாடலில் பல்வகை மதச் சடங்கினாலும் வேதங்களைப் படிப்பதனாலும், கோயில் குளங்களுக்குச் செல்வதனாலும் பஜனைகளைச் செய்வதனாலும் கடவுளை அறிய முடியாது என்னும் உண்மையைக் கூறுவதுடன், இவ்வெளிச் சடங்குகளால் கடவுளைக் காணமுடியவில்லை என்பதனால் இல்லை என்று சொல்வதற்கு இடர்ப்படும் மனநிலையினையும் காட்டுகின்றார்.

குடும்பச் சொத்துகள் குறையாதிருக்கக்
கோயில் சத்திரம் குளங்களுக்காகத்
.... ..... ..... ..... .....
விஞ்ஞானத்தின் விரிந்தஅறிவுடன்
இயற்கையின் விதிகளை முற்றும் இணைத்தும்
.... ..... ..... ..... .....
வருஷக் கணக்கில் வருந்தி எண்ணித்
தீர்த்து முடித்துத் திட்டம் செய்யினும்
எண்ணுவ தொன்றே மனித இஷ்டமாய்க்
காரியம் முடிக்கக் கர்த்தா அல்லவே! (நா.க.பா.ப. 459-460)

எனும் பாடலில் கடவுள் இட்ட திட்டப்படியே உலகம் இயங்குகின்றது. மனிதன் போட்ட திட்டங்கள் பயனற்றுப் போகின்றன என்னும் கருத்தை வலியுறுத்துவதன் வாயிலாகக் கடவுள் ஒருவர் உண்டு என்னும் கருத்தை வலியுறுத்துகின்றார். இதனை,

> எல்லாப் பொருட்களையும் கடவுளாகக் கண்ட நிலைமாறி, கடவுள் ஒருவர் உண்டு என்பதை விளங்க வைக்க முயலும் போக்கு நாமக்கல் கவிஞரிடம் காணப்படுகின்றது. காரணம், சுயமரியாதை இயக்கத்தில் 'கடவுள் இல்லை' என்ற கொள்கையினை மறுக்க, நாமக்கல் கவிஞர் உண்டு என்று வலியுறுத்தும் கொள்கையில் ஈடுபடுகின்றார். நாமக்கல் கவிஞரின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள், கடவுள் உண்டு என்னும் கருத்தை வலியுறுத்தும் பிரச்சாரப் பாடல்களே

என்பார் க. கைலாசபதி.

நாமக்கல் கவிஞர் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தும் பாடல்களைப் பாடியதோடு இயேசு கிறிஸ்து, இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இரமணமகரிஷி பற்றியும் பாடியுள்ளார்.

முன்னையோர் நமது நாட்டின்
முனிவரர் தேடி வைத்த
முழுமுதல் ஞான மெல்லாம்
மூடநம்பிக்கை யென்னும்
பொன்னையே தெய்வ மென்றும்
போகமே வாழ்க்கை யென்றும்
புனிதரைக் கொன்று வீழ்த்தும்
போரையே வீர மென்றும் (நா.க.பா.ப. 208)

கூறுவதைக் கண்டிக்கின்றார். இப்பாடலில் இராமகிருஷ்ணரின் சமய ஒருமைப்பாட்டினையும் அவரது துறவறச் சிறப்பினையும் கூறுகின்றார்.

**ஜாதியில் உயர்ந்தோம் என்னும்**
**சனியனும் அகந்தை நீங்கத்**
**தாழ்ந்தவர் குடிசை தோறும்**
**தலையினால் பெருக்கி வாரும்** (நா.க.பா.ப. 22)

என்று வேண்டியதைப் பாடுகின்றார். 'தமிழன் இதயம்' என்னும் கவிதை நூலிலும் இராமகிருஷ்ணரின் சிறப்பியல்புகளைப் பாடியுள்ளார்.

தெய்வீகத்தோடு தேசியத்தையும் இணைத்துத் தேசத்தொண்டு வழியே தெய்வத்தைக் காணமுடியும் என்னும் விவேகானந்தரின் சிறப்பைப் பாடியுள்ளார்.

ஆண்மை உருக்கொண்ட அந்தணன் - எங்கள்
அண்ணல் விவேகானந்தனின்
மாண்பை அளந்திட எண்ணினால்-இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம்

காமனைப் போன்ற அழகினான்-பொல்லாக்
காமத்தை வென்று பழகினான்
சேமனைப் போலக் குளிர்ந்தவன்-ஞான
சூரியன் போலக் கிளர்ந்தவன் (நா.க.பா. ப.214)

எனும் பாடல் அடிகளில் வீரத்துறவி விவேகானந்தரின் துறவற மேன்மை புலப்படுகின்றது.

'நான்' என்னும் அகங்காரம் அழியும் போதுதான் கடவுளைக் காண முடியும் என்னும் இரமணரின் கருத்தை ஏற்றுப் போற்றுகின்றார்.

சித்தர்களும் முக்தர்களும் செறிந்து வாழ்ந்து
சேர்த்து வைத்த தவப்பயனின் சிறப்பே யாகும்
எத்திசையும் இவ்வுலகில் எங்கும் காணா
எழில் மிகுந்த தமிழ்நாட்டின் அமைதி என்றும்
அத்தகைய மரபினுக்கிங் காக்கம் தந்தே
அருணகிரி நாதனுடைஅருளைத் தேக்கி
முத்திநெறி காட்டுகின்ற மோன ஞான
முழுமதியாம் ரமணமகா முனிவன் ஜோதி
(நா.க.பா.ப. 212)

இப்பாடல் அடிகளில் இரமணரின் சமயத் தத்துவத்தை விளங்க வைக்கின்றார்.

இவ்வாறு மதத் தலைவர்களின் சிறப்பும் சமயத் தத்துவமும் இவர் தம் பாடல்களில் வெளிப்படுகின்றன.

## தேசியப் பாடல்கள்

உணர்ச்சி மிக்க விடுதலை இயக்கப் பாடல்களைப் பாடிய பாரதிக்குப் பின் விடுதலை இயக்கப் பாடல்களைப் பாடி, சுதந்திர உணர்வினை ஊட்டியவர் நாமக்கல் கவிஞர். இவரின் விடுதலை இயக்கப் பாடல்கள் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பெரிதும் உதவின. பாரதியார் பாரதத்தாயை வீர மிக்கவளாகவும், தெய்வீகத்தன்மை நிறைந்தவளாகவும் படைத்துள்ளார். அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்த பாரதத்தாயின் புலம்பலாகக் கவிஞர் பாடிய பாடலில் அடிமையானதற்குரிய காரணங்களை அடுக்குகின்றார்.

**வந்தார் பலபேர்கள்**
**வந்தவரைச் சொந்தமுடன்**
**தந்தே னிடமவர்க்கும்**
**தக்க விருந்துமிட்டேன்**
**சந்தேகம் நானவர்மேல்**
**சற்றும் நினைக்காமல்**
**அந்தோ! இருந்து விட்டேன்**
**அந்த ஒரு காரணத்தால்**
**நொந்தேன் நிலைதவறி**
**நோவேன் விதியினையே** (நா.க.பா.ப.128)

இவ்வடிகள் பாரதத்தாய் 'சோகமே உருவாய் இருந்த நிலையை விளக்குகின்றன. தேசியப்பாடல்களைக் கவிஞர் இரண்டாகப் பகுத்துப் பாடியுள்ளார் எனலாம்.

- அடிமைபட்ட காலத்தில் இந்தியத்தாயின் மனநிலை
- விடுதலை இயக்கக் காலத்தில் இந்தியத்தாயின் மனநிலை

எனப் பாடியுள்ளமையை அறியமுடிகின்றது. அடிமைப்பட்ட இந்தியத் தாயின் தளையை அகற்ற அவர் பாடிய பாடல்கள் பாரதியின் பாடல் அளவிற்கு வீறு உணர்ச்சியும் வெறிகொண்ட உணர்வையும் கொண்டன எனக்கூற முடியாதென்றாலும் அவளுடைய மனநிலையைச் சித்திரிக்கும் வகையில் வீரத்தை வெளிப்படுத்துகின்றன எனலாம். அன்பு காட்டிய தாயை அடிமைப்படுத்திய வருத்தத்தில் நொந்து போன கவிஞர் அதற்கான

தீர்வைச் சிந்திக்குமுன் தாய் மீது கொண்ட அன்பில் துவண்டு போனார் என்றே கருதமுடிகின்றது.

*வீட்டினி லிருந்த போது*
*வெகுண்டெமை மருண்டு பார்ப்போம்;*
*கூட்டினிற் கிடக்கு மிந்நாள்*
*குளிர்ந்தனை சிரித்து வந்தாய்;*
*நீட்டினை முடங்கி நொந்த*
*நின்னுடை அங்கம் பூத்துக்*
*காட்டினை என்றுங் காணாக்*
*கட்டழ குடனே வந்தாய்* *(நா.க.பா. ப.432)*

எனும் பாடல் இந்தியத்தாய் நாட்டு விடுதலைக்காகச் சிறை சென்ற தம் மக்களைக் கண்டு மகிழும் வகையில் பாடப்பட்டுள்ளது. பாரதியைப் போன்று கவிஞர் பாரதத்தாயைத் தெய்வமாகக் காட்டவில்லை என்றாலும் அவளின் மனநிலையை வெளிப்படுத்துவதன் வாயிலாக வீரத்தை உணர்த்துகின்றார். தாயின் மனநிலையில் இருந்தே பாடுவதை இப்பாடல் உறுதி செய்கின்றது.

பாரதியினைப் புகழ்ந்து பாடுவதாக அமைந்த பாடல் ஒன்றில் இந்தியத் தாயின் மன உறுதியினை வெளிப்படுத்துகின்றார். இது பாரதியின் மனநிலையை ஒட்டிப் பாடுவதால் விளைந்ததாகும்.

*அச்சமிகும் பேடிமையின் அடிமை வாழ்வில்*
*அடங்கியிருந்த நம்மறந்த தமிழர் நாட்டைப்*
*பச்சைமரத் தாணியெனப் பதியும் சொல்லால்*
*பாட்டிசைத்துப் பாலர்களும் நிமிர்ந்து நின்று*
*நிச்சயமெத் தாய்நாட்டின் அடிமை வாழ்வை*
*நீக்காமல் விடுவதில்லை யெனமுன் வந்து*
*துச்சமெனச் சுகத்தை யெல்லாம் துறந்துநிற்கத்*
*தூண்டியது பாரதியின் சொல்லே யாகும்*
*(நா.க.ப.ப.65)*

விழிப்புணர்வு இல்லா ஏழைக் கிழவனாயினும் பாரதியின் பாட்டைக் கேட்பானாகில் துடித்தெழுவான் என்றும் தம் பாடலில் (பாரதி பாட்டு) கூறுவதிலிருந்து இளைஞனுக்கு மட்டுமின்றி வயதில் முதிர்ந்தவருக்கும் அடிமை வாழ்வை அகற்ற வேண்டும் என்னும் எண்ணம் தோன்றும் என்னும் கருத்தினை வெளிப்படுத்துகின்றார். இதில் கவிஞரின் தேசப்பற்று மட்டுமின்றித் தேசியக் கவிஞரின் மீது கொண்ட மதிப்பும் புலப்படுகின்றது.

வீரம் மிக்கவளாக விளங்கும் இந்தியத் தாய்க்குச் சுதந்திரம் வரப்போகிறது என்னும் கருத்தமைந்த பாடல் ஒன்றினைப்

பாடியுள்ளார். தாய் தன் சோகத்திலிருந்து மெல்ல விடுபட்டு மகிழப் போகிறாள் என எண்ணுகிறபோதே ஏற்படுகிற மகிழ்ச்சி அவர் பாடலில் அப்படியே கொப்பளிக்கிறது.

அடிமை கொடுத்த இருள் அகன்றிடப் போகுது
ஆசைப்ப டிநடக்க வெளிச்சமும் ஆகுது
கொடுமை விலங்கினங்கள் குகைகளுக் கோடிடும்
கொஞ்சும் பறவைக் குலம் வானத்தின் பாடிடும்
(நா.க.பா.ப.337)

மேலும் சுதந்திரத்தின் இன்றியமையாமையைப் பற்றிப் பாடிய பாடல் குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் நிலையில் நின்று பாடிய பாடல் இது.

இச்சை போல இருந்து வாழ
ஈப்புழு எறும்பும் கோரும்
உச்சமாம் மனித ஜென்மம்
சுதந்திர உணர்ச்சி யின்றி
நச்செனும் அடிமை வாழ்மை
நயந்திட ஞாய முண்டோ?
நிச்சய சபதம் பூண்டு
சுதந்தரம் நிலைக்கச் செய்வோம் (நா.க.பா.ப.76)

தன்னிச்சைப் படி வாழச் சுதந்திரம் வேண்டும். ஈ, புழு, எறும்பு கூடத் தன் விருப்புடன் வாழும். ஆறறிவு கொண்ட மனிதன் அடிமை வாழ்வு வாழலாமா? என்று வினவுவது போன்று சுதந்திரத் தாகத்தை மக்களிடையே தம் பாடல் வழி ஏற்படுத்துகின்றார். 'சுதந்திரச் சபதம்' என்னும் வாழ்வின் அடிப்படையாக அமையும் சிந்தனை, செயல்களைக் கூறுகின்றது.

கதரும் ராட்டையும் கண்களாம் நமக்குக்
கருதிடில் நிர்மாணக் கணக்கில்;
எதிலும் சுகமிலா ஏழைக் கிராமம்
ஏழு நூறாயிரம், அவற்றில்
பதிலும் பேசிடாப் பாமர மக்களின்
பட்டினிக் கொடுமையை மாற்றக்
கதியதாய் அவருக்குப் புத்துயிர் கொடுக்கக்
கைத்தொழில் ராட்டையும் கதராம்
(நா.க.பா.ப.90)

கிராமங்களே இந்தியாவில் மிகுதி. அங்கு வாழ்வோர் அடிப்படை வசதியின்றி, மகிழ்வின்றித் தம்குறையைப் பேசா மனநிலையினராய்ப் பட்டினி கிடந்துவாடுகின்றனர். அவர் தம்

பொருளாதாரம் மேம்படக் கைத்தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்று காந்தி வழியில் நின்று சிந்தித்து உரைக்கின்றார்.

மேலும் இப்பாடலில் தேச ஒற்றுமை உணர்வை உணர முடிகின்றது. 'இளந்தமிழருக்கு' என்னும் பாடலிலும் ஒற்றுமையின் இன்றியமையாமையைக் காணலாம்.

**செண்டெழுந்தா லென்னப் பாய்ந்து**
**தேசமுற்றும் சுற்றி நீ**
**தீரவீரம் நம்முள் மீளச்**
**சேருமாறு சேவை செய்**
**அன்பினோடு அறிவுசேர்ந்த**
**ஆண்மை வேண்டும் நாட்டிலே**
**அச்சமற்ற தூய வாழ்வின்**
**ஆற்றல் வேண்டும் வீட்டிலே**
**இன்பமான வார்த்தை பேசி**
**ஏழை மக்கள் யாவரும்**
**எம்முடன் பிறந்த பேர்கள்**
**என்ற எண்ணம் வேண்டும்** **(நா.க.பா.ப.25)**

இவ்வாறு நாமக்கல் கவிஞர் அடிமையுற்ற இந்தியத் தாய் வருந்தியதையும் விடுதலை உணர்வு வேண்டி மக்கள் வீறுகொண்டெழுந்து சிறை செல்லும் போது மகிழ்வுற்றதையும் தமிழனுக்கு ஒற்றுமை உணர்வு வேண்டும் என்று சிந்தித்ததையும் பாடல்களாக்கியுள்ளார்.

### பாரதத்தின் பெருமை

இந்தியத் தாயின் பெருமையைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். பாரதியார் இந்தியத் தாயைப் பாடும்போது தமக்கும் நாட்டிற்கும் பாரம்பரிய உறவு இருந்து வருவதைப் பாடியுள்ளார்.

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே – அவர்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே**

**(பாரதியார் கவிதைகள், ப.18)**

பாரதியின் தாக்கம் நாமக்கல் கவிஞரிடம் அதிகம் காணப்பட்டது. சான்றாக மேற்குறிப்பிட்ட பாடலினைப் போன்றே கவிஞரும் நாட்டிற்கும் தமக்கும் பாரம்பரிய உறவு இருந்து வருகின்றமையைப் பாடுகின்றார்.

இந்திய நாடிது என்னுடை நாடே
என்று தினந்தினம் நீயதைப் பாடு;
பாரத நாடென்றன் பாட்டன்றன் சொத்து;
பட்டயத்துக் கென்ன வீண்பஞ்சாயத்து;
முத்தமிழ் நாடென்றன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக் கெனப் பாடு
(நா.க.பா. ப.116-117)

என்று நாட்டின் உறவைக் கூறுவதன் வழியாகச் சுதந்திர உணர்வை எழுப்புகின்றார். அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேயருக்கு அடிமைப்படுவதன் விசித்திரத்தையும் இந்த நாட்டின் அனைத்து உரிமையும் இந்திய மக்களுக்கே உரியன என்றும் பாடியுள்ளார்.

அன்னியர்கள் நூல்கொடுத்து ஆடை கொடுத்து-நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப் பல காளைகள் நெய்ய-நாம்
காத்துக்கொள்வோம் மானமென்று (நா.க.பா.ப.141)

என்றும்,

சோறும் துணியும் யாரும் இனிமேல்
சுத்தமும் கைத்தொழில் பொருள் வாங்கக்
கூறும் சட்டக்கட்டளையின்றேல்
கொடுமையும் பஞ்சமும் குறையாது
பஞ்சம் குறைந்திட வஞ்சம் மறைந்திடப்
பட்டினி கிடப்பவர் இல்லாமல்
அஞ்சும்படிபல ஆயிரம் ஜனங்களை
ஆலையில் அடைப்பதை அளவாக்கும்
(நா.க.பா.ப.163)

என்றும் பாடிய பாடல்களின் வழி அடிமைகளையும் ஆள உரிமையிலாதார் ஆள்வதைச் சுட்டிக்காட்டினார். உரிமையுடைய நாம் உரிமையின்றிக் கிடக்கலாமா? என்று வினா எழுப்பிச் சிந்திக்க வைத்தார். விடுதலை உணர்வை எடுத்தியம்பினார். அனைத்துலகத்தில் சிறந்த நாடான இந்தியா வளமையும், பெருமையும் அழிந்து சீர்கெட்டு, அடிமையுற்றுக் கிடந்ததைக் கண்டு வருந்தினார். சுதேசியப் பொருள்களைப் பயன்படுத்துவதே தீர்வு என்பதை அறிவித்தார். ஆலையில் அளவாகப் பொருள் உற்பத்தி நிகழ வேண்டும் என்று தொலை நோக்குடன் சிந்தித்தார்.

தேசப் பாடல்களைப் பாடியதைப் போன்றே காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, திலகர், கோபால கிருஷ்ண கோகலே, சுப்பிரமணிய பாரதி முதலிய தேசியத் தலைவர்களைப் பற்றியும் பாடியுள்ளார்.

இந்திய நாடு சுதந்திரம் எய்த நல் தந்திரம் செய்த காந்தி மகானைப் போற்றினார். சிறு கந்தை உடுத்திய பக்கிரி என்று ஆங்கிலேயனால் ஏசப்பட்ட காந்தி என்னும் பெரியார் ஆயுத பலம் இல்லாவிட்டாலும் யாவரும் வணங்கும் படியான அன்பைப் பெருக்கினார். சற்றும் சாயுதல் செய்திடாத சத்திய மூர்த்தி தவமுனி நம் காந்தியடிகள் என்றார்.

**தீண்டப் படாதென்று மனிதரைச் சொல்வது**
**தீமையில் தீமையென்றே–அதைப்**
**பூண்டோடும் போக்க நாம் விரதம் புனைந்தது**
**புண்ணியர் காந்தியினால் . . . . .** *(நா.க.பா.ப. 32)*

என்னும் பாடலில் காந்தியடிகளின் பெருமையையும் சுதந்திரத்திற்குக் காந்தி கையாண்ட முறையின் சிறப்பினையும் கவிஞரின் அடிகளில் காணலாம்.

நித்தம் ஒரு காற்றினையே மூச்சு வாங்கி
நீர்நெருப்பு நிலம் வானில் புதிசுமின்றி
மெத்தவும் நாம் சலித்துவிட்டோம் என்பாயானால்
மேதினியில் வேறுவழி உண்டோ நெஞ்சே!
சத்தியஞ்சேர் சாந்திவழி அதையே நித்தம்
சாதிப்பான் காந்தியென்று சலிப்பாயானால்
பத்தியத்தைப் பாதியிலேயே முறித்தாற் போலப்
பாடுபட்டும் பயனடையாப் பதரே ஆவாய்
*(நா.க.பா.ப.36)*

காந்தி வழியில் செல்வதைத் தவிர வேறுவழியில்லை. அந்த வழியில் செல்லத் தொடங்கி இடையில் விரக்தியடையக் கூடாது. நாட்டு மருந்து உடனே பலனைத்தராது. அதற்காக, பொறுமையில்லாமல் பத்தியத்தை முறித்துவிட்டால் நோய் விரைந்து பரவும். அதுபோல் பாதிவழியில் காந்தியத்தைக் கைவிட்டால் நாடு விரைந்து சீரழியும். எனவே சலிப்பில்லாமல், பொறுமையுடன் உண்மையாய்க் காந்திவழி நடக்க வேண்டும் என்றார். முழுமையாக அவர் காந்திவழியை நம்பினார்; கடைப்பிடித்தார்; வெற்றிகண்டார் என்றே கூறவேண்டும்.

மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்று வீழ்த்தி மலை மலையாய்ப் பிணக்குவியல் குவித்ததாலே மன்னரெனப் பலர் வணங்கத் தருக்கி வாழ்ந்தோர், மாநிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம். ஆனால், ஜவஹர்லால் நேரு தன்னுயிரை மன்னுயிர்க்கே காணிக்கை ஆக்கினார். எளிய மக்கள் வாழ்க்கைக்கு ஆறுதலை அளித்து அவர்களை ஆண்மை கொள்ள வைத்தார் நேரு.

***கஞ்சியின்றி உயிர்தளர்ந்த ஏழை மக்கள்***
***காலில் வந்து விழுவதையே களிப்பாய் எண்ணி***
***பஞ்சணையில் படுத்திருந்தபடியே இந்தப்***
***பாரளிக்கும் மன்னவர்கள் பலரைப் பார்த்தோம்***
***தஞ்சமின்றித் தரித்திரத்தின் கொடுமை வாட்டத்***
***தாவித்துழலும் பலகோடி மக்கட் கெல்லாம்***
***அஞ்சலென்று மொழிகொணர்ந்து ஆண்மை யூட்டும்***
***அன்புருவாம் மன்னனெங்கள் ஜவஹர்லாலே***
*(நா.க.பா.ப.43)*

நேருவை ஆண்மைக்கு உருவமாகப் பார்க்கும் கவிஞர் ஆண்மைக்கு இலக்கணமாக,

***மிஞ்சாத கோபம் ஆண்மை***
***மிஞ்சினால் காத்தல் ஆண்மை***
***துஞ்சாத ஊக்கம் ஆண்மை***
***துன்பத்தில் துணையாம் ஆண்மை*** *(நா.க.பா.ப. 408)*

எனும் வரிகளை வழங்கியுள்ளார்.

தம் காலில் பலரும் விழவேண்டும் என்றிருந்த காலச் சூழலில் நேருபிரான் நேரில் சென்று ஆறுதலோடு எழுச்சி யூட்டியதை வரலாறு கூறும் 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்று முழங்கிய திலகரின் பெருமையைப் பகையெனச் சொல்லுவாரும் மெய்சிலிர்த்திடுவர். நகை முகங்கண்டபோதும் நடுங்குவார் வெள்ளைக்காரர்; என்று நேருவின் உருவத்தைப் புகழ்ந்தது போன்றே திலகரின் நகைமுகத்தைப் புகழ்ந்தார்.

சாதி மதப் பேதமெல்லாம் கடந்து நின்ற கோபாலகிருஷ்ண கோகலேயின் சிறப்புகளைக் கூறப்புகுந்த கவிஞர் அவரை ஒப்பற்ற பெருமை மிகுந்த குலத்துதித்த் தகைமை சான்றோம் என்று பாராட்டினார். உலகத்தில் உடன் பிறந்த உயிர்களெல்லாம் மெலிவின்றிப் பசி நீங்கிக் களிப்பது ஒன்றே ஊதியமாகும் எனக்கருதி உழைப்பதற்கே உடலோடு பொருள் ஆவி உதவி நின்றமையைப் போற்றினார். தம் நாட்டார் சுகமே தம் சுகம் என்றும் தம் நாட்டார் அறிவே தம் அறிவு என்றும் தம் நாட்டார் பெருமை தம் பெருமை என்றும் வாழ்ந்தவர் என எடுத்துரைத்து அவர் நாட்டுப்பற்றை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

வறுமையின் கொடுமையால் வாடிய பாரதியின் நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் கூறிக்கொண்டே இருக்கலாம். பாரதியின் பாட்டை நினைத்து விட்டால் சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும்; 'இந்தியன் நான்' என்னும் நல்ல இறுமாப்பு

உண்டாகும். மெச்சிடும் நம் தாய் நாட்டின் நாகரிகம் மேன்மையெல்லாம் விளங்கும் என்று உணர்ச்சி மிக்குற்றுப்பாடி அவர் உணர்ச்சியை நமக்குள்ளும் பாய்ச்சி நின்றார்

***பெண்ணுலகம் புதுமைப்பெறப் பழமை பேசிப்***
***பெருமை யவர் உரிமைகளைப் பெரிதும் போற்றி***
***மண்ணிலவர் இழிவு பெறச்செய்து வைத்தோர்***
***மடமைமிகும் கொடுமைகளை மறுத்துப் பாடிக்***
***கண்ணியத்தைப் பிற்காலக் கவிஞர் தம்முள்***
***காத்தது நம் பாரதியின் கவியே யாகும்***
***எண்ண எண்ணத் தமிழ்மொழிக்கோர் ஏற்றமாகும்***
***பாரதியின் திருநாமம் என்றும் வாழ்க***

***(நா.க.பா.ப.64)***

என்று சமகாலக் கவிஞரை மனந்திறந்து பாராட்டியவர் நம் கவிஞர். பாரதி பாடல் நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் ஏற்றம் என்று எடுத்துரைத்துப் பாரதியின் புகழை மேலும் புகழ்ந்து பாடியுள்ளார் கவிஞர்.

இவ்வாறு தேசியத் தலைவர்களின் பெருமையையும் அவர்கள் சுதந்திரத்திற்காக ஆற்றிய அளப்பரியத் தொண்டினையும் இசை நயத்துடனும், கவிதைப் பண்புகளுடனும் எடுத்தியம்பியுள்ளார். தேசப்பற்றினைப் போன்றே மொழிப் பற்றினையும் அதன் சிறப்புக்களையும் பாடல்களில் பாடிச் சுதந்திரத் தொண்டு செய்ததோடு மொழியின் இன்றியமையாமையையும் பாடிப் புரட்சி செய்துள்ளார்.

### தமிழுணர்வு

பழங்காலம் தொட்டே தமிழ்மொழி வளர்ச்சி பெற்ற மொழியாக இருந்தாலும், அந்நிய நாட்டவர் தமிழகத்தை ஆட்சி செய்த காலத்தில், அவர்கள் தங்கள் மொழியையே அரசு அலுவல்களுக்குப் பயன்படுத்தினர். அதனால் தமிழ்மொழி அரசியல் செல்வாக்கு இழந்தது. முதலில் சமஸ்கிருதம் அரசியல் செல்வாக்கால் தமிழை இறக்க முனைந்தது.

> பாரத நாட்டின் பொதுமொழியாய் - இந்து சமய மொழியாய்க் கலை மொழியாய்ப் பன்னூறாண்டுகளாகச் சமஸ்கிருதம் என்னும் வடமொழி ஆட்சி புரிந்தது

என்று மறை திருநாவுக்கரசு (மறைமலையடிகள் வரலாறு, ப.300) கூறுவது எண்ணிப் பார்க்கத்தக்கது.

> தமிழில் சங்கீதத்துக்கு வேண்டிய சாகித்தியம் இல்லை என்று கூறித் தெலுங்கில் அமைந்த கர்நாடக சங்கீதங்களைப் பாடுவதிலேயே சங்கீத வித்வான்கள் அதிகம் கவனம் செலுத்தி வந்தனர்

என்று நாமக்கல் கவிஞர் (இசைத் தமிழ், ப.84) குறிப்பிட்டுள்ளமையால் இசையையும், தமிழிலிருந்து பிரிக்க முயன்றமையைக் கவிஞர் உணர்ந்துள்ளார் என அறியமுடிகின்றது.

> நாட்டு மொழிகளோ அல்லது சமஸ்கிருதம், அரபு முதலியனவோ பயிற்றுமொழிக்குரிய தகுதியினைப் பெறவில்லை என்று எண்ணிய மெக்காலே ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று எண்ணினர். ஆங்கிலப் பண்பாட்டினைப் பரப்ப ஆங்கில மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினர்

என்னும் கருத்தும் சிந்திக்கத்தக்கது (எஸ். சந்தானம், கல்வி வரலாறு, ப.52). எல்லா மொழிகளும் தத்தம் செல்வாக்கால் தமிழ் நாட்டிலேயே தமிழை மறைக்க முயன்றமையை இக்கருத்துகள் உணர்த்துகின்றன. ஆங்கிலப் படிப்பைப் பெறுவதன் மூலம் நாம் தேசத்தை அடிமைப்படுத்திவிட்டோம் என்று கூறிக் காந்தியடிகள் பொதுமொழியாக இந்தியை வரவேற்றார். தாய்மொழியே பயிற்று மொழியாக வேண்டும் என்று கருதினார்.

கோயில் மொழியாகச் சமஸ்கிருதமும் கல்விமொழியாக ஆங்கிலமும் இசைமொழியாகத் தெலுங்கும் இருந்த காலத்தில் பொதுமொழியாக இந்தி இருக்க வேண்டும் என்னும் காங்கிரசின் மொழிக்கொள்கை தமிழுக்கு மேலும் சோதனையானது. காங்கிரசுக்கு எதிராக இயங்கிய கட்சிகள் இம்மொழிக் கொள்கையை எதிர்த்தன. இராஜாஜி இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய போது எதிர்க்கட்சியினர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். முதன் முதல் தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ் உணர்வு அதிகம் தோன்றக் காரணமாக இருந்தது.

நாமக்கல் கவிஞர் காங்கிரசு இயக்கத்தில் ஈடுபாடும் தமிழ்மொழி உணர்வில் பேரீடுபாடும் கொண்டவர். தாம் சார்ந்த இயக்கம் இந்தியைப் பொதுமொழியாக அறிவித்துவிட்டது; அவருடைய தமிழுணர்வோ, பாரதியைப் போன்று இயங்க வைத்தது. பாரதியிடம் கொண்ட நாட்டமும் நாட்டு விடுதலைக்கு உழைக்கும் காங்கிரசிடம் கொண்ட நாட்டமும் தமிழுணர்வை மிதவாதப் போக்கில் அவரை எடுத்துரைக்க வைத்தன.

**கவிஞரும் தமிழ் உணர்வும்**

தமிழ் மொழிப்பற்றினைப் பாடும் நாமக்கல் கவிஞரிடம் பிற மொழிகளை வெறுக்கும் பண்பு இல்லை. பிற மொழிகளை வெறுக்கும் பண்பு தமிழ் மொழியினைத் தாய்மொழியாக உடையவர்களுக்கு இல்லை என்றும் எண்ணினார். அவர் பாடல் இவ்வாறு எண்ண வைக்கின்றது.

**தமிழன் என்றோர் இனமுண்டு;**
**தனியே அவற்கொரு குணமுண்டு;**
**அமிழ்தம் அவனுடை மொழியாகும்;**
**அன்பே அவனுடை வழியாகும்; (நா.க.பா.ப.21)**

தமிழ் மொழியினைப் பலவாறு பாடும் பாரதியிடம் காணப்படும் பிறமொழி வெறுப்பற்ற தமிழ்ப்பற்றே நாமக்கல் கவிஞரிடமும் காணமுடிகின்றது. மொழிப்பற்றுதான் தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படைக்காரணம் என்பதை உணர்ந்து நாமக்கல் கவிஞர் மொழிப்பற்றினை வற்புறுத்தினார். ஆங்கில மோகம் கொண்டு, தாய்மொழிப்பற்றின்றித் திரிந்தவர்களால் தான் தமிழ் வளர்ச்சி தடையுற்றது என்பதை உணர்ந்து, அவர்களைக் கடுமையாகச் சாடினார்.

தம் மொழியினை அறியாதிருப்பது பெருமை என்று எண்ணும் தமிழைத் தாய் மொழியாக உடையவரைப் பேய் மக்கள் என்றார். பிறமொழியினை விரும்புவர்களை மனைவியை மறந்து வேசியரை நாடிச் செல்லும் பாதகருக்கு ஒப்பிட்டார்.

ஆங்கிலேயர் நாட்டை அடிமைப்படுத்தியது போன்று மொழியினையும் அடிமைப்படுத்தியமையை நாமக்கல் கவிஞர் விளக்கியுள்ளார். நாடு விடுதலை பெற விடுதலை இயக்கப் பாடல்கள் பாடியது போன்று தமிழ் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறத் தமிழுணர்வுப் பாடல்களையும் பாடியுள்ளார். எனவே தான், ஆங்கிலக் கல்வியின் ஆதிக்கத்தையும், ஆங்கில மோகத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றார். விடுதலை இயக்கப் பாடல்களில் இல்லாத கடுமை தமிழுணர்வுப் பாடல்களில் உள்ளது. நாமக்கல் கவிஞர் ஆங்கில மொழியைத் தமிழுக்கு இடையூறாகக் கருதினார். அவர்காலச் சூழலில் ஆங்கிலத்தின் மேலாதிக்கத்தினால் தமிழின் தகுதி இறங்கியதால் முதலில் சமஸ்கிருதம், இந்தியை விட ஆங்கிலமே எதிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதினார்.

நாமக்கல் கவிஞர் பால், தேன் அமுதத்தைக் காட்டிலும் தமிழே சிறந்தது; இலக்கண, இலக்கியச் சிறப்பு மிக்கது என்றார். உலகிலுள்ள அறவினையெல்லாம் நிரம்பப் பெற்றதாகக் கருதினார்.

சிறப்புடன் அழியாது நிலைத்து இருக்கக் கூடியது தமிழ்மொழி என்பதனையும் உணர்த்தினார். தமிழை 'ஆலமரத்திற்கு' ஒப்பிட்டுக்கூறி மகிழ்ந்தார்.

எல்லா மொழிகளின் அறிவுத் தொகைக்குத் 'தமிழ்' என்று பெயர் என்பது நாமக்கல் கவிஞர் தம் கருத்து. அன்பும் அறனும் தமிழால் வளரும்; அச்சத்தை நீக்குவது தமிழ், முன்னோர் நன்னெறியினைக் காட்டும் தமிழ். உலக மக்கள் யாவரையும் தம்முயிராக நினைக்கும் பண்புடையது என்று பலவாறு தமிழின் சிறப்பினைக் கூறினார். தமிழைத் தெய்வமாகவே கருதினார்.

**நிறைவுற்ற அருள்கொண்ட**
**நிகரற்ற தெய்வம்**
**கலைமிக்க தமிழன்னை** **(நா.க.பா. ப.33)**

என்றார். தமிழைத் தெய்வமாகக் கூறியதற்கு ஏற்ப, 'சக்தி கொடுப்பவள் தமிழ்த் தாய்', 'பக்தி நிறைந்தவள் தமிழ்த்தாய்' 'தவநெறியினை உடைய தமிழ்', 'அறமோதும் தமிழ்', 'ஞானத்தைத் தரும் தமிழ்', 'உயிர்க்கு உணர்வுதரும் மொழி', 'தென்புதந்து தெளிவு சொல்லும் தெய்வமெங்கள் தமிழ்' என்று நாமக்கல் கவிஞர் தமிழின் தெய்வச் சிறப்பினை எடுத்துக் கூறியுள்ளார்.

## தமிழ் வளர்வதற்குரிய வழிகள்

தமிழ் மொழிக்குச் செய்யும் தொண்டினை உணர்த்தியுள்ளார் கவிஞர். எல்லா நாட்டின் அறிவினையும் தமிழ் மொழியில் கொண்டு வந்து சேர்ப்பதே தமிழ்ச்சேவை என்றார். 'பிறநாட்டுச் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று கூறிய பாரதியின் கருத்தே இவரும் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

தமிழ்மொழி வளர்ச்சியினைப் பற்றிய எண்ணம் என்றும் இருத்தல் வேண்டும். அந்நியர் அறிவைத் தமிழில் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். பிறமொழிப் பதங்களைத் தமிழில் இணைக்க வேண்டும். தொழில் அறிவு தமிழில் நிரப்பும்படிச் செய்ய வேண்டும் என்று தமிழ் வளர்ப்பதற்குரிய வழிகளைக் காட்டினார் நாமக்கல் கவிஞர். தமிழை வளர்ப்பதற்குரிய வழிகளை ஆராய்ந்ததோடு தமிழுக்கு இருக்கும் சிறப்புகளை, தமிழர் தம் பழந்தமிழ் நெறியினைப் போற்ற வேண்டும் என்றார்.

- தமிழ் மொழியின் அருட்குணத்தைக் காப்பாற்ற வேண்டும்.

- நமது முன்னோர்களின் நன்னெறியினைப் பழித்துப் பேசுவது தமிழ் வளர்ச்சியினைத் தடை செய்வதற்குச் சமமாகக் கருதப்படுவதால், முன்னோர்களின் நன்னெறியினைப் பழித்தலை அக்ற்ற வேண்டும்.
- தமிழ் இலக்கியங்களை இகழும் பண்பு நீங்க வேண்டும்.
- கோயில்களின் பெரும் பயனைத் குறைத்துப் பேசுவது நீக்கப்பட வேண்டும்.
- துறவு மனப்பான்மையினைக் கிண்டல் செய்யும் போக்கினை நீக்க வேண்டும்.
- மூவேந்தர் பரம்பரையும், அமைச்சர்களும், சொந்தபுத்தி இல்லாத வீணர் என்று கூறும் வம்புப் பேச்சுக்கள் நீங்க வேண்டும்.
- முதுமொழிகள் யாவும் மூடபக்திக்கு வழிவகுக்கும் என்னும் எண்ணம் மாற வேண்டும்.
- அப்போதுதான் தமிழ்மொழி வளர்ச்சிபெறும் என்றார் நாமக்கல் கவிஞர்.

நாமக்கல் கவிஞர் ஐம்பதாண்டுகட்கு முன்பே கண்டறிந்து கூறியனவற்றை இன்று எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. ஒருபக்கம் செம்மொழியாகப் போற்றும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கிற சூழலில் மறுபக்கம் கவிஞர் சொன்ன குறைதனை நீக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறைசொல்லும் மனப்பான்மையைக் குறைக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நல்லனவற்றைத் தேடும் எண்ணத்தை வலுவாக்க வேண்டும்.

மேலும் கவிஞர் தமிழ்மொழி மீது ஆராக் காதல் கொண்டு பாடல்களைப் பாடியதைப் போன்று தமிழ் வளர்த்த பெருமக்களையும் சிறப்பித்தும் பாடல்களைப் பாடியுள்ளார். தமிழ் வளர்ச்சியில் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பொறுப்பு உண்டு என்பதை உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கவிஞரிடம் மொழிவெறியில்லை. ஆனால் மொழிப்பற்று உண்டு. அதனையே வற்புறுத்தவும் செய்தார். தமிழ் மொழியினைத் தெய்வ மொழியாகக் கருதுபவர். அதனால் மெய்ஞ்ஞான அறிவு நிரம்பப் பெற்றதாகவும் தமிழ் விளங்குகின்றது என்றார். தமிழ் மொழியில் அனைத்து அறிவும் சிறக்கச் செய்வது தமிழர் கடமை என்னும் விழிப்புணர்வையும் ஊட்டினார்.

### நாமக்கல் கவிஞரின் கவித்திறன்

கவிதைக்குக் கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகியவை இன்றியமையாதன. உணர்ச்சியும் கற்பனையும் கவிதைக்கு அழகு சேர்க்கும் உத்திகள் ஆகும். கற்பனையில்லாத யாப்பு உறுப்புகளையுடைய சொற்கட்டுகள் மட்டும் கவிதையாகாது என்பது நாமக்கல் கவிஞரின் கருத்து ஆகும்.

புறக் கற்பனைகள் சிறந்த அணிநலன்கள் தோன்றக் காரணமாக உள்ளன என்று திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். கவிஞரால் புதுமையாகப் படைக்கப்படும் இரண்டு வகை, உருவங்கள் கற்பனையின் பாற்படும் என்கிறார் தா.ஏ. ஞானமூர்த்தி (இலக்கியத் திறனாய்வியல்; ப.158) வருணனையும் கவிஞரின் கற்பனை ஆற்றலில் பிறக்கும் உத்தியே ஆகும்.

### வருணனை

கவிஞன், தான் நேரில் கண்டவற்றிற்கும், கற்பனை செய்தவற்றிற்கும் வடிவம் கொடுத்து வருணிக்கும் போது வருணனை உத்தி வெளிப்படுகின்றது.

கவிஞரின் அறிவுத் திறத்திற்கும், இலக்கிய இரசனைக்கும் ஏற்ப வடிவம் கொள்ளும் வருணனை, நாமக்கல் கவிஞர் கதையில் எங்ஙனம் பயன் படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்குக் காணலாம். தேசிய விடுதலை முக்கியமாகக் கருதப்பட்ட காலத்தில் வாழ்ந்த நாமக்கல் கவிஞர் வருணனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சில பாடல்களில் வருணனைகளையும் பயன்படுத்தியுள்ளார். அவற்றினை இங்குக் காணலாம்.

### இயற்கை வருணனை

எந்த இலக்கியங்களை எடுத்துக் கொண்டாலும் அதில் வருணனைக்குக் குறைவே இல்லை. அதிலும் இயற்கையைப் பாடாத கவிதைகள் சற்றுக் குறைவே எனலாம். தமிழ்ப் புலவர்கள் இயற்கையில் கண்டதை உள்ளது உள்ளபடியே பாடினார்கள். அங்ஙனம் பாடும் போதே அவர்கள் மக்களின் வாழ்க்கையுள் கலந்து ஒன்றிய இயற்கையினையும் பாடினர். எனவே, மானிட உலகையும் இயற்கையுலகையும் சேர்த்தே பாடினர்.

இயற்கை வருணைனையில் ஈடுபாடு கொண்ட தமிழ்க் கவிஞர் மரபில் வந்த நாமக்கல் கவிஞரும் தம் கவிதைகளில் இயற்கை வருணனைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

**உழவும் தொழிலும் இசைபாடும்;**
**உண்மை; சரித்திரம் அசைபோடும்**
**இழவில் அழுதிடும் பெண்கூட**
**இசையோ டழுவது கண்கூடு** (த.இ. ப.8)

யாழ், குழல், நாதசுரம், தண்ணுமை முதலா இசைக்கருவிகள் மட்டும் இசையை எழுப்புவதில்லை. உழவுத் தொழிலும், இசைபாடும் என்றும் அழும் பெண் கூட இசையொடு அழுவது என்றும் கூறும் போது கவிதை நயம் நயமுடன் வெளிப்படுவதையும், தமிழ் மீது கொண்ட பற்றும் தெளிவாக வெளிப்படுவது கண் கூடு.

இறைவன் உண்மையை மக்களிடம் வலியுறுத்த வேண்டிய காலத்தில் வாழ்ந்த நாமக்கல் கவிஞர் இயற்கை வருணனையில் இறைமைத் தத்துவத்தைக் காட்டுகின்றார்.

**யாகங்கள் முயன்றதும் யோகங்கள் பயின்றதும்**
**மோகங்கள் விடுத்த முனிவரர் பற்பலர்**
**சாகங்களைப் புசித்துத் தவங்கிடந் துழன்றதும்**
**ஆகமம் பற்பலவும் அலைந்ததும் இதற்கே** (த.இ. ப.38)

கவிஞரின் கவிதைகள் இனிமையும், எளிமையும் வாய்ந்தவைகளாக இருந்ததுடன் இதயப்பூர்வமான உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதாகவும் இருந்தன.

**யானோ சண்டாளன் !சரி**
**தானோ உங்களுக்கு**
**தாயை இகழ்ந்தவன் சண்டாளன்;**
**தந்தையை நொந்தவன் சண்டாளன்**
**கூலியை மறைத்தவன் சண்டாளன்;**
**கோள்சொல்லிப் பிழைப்பவன் சண்டாளன்;**
(த.இ.ப. 112)

இக்கவிதையை இராஜாஜி அவர்கள் வாயாரப் புகழ்ந்துள்ளார். மக்கள் அவருடைய கவிதைகளில் மூழ்கித் திளைத்து, அவரை மேன்மேலும் உற்சாகப்படுத்த வேண்டுமென்று அவர் தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். உப்புச் சத்தியாகிரகத்தின் போது கவிஞரால் பாடப்பெற்ற

**கத்தியின்றி ரத்தமின்றி**
**யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை**
**நம்பும் யாரும் சேருவீர்** (த.இ.ப.5)

என்றும்,

*சத்தியம் நிலைக்குமென்று சங்கூதுவோம்*
*சாந்தமே ஜெயிக்குமென்று சங்கூதுவோம்*
*நித்தியம் கடவுளென்று சங்கூதுவோம்*
*நீர்க்குமிழியாம் வாழ்க்கையென்று சங்கூதுவோம்*
*(த.இ.ப.101)*

இவ்வாறு கவிஞரால் பாடப்பெற்ற கவிதைகள் பல அவர் வாழ்ந்த காலத்திலேயே பொதுமக்களின் அமோகமான ஆதரவைப் பெற்றன.

இயற்கையைப் பாடியதைப் போன்றே காதல் உணர்வினையும் கற்பனை நயம்படப் பாடித் தனக்கெனத் தனி இடத்தைப் பதிய வைத்திருக்கின்றார்.

*முருகனென்ற பெயர் சொன்னால்-தோழி!*
*உருகு தெந்தனுளம் என்னே*
*பெருகி நீர்விழிகள் சோர-மனம்*
*பித்துகொள்ளுது உள்ளூர*

*கந்தனென்று சொல்லும் முன்னே-என்*
*சிந்தை துள்ளுவது என்னே*
*உந்தும் பேச்சுரைகள் ஊறி-வாய்*
*ஊமை யாகுதுளம் குளிர*

*வேலனென்ற பெயர் கேட்டு - ஏனோ*
*வேர்வை கொட்டுதுந்தன் பாட்டில்*
*காலனென்ற பயம் ஓடி-புது*
*களி சிறக்குதடி சேடி*

*குமரனென்ற ஒரு சத்தம் - கேட்டு*
*குளிர வந்ததடி சித்தம்*
*அமர வாழ்வுபெறல் ஆனேன்-இனி*
*அடிமை யார்க்குமிலை நானே* *(த.இ.ப.17)*

இப்பாடலின் வழியே காதலின் மென்மையும், காதல் வயப்பட்ட பெண்ணின் மனநிலையையும் படிப்போரின் மனக் கண்முன் கொண்டு-நிறுத்துகின்றார். இவை போன்று கவிஞர் சுதந்திரமின்றி அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டைப் பற்றிப் பாடும் போது, இந்திய நாட்டின் பழம் பெருமையினை வருணனை வாயிலாக வெளிப்படுத்துகின்றார். இவருடைய நாட்டு வருணனையில் சங்க இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றில் காணலாகும் வருணனைகளின் போக்கு காணப்படுகின்றது.

*மதவெறிக் கொடுமையை மாற்றும் உன் பொறுமை*
*மற்றவர் மதத்தையும் போற்றுமுன் பெருமை*

சதமெனும் சத்திய சாந்தியை உரைப்பாய்
சன்மார்க் கத்தவர் சிந்தையில் இருப்பாய் (த.இ.ப.74)

என்ற பாடலில் இந்தியத் தாயினைப் போற்றியும்,

ஏழை செல்வனேன் றெண்ணாது
எவருக் கும்குறை பண்ணாது
ஊழியனாகப் பணி செய்யும்
உலகுக் கெல்லாம் அணி செய்யும்
வாழியமக்கள் எல்லோரும்
வாழிய வென்றே அது கோரும் (த.இ.ப.78)

என்ற வரிகளில் சுதந்திரம் என்றால் என்ன? என்பதனையும், சுதந்திரம் பெறுவதால் நாம் அடையும் பயனை,

அன்பின் ஆண்மையும் ஆற்றலும் வளரும்
அன்னை பாரதத் தாய்மனம் குளிரும்
துன்பம் யாவையும் தொலைத்திட முடியும்
சோற்றுத் தரித்திர மாவது விடியும் (த.இ.ப.92)

ஆனால், சுதந்திரம் நமக்குச் சும்மா கிடைக்காது. இதனை

உழுது பயிரிடாமல் உணவுகள் கிடைக்குமா?
உழைப்பும் களைப்புமின்றி உரிமைகள் அடுக்குமா?
அழுது அழுதுருகி அன்பின் கண்ணீர் பெருக
ஆர்வத்தால் அனைவர்க்கும் சேவைகள் செய்யாமல்
(த.இ.ப. 93)

என்றும்,

வீரம் என்பது கொலையல்ல
வெற்றியும் அதனால் நிலையல்ல
தீரம் என்பது திடசாந்தம்
தெரிவிப் பதுநம் சித்தாந்தம் (த.இ.ப.98)

என்றும், நாட்டில் புரையோடிக் கிடந்த தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதனை,

நாய்குரங்கு பூனையை
நத்தி முத்த மிடுகிறோம்
நரகலுண்ணும் பன்றியும்
நம்மைத் தீண்ட ஒப்புவோம்
ஆயும் ஆறு அறிவுடை
ஆன்மஞான மனிதனை
அருகிலே வரப்பொறாமை
அறிவிலே பொருந்துமோ? (த.இ.ப.110)

இப்பாடல் அனைவராலும் மிகவும் புகழப்பட்டது. இவ்வாறு இந்திய நாட்டின் பழமையினையும், விடுதலையற்ற இந்தியாவின் இழிவினையும் காட்டி வருணிக்கும் நிலையையும் இவரது பாடல்களில் காணலாம். விடுதலை இயக்கக் காலத்தில் நாட்டு வருணனை மக்களிடம் சுதந்திர உணர்வினை ஊட்ட பயன் பட்டது.

**கவிஞரின் பாடல்களில் உவமைகள்**

உவமைகள் கவிதையை அழகுபடுத்துகின்றன. கவிஞனின் கற்பனைத் திறனை உயர்த்துதற்குப் பயன்படுகின்றன. இரண்டு பொருட்களை ஒப்புமைப் படுத்திக் கூறுவது உவமையாகும் என்று தொல்காப்பியரும் தண்டியலங்கார ஆசிரியரும் கூறுகின்றனர். கற்பனைக்கு அடிப்படை உத்தியாகிய, உவமையை நாமக்கல் கவிஞர் தம் கவிதைகளில் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதனை இங்குக் காணலாம்.

**'மான்' என அவளைச் சொன்னால்**
**மருளுதல் அவளுக் கில்லை**
**'மீன் விழி உடையா' ளென்றால்**
**மீனிலே கருமை இல்லை**
**'தேன்மொழிக் குவமை' சொன்னால்**
**தெவிட்டுதல் தேனுக் குண்டு**
**'கூன்பிறை நெற்றி' என்றால்**
**குறைமுகம் இருண்டு போகும்**
**'மயிலெனும் சாய' லென்றால்**
**தோகைபெண் மயிலுக் கில்லை**
**'குயிலெனும் குரலாள்' என்றால்**
**ஏழிசை குயிலுக் கில்லை**
**'வெயிலொளி மேனி' என்றால்**
**வெயிலிலே வெப்பம் உண்டு**
**'அயிலெனும் பார்வை' என்றால்**
**அழிவின்றி ஆக்கமில்லை** **(அவளும் அவனும்; ப.3)**

நாமக்கல்லாரின் புதினம் அவளும் அவனும். இப்புதினம் கவிதை நடையில் அமைந்துள்ளது. ஆயினும் எளிய நடையில் உள்ளது. இது ஒரு மர்ம புதினம் ஆகும். முதலில் விருத்தப்பாவில் எழுதத் தொடங்கிப் பின்னர் அகவற்பாவில் கொண்டு செல்கிறார். ஒரு பொருளுக்குப் பல உவமைகளைக் கூறும் திறம் நாமக்கல் கவிஞரின் கவிதைகளில் காணப்படுகின்றது. இவர் பாடிய பாடல்களில் சிறந்த உவமைகளும், சில இடங்களில் சிறப்பற்ற உவமைகளும் இடம் பெறுகின்றன. திலகர் இறந்த செய்தியினால்

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வினை வெளிப்படுத்த அவர் பாடிய பாடல் ஒன்று,

பகையென நினைத்த பேரும்
 பக்தியோ டஞ்சி நிற்பார்
மிகையெனச் சொல்லு வோரும்
 மெய்சிலிர்த் திடுவர் கண்டால்
நகைமுகங் கண்ட போதும்
 நடுங்குவார் வெள்ளைக்காரர்
தகையிவன் பிரிந்து போகத்
 தரிக்குமோ இந்த நாடு? (த.இ.ப.46)

என்றும்,

கருமமது செய்தல் வேண்டும்
 கலங்காது உழைத்தல் வேண்டும்
கண்ணபிரான் கீதையிலே
 சொன்ன மொழி கடைப்பிடித்த
பெருமை யுள்ள திலகரை நீ
 பிரித்தாயே யெம்மை விட்டு
பெம்மானே ஒரு வரம் நீ
 பிழையாது தருதல் வேண்டும்
தருமமது குறையும் போதும்
 தப்பிதங்கள் நிறையும் போதும்
தப்பாமலவத ரிப்பேன்
 தரணியில் நானென்றபடி
அருமறைகள் அறிய மாட்டா
 அரும்பொருளே வருதல் வேண்டும்
அன்புடன் நீ அப்போதும்
 திலகருரு அடைதல் வேண்டும் (த.இ.ப.49)

தலையிழந்த உடலுக்கும், அலையிழந்த கடலுக்கும், ஆட்டம் இழந்த பம்பரத்திற்கும், மழையிழந்த பயிருக்கும் மக்கள் உணர்வினை உவமையாகப் பாடியுள்ளார். கவிஞனின் உள்ள உணர்விற்கு ஏற்பவே இலக்கிய நயம் அமைகின்றது என்பதற்கு நாமக்கல் கவிஞர் சான்றாக விளங்குகின்றார். இலக்கிய வாதியாகவும், தேசியவாதியாகவும் கவிஞர் விளங்குவதால் உவமைகளைப் பயன்படுத்துவதில் ஒரு சிறந்த உவமையினையும் அடுத்து ஒரு சாதாரண உவமையையும் பயன்படுத்தும் உத்தியைப் பயன்படுத்துகின்றார். மேலும் இவர் இல்பொருள் உவமை, புராண உவமை, உணர்வு உவமை, செயல் உவமை, பழமொழி உவமை, கருத்து விளக்க உவமை, வேற்றுமை அணி, எடுத்துக்காட்டு உவமை,

உருவகம், குறியீடு போன்ற உத்திகளையும் பயன்படுத்திப் பாடியுள்ளார். எதுகை, மோனை அமைத்துப் பாடுவதிலும் சிறந்து விளங்குகின்றார். சான்றாக,

**நீண்டன கைகள்; ஆழ்ந்து**
**நிமிர்ந்தது அகன்ற மார்பு;**
**தீண்டிடக் கல்லைப் போலத்**
**திரண்டன இரண்டு தோளும்;**
**தூண் எனத் தோன்றும் கால்கள்**
**துணைதர நடக்கும் பாதம்;**
**ஆண்தகை முற்றும் தக்க**
**அளவொடு அமையப் பெற்றோன்** **(அ.அ.ப. 10)**

எனும் கவிதையில் எதுகை பயின்றுவந்ததோடு உவமையும் பயின்று வந்ததைக் காண முடிகின்றது.

**அசதியைக் கிள்ளி, அறிவைக் கிளப்பி**
**அலையும் மனத்தை அடக்கி நிறுத்தி** **(அ.அ.ப.42)**

என்னும் அடிகளில் மோனை நயம் பயின்று வந்ததை அறிய முடிகின்றது. கவிஞர் மரபு யாப்பிலக்கணங்களுக்கும், புதிய பாடல் வகைமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பாடியுள்ளார்.

இவருடைய கவிதைகளில் அடி எதுகையும், அடிமோனையும் அதிகம் காணப்படுகின்றன.

கவிஞரின் பாடல்களில் கற்பனைத் திறன் அளவாக அமைந்துள்ளது.

மிகையான கற்பனையோ, இயற்கை இறந்த நிகழ்ச்சிகளோ இவரது பாடல்களில் இல்லை. கருத்துக்களை விளக்குவதற்காகவே உவமை, உருவகம் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. காலத்திற்கேற்ற வகையில் சில புதுமையான உவமைகளையும், உருவகங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

உவமைகளையும், உருவகங்களையும் அடுக்கிக் கூறும்முறை இவரது பாடல்களில் காணப்படுகிறது. இவரது விடுதலை இயக்கப் பாடல்களில்தான் குறிப்புப்பொருள் அதிகமாக இடம் பெறுகின்றது.

**உரைநடைத் திறன்**

தமிழ் உரைநடையிலே முதன் முதலாக மறுமலர்ச்சி கண்டவர்கள் கிறித்துவ மிஷனரிகளும் விடுதலைப் பாசறையினரான தேசியவாதிகளுமே ஆவர். முன்னவர்,

ஐரோப்பியர்கள்; பின்னவர் நம்மவர்கள். இவர்களில், தமிழ் உரைநடையில் மறுமலர்ச்சிகாணும் முதல் முயற்சியை மேற் கொண்ட பெருமை கிறித்துவப் பாதிரிகளையே சாரும். தேசிய எழுச்சி கொஞ்சம் காலம் தாழ்ந்து தோன்றியதால், தமிழ் உரைநடையிலே மறுமலர்ச்சி காணும் பேற்றினைப் பெறுவதிலே நம்மவர்கள் பின்தங்கி விட்டனர்.

### கிறித்துவர்களின் உரைநடைப்பணி

இராமலிங்க சுவாமிகள், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மாயூரம் வேதநாயகனார் ஆகிய சான்றோர்கள் தமிழில் தனி உரைநடை நூல்களை இயற்றினர். இன்றைய உரைநடைக்கு அம்மூவருமே வழிகாட்டிகள் என்பது மொழி வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். இருப்பினும் அவர்கள் இத்துறையில் தனித்தனி நபர்களாக நின்றே பணியாற்றினர்.

கிறித்துவப் பாதிரிமார்கள் தாங்கள் மேற்கொண்ட சமயப் பிரச்சாரப் பணியின் பொருட்டுச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்களோடு தொடர்பு கொண்டு, அவர்களும் புரிந்து கொள்ளத்தக்க எளிய நடையில் சமயப் பிரச்சாரப் பிரசுரங்களையும், நூல்களையும் எழுதி வெளியிட்டனர். அவர்கள் கையாண்ட இந்த உத்திமுறை சாதாரண மக்களுக்கும், தமிழ் எழுத்தாளர்களுக்கும் இருந்த இடைவெளியைப் பெருமளவிற்குக் குறைத்தது. இருவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இந்த மகத்தான மாறுதலைச் செய்தவர்கள் பெஸ்கி, போப் போன்ற கிறித்துவப் பாதிரிமார்கள் ஆவார். இவர்கள் தமிழ்மொழி வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

உரைநடை வளர்ச்சியினையும், வாழ்வினையும் பெற்றது அவர்களால் எனலாம். தொல்காப்பியத்திலேயே உரைநடையைப் பற்றிக் குறிப்பினைக் காண்கின்றோம். உரைநடையும் செய்யுளும் கலந்த நூல்கள் அக்காலத்தில் எழுந்தன என்பது அக்குறிப்பாகும்.

**தொன்மை தானே**
**உரையொடுபுணர்ந்த பழமை மேற்றே** (தொல்.செய். 237)

இதனை 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று அக்காலத்தில் வழங்கினர். பெருந்தேவனாரின் பாரதமும், தகடூர் யாத்திரையும் இவற்றுக்குச் சான்றுகள் ஆகும். சிலப்பதிகாரத்தில் சில இடங்களில் உரைநடை விரவி வருவதைக் காணமுடிகின்றது.

**அங்கதம் முது சொலொ டவ்வேழ் நிலத்தும்**
**(தொல்.பொருள்.391)**

இந்நூற்பா, நூல் புணர்க்கும் முறை ஏழு பிரிவென்றும் அவற்றில் ஒன்று 'உரையாப்பு' வகை என்றும் கூறுகின்றது.

தமிழில் முதல் உரைநடை இறையனார் களவியலுரையில் காணப்படுகின்றது என்பர். அவ்வுரை சொல்லப்பட்ட காலம் 8ஆம் நூற்றாண்டு. அடுத்த நூற்றாண்டில்கூடச் சிறப்பான உரையோ உரைநடையோ எழவில்லை. உரைநடையின் மற்றொரு பகுதி கல்வெட்டு என்பர்.

கிறித்தவப் பாதிரிமார்களும், வள்ளலார், ஆறுமுக நாவலர் போன்ற சான்றோர்களும் இயற்றிய உரைநடை நூல்கள் பெரும்பாலும் சமயச் சார்புடையவை. சமயங் கடந்து முன்னேற்றத்திற்குப் பாடுபடும் பொது அறிவு நூல்களை அவர்கள் படைக்கவில்லை. அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் அத்தியாவசியத் தேவையாக அவர்களை விடுவிக்கும் புரட்சி இலக்கியங்கள் தேவையான ஒன்றாக இருந்தன. இத்தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில், ஆங்கில ஆட்சிக்குத் துணையான பாதிரிமார்களும் அரசியலுக்கு முற்றிலும் விலக்காக வாழ்ந்த வள்ளலார், நாவலர் போன்ற சான்றோர்களும் இருந்தனர். மக்களின் பொது அறிவை வளர்க்கவும், அரசியல் உணர்ச்சியை ஊட்டவும் தேவைப்பட்ட சமூக நூல்களை முதன் முதலாகத் தமிழ் உரைநடையிலே வழங்கிய பெருமை தேசியவாதிகளுக்கே உரிமையாகிவிட்டது எனலாம். இதில் யாருக்குமே கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

இவ்வாறு தேசிய இலக்கியங்கள் படைத்த எழுத்தாளர்களுக்கு அந்நிய ஆட்சியினர் இழைத்த கொடுமைகள் அளவிலடங்காதன. அபராதம், சிறைவாசம், நாடுகடத்தல் போன்றவற்றையெல்லாம் அவர்கள் பரிசாகப் பெற்றனர். இவ்வரும் பணியில் ஈடுபட்டவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் மகாகவி பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க. வ.உ. சிதம்பரனார், வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் ஏராளமான பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தினர். இவர்களில் பாரதியின் தாக்கத்தைப் பெற்று வந்தவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை. காலந்தோறும் தமிழ் வளர்ந்த வரலாற்றை விமர்சிப்போர் பெரும்பாலும் புலவர் பெருமக்களாகவே உள்ளனர். இவர்கள் பார்வையில் தேசிய வாதிகள் படைத்த மறுமலர்ச்சி உரைநடை தூய தமிழாகக் காட்சி தரவில்லை. அதனால் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் தேசியவாதிகள் தமிழ் உரை நடைக்கு ஆற்றிய பணி பெரும்

புலவர்களின் கவனத்தைக் கவரவில்லை எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் வாழ்ந்த இவர் எழுதிய உரைநடை நூல்கள் மக்கள் மத்தியில் பெருமதிப்பை அடைந்தன. இவரது உரைநடை நூல்களில் வரும் கதா பாத்திரங்கள் கற்பனையானவை என்றாலும் பொழுது போக்காக மக்கள் படித்து இன்புற வேண்டும் என்னும் நோக்கில் எழுதியிருப்பினும் மறைமுகமாக மக்களின் தேவையான ஒருசில படிப்பினைகளை இவை வெளிப்படுத்துகின்றன.

'மலைக்கள்ளன்' என்னும் இவரது புதினம் இவர் வேலூர் சிறையில் இருந்தபோது எழுதப்பட்டது. இஃது இவரது முதல் முயற்சி என்றாலும் அதிகார வர்க்கத்தால் (நிலப்பிரபுக்களால்) மக்கள் சுரண்டப்படுவதை இந்நூல் கருப்பொருளாகக் கொண்டு விளங்குகின்றது. இம்முயற்சி கவிஞருக்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தது. மக்களிடையே நல்வரவைப் பெற்று 1951இல் திரைப்படமாக எடுக்கப்பட்டது. கதாநாயகனாக (மலைக்கள்ளன்) மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் நடித்துள்ளார். இக்கதை இந்தியக் குடியரசுத் தலைவர் தேசிய விருதையும் பெற்ற பெருமைக்குரியது.

மர்ம நாவல் வகையைச் சார்ந்த இக்கதையில் வரும் மலைக்கள்ளன் யார் என்பது புரியாமலேயே இறுதிவரை கவிஞர் கதையை நடத்திச் செல்கின்றார். இதில் விவரிக்கப்படும் நிகழ்வுகள் படிப்பவரின் மனத்தில் ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் கதைக்களத்தையும் சூழலையும் அமைத்துச் செல்கின்றார். கதையின் ஆரம்பத்தில் கூறப்படும் 'மலைக்கள்ளன்' ஒரு பெரும் கொள்ளைக்காரனாகச் சித்திரிக்கப்படுகின்றான். ஆனால் அவன் செல்வந்தர்களிடமும், நிலப்பிரபுக்களிடமும் கொள்ளையிட்டு ஏழை, எளியவர்களுக்கு வழங்குகின்றான்.

அவரது காலத்தில் வாழ்ந்த 'கூழாங்காலனை'க் கொண்டு எழுதியிருக்கலாம் என்ற கருத்தை இவரது மூத்த மருமகன் இ.ர. அனுமந்தன் அவர்கள் 'நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை' எனும் நூலிலும், பிரிட்டனில் வாழ்ந்ததாகக் கூறப்படும் ராபின்ஹுட் (Robinhood) என்பவனை நினைவில் கொண்டும் எழுதியிருக்கலாம் என்று 'நாமக்கல் கவிஞரின் உரைநடைப் படைப்புகளில் காந்தியமும், தேசியமும்' என்ற நூலிலும் குறிப்பிடுகின்றார். இவர்கள் இருவருமே (கூழாங்காலன், ராபின்ஹுட்) பணக்காரர்களுக்கு எதிரிகள், ஏழைகளின் நண்பர்கள். இன்றைய கால வழக்குக்கு ஏற்பக் கூறுவதனால் 'நக்சலைட்டுகள்' (Naxalites) என்ற தீவிரவாத (Extremists) இனத்தைச் சேர்ந்தவர்கள்.

மலைக்கள்ளனைப் பிடிக்க அரசாங்கம் எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்களால் முடியவில்லை. மலைக்குகைகளில் ஒளிந்து கொண்டு வாழ்ந்ததனால் அவனை மலைக்கள்ளன் என்று யாவரும் அழைத்தனர்.

விஜயபுரி என்ற சிற்றூரில் அவன் அடிக்கடி தன் கை வரிசையைக் காட்டி வந்தான். அவ்வூரில் பெரும் செல்வம் மிக்க நிலக்கிழார்கள் இருந்தனர். அவர்களில் சிலர் ஏழைகளை ஏமாற்றியும், வருத்தியும் பொருள் சேர்த்தார்கள். இவ்வகைப்பட்ட கொடுமைக்காரர்களுக்கு ஒரு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தான். அநியாய வழியில் அவர்கள் ஈட்டிய பொருட்களைக் கொள்ளையடித்தான். அப்படிப்பட்ட சிலரைக் கடத்திச் சென்று மலைக்காடுகளில் சிறைவைத்தான். செல்வர்களால் கற்பழிக்கப்பட்ட பெண்களையும், துன்பத்திற்கு ஆட்படுத்தப்பட்ட பெண்களையும் சிறை செய்தும் அவர்களுக்கும் நன்மையையே செய்தான். ஆனால் மக்கள் அனைவரும் அவன் பெயரைச் சொன்னால் அழுத குழந்தைகூட வாய் மூடிக் கொள்ளும் என்னும் அளவிற்குப் பயங்கரவாதியாகத் திகழ்ந்தான்.

இக்கதையில் வரும் இன்னொரு கதாபாத்திரம் வீரராஜன். அவன் தான் இக்கதையில் வில்லனாக வரும் ஒரு பாத்திரம். வெளியில் பார்ப்பதற்கு கண்ணியம் மிக்க கனவான். கொடை வள்ளலாகக் காட்சியளித்தான். ஆனால் அவன் உள்ளுக்குள் மகா அயோக்கியன். அவனுடன் குட்டிப்பட்டி ஜமின்தார் என்ற ஆஷாடபூபதியும் சேர்ந்து கொண்டு காத்தவராயன் என்ற உண்மையான கொள்ளைக்காரனைப் பயன்படுத்தித் திருட்டு, கொலை, கொள்ளை, இளம்பெண்களைக் கடத்திக் கற்பழித்தல் போன்ற கொடூரங்களைச் செய்து ஏராளமான பொருள் சேர்த்தனர். காத்தவராயன் தன் எஜமானனுக்காக எந்தத் 'தீ'ச்செயலையும் செய்யும் தன்மை கொண்டவன். மலைக்கள்ளன் இவர்களது வீடுகளைத்தான் கொள்ளையடித்தான். வீரராஜன் ஒரு பெண்ணாசைக்காரன். அவன் காமக்கண்களில் இருந்து எந்தப் பெண்ணும் தப்பிவிட முடியாது.

விஜயபுரியில் வாழ்ந்த கண்ணியம் மிக்க கனவான் சொக்கேசர். இவருடைய மகள் பூங்கோதை. அழகே உருவாக, அன்பும், அறிவும் நிறைந்தவள். அவளை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்பது வீரராஜனின் பேராசை. முதலில் முறைப்படி பெண் கேட்டுச் சென்று, சொக்கேசர் பெண்ணின் விருப்பமே தன் விருப்பம் என்று கூறிப் பெண்ணிடம் கேட்டார். பூங்கோதை இல்லை என்று திட்டவட்டமாகக் கூறி, வீரராஜனின்

காமலீலையை எள்ளி நகையாடி அவனைத் தலைகுனிய வைத்து அனுப்பிவிடுகிறாள்.

அவளை எப்படியாவது அடைய வேண்டும் என்ற ஆசை கொண்டு அவளைக் கடத்திச் சென்று கற்பழிக்க முற்படும் போது மலைக்கள்ளன் வந்து அவளை மீட்டு மலைக்குகைக்குக் கொண்டு சென்று சிலநாள் கழித்துக் கொண்டு வந்து விடுகிறான். வீரராஜன் மீண்டும் 'ஜானகி' எனும் தனது வைப்பாட்டியின் துணை கொண்டு பூங்கோதையை நயவஞ்சமாகத் தனது மாளிகைக்கு அழைத்து வந்து கற்பழிக்க முயற்சி செய்யும் போது மீண்டும் மலைக்கள்ளன் வந்து காப்பாற்றி விடுகிறான். இவ்வாறு மும்முறை முயன்று தனது மகளையும் தன்னையும் காப்பாற்றியதற்காகச் சொக்கேசரும், பூங்கோதையும் மலைக்கள்ளனை வாயாரப் புகழ்ந்து விட்டு விருந்துக்கு அழைத்தனர். ஒப்புக்கொண்ட மலைக்கள்ளன், தனது நெருங்கிய நண்பரான முஸ்லீம் கனவான் ஒருவர் விருந்துக்கு வருவார் என்றும் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டால் தான் வருவதாகவும் விருப்பத்தைத் தெரிவித்தான். அவர் வருவதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று ஒப்புக்கொண்டனர்.

ஏனெனில் அந்த முஸ்லீம் கனவான் சிங்கப்பூரிலிருந்து வந்ததாகக் கூறிக் கொண்டு நெடுநாட்களாக அவ்வூரில் ஏழை மக்களுக்கு உதவி வாழ்ந்து வருபவர். காவல் துறையின் நண்பராகவும் நடந்து கொண்டார். மலைக்கள்ளன் தனது நண்பர் என்றும் இவ்வூரில் நடக்கும் கொலை கொள்ளை கற்பழிப்பு இவற்றிற்கு வீரராஜனும், குட்டிப்பட்டி ஜமீன்தாருமே காரணம் என்றும், அவர்களைக் கைது செய்தால் மலைக்கள்ளனைக் காவல் துறையினரிடம் ஒப்படைத்து விடுவதாகவும், அவன் கொள்ளை அடித்த பொருட்களையும் கொடுப்பதாகவும் வாக்கு கொடுத்திருந்தார். காவல் துறையினரும் வீரராஜனையும், ஜமீன்தாரையும் சிறையில் அடைத்தனர்.

சொக்கேசர் ஏற்பாடு செய்திருந்த விருந்துக்குப் போய் மறைந்திருந்து மலைக்கள்ளனைக் கைது செய்யக் காவலர் காத்திருந்தனர். விருந்துக்குச் சற்று முன்வந்த முஸ்லீம் கனவானை, சொக்கேசர் ஓடோடி வரவேற்றார். மலைக்கள்ளன் எப்போது வருவான் என்று வினவிய போது தான் இடும் நிபந்தனையை ஏற்றுக்கொண்டால்தான் அவன் வருவான் என்று கூறுகின்றார். அவர் கூறிய செய்தி கேட்டு சொக்கேசர் திகிலடைந்தார். கொள்ளைக்காரனுக்குத் தனது மகளை மனைவியாக்குவது என்பதை அவரது மனம் ஒப்பவில்லை. பின் முஸ்லீம் கனவான்

மலைக்கள்ளன் வரலாற்றைக் கூறலானார். பிறகுதான் தெரிந்தது அவன் அவரின் தங்கை மகன் குமாரவீரன் என்பவனே மலைக்கள்ளன் என்பது. முஸ்லீம் கனவானைச் சொக்கேசர் அப்படியே கட்டி அணைத்துக் கொண்டார். இந்நிகழ்வை ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்த பூங்கோதை தனது அத்தை மகன் மீது கட்டுக்கடங்கா காதல் கொண்டாள். விருந்து நடைபெறும் பந்தலில் சொக்கேசரும், பூங்கோதையும் காத்துக் கொண்டிருந்தனர். மலைக்கள்ளன் வரவில்லை. முஸ்லீம் கனவான் சிறிது நேரம் அளவளாவிய பூங்கோதையைப் பார்த்து வருவதாகக் கூறி அவளது அறைக்குச் சென்று அவளிடம் தன்னை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். இதைக் கண்ட பூங்கோதை திகைப்புற்று நின்றாள். அச் சமயம் அவர் தனது தாடி, மீசைகளைக் களைந்து தானே மலைக்கள்ளன் என்று கூறக் காதல் பெருக்கால் அவள் அவனை அணைத்துக் கொள்கிறாள். இந்நிகழ்வை அவளது அத்தை கண்டு வியப்படைந்து சொக்கேசரிடம் கூறுகின்றாள். அதிர்ச்சியடைந்த சொக்கேசர் அம்முஸ்லீம் கனவானைப் பலரறிய அவமானப் படுத்த வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கும் போது அவரே வேடத்தைக் களைத்து விட்டு தானே அவரது தங்கை மகன் என்று கூறிக் குமாரவீரனாக நின்றான்.

'மலைக்கள்ளன்' என்ற மாய மனிதனின் அச்சம் நீங்கப்பெற்று மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

இக்கதையின் வழி ஆசிரியர் வாசகர்களுக்குக் கூற வருவது புறத்தோற்றத்தைக் கண்டு நாம் மயங்கி விடக்கூடாது. 'வெளுத்ததெல்லாம் பால்' என்றும் 'மின்னுவது எல்லாம் பொன்' என்றும் நம்பிவிடக்கூடாது என்ற கருத்தினை வலியுறுத்துகின்றார். கண்ணியம் மிக்க கனவான்கள் போல் காணப்படுபவர்கள் யாரும் கண்ணியம் மிக்கவர்கள் அல்ல. அதே சமயம் கண்ணியம் இல்லாதவர்களும் அல்ல என்பதனையும் ஈவிரக்கமற்றவர்கள் போன்றும் முரட்டுக்குணம் உள்ளவர்கள் போன்றும் புறத்தில் காணப்படுபவர்கள் அனைவரும் தீயவர்களும் அல்ல. அதற்கென்று அவர்கள் நல்லவர்களும் அல்ல என்பதனை இக்கதையைப் படிப்பவர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

இருப்பவரிடமிருந்து எடுத்து இல்லாதவருக்குக் கொடுப்பதன் மூலம் கார்ல் மார்க்ஸின் 'பொதுவுடமை'க் கருத்தையும்,

திருமணத்திற்குப் பின் மலைக்கள்ளன் தன் மனைவியுடன் உரையாடிக் கொண்டிருக்கும் சூழலில் காந்திஜியின் அகிம்சைக் கொள்கையினையும் புகுத்தியுள்ளார். இறுதியில் மலைக்கள்ளன் திருக்குறள் மீது தனக்கிருந்த மதிப்பையும் மரியாதையையும்,

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கம் கடை** *(குறள். 328)*

இக்குறள் வழி ஒருவன் விரும்புகின்ற பெரிய குறிக்கோளை அடைய மக்களைக் கொன்று அடைவானாகில் அது சிறப்புத் தன்மையுடைய குறிக்கோள் ஆகாது என்று பூங்கோதையிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இக்கருத்தினை நோக்கும் போது காந்தியத் தாக்கம் இருப்பதை உணரமுடிகின்றது.

ஒரு முஸ்லீம் பாத்திரத்தை அமைத்து விஜயபுரியில் உள்ள பெரும்புள்ளிகள் எல்லோரும் சரிநிகர் சமானமாக அமர்ந்து விருந்து உண்டனர் என்று காட்சியை அமைத்ததிலிருந்து கவிஞர் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டவர் என்பதனையும், இந்து-முஸ்லீம் ஒற்றுமை இந்தியாவிற்கு இன்றியமையாத ஒன்று என்பதனையும், சமபந்தி போஜனத்தின் அவசியத்தையும் மறைமுகமாக வலியுறுத்துகின்றார்.

இயல், இசை, நாடகம் என்ற மூவகை இலக்கியத்திற்கும் தொண்டாற்றியுள்ள முத்தமிழ்க் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய 'மாமன்மகள்' எனும் நாடகநூல் உரைநடையில் அமைந்தது. இது அவரது இரண்டாவது நாடகம் ஆகும். 1924இல் 'அரவணை சுந்தரம்' என்ற நாடகம் இவர் எழுதிய முதல் நாடக நூலாகும். ஆரோக்கியம், சுகாதாரம் பற்றிப் பல அரிய கருத்துக்களை இந்நாடகம் அவர்களுக்கு வழங்கியது.

'மாமன் மகள்' எனும் நாடக நூல் வன்முறையில் நடத்தப்படும் புரட்சிகளால் ஏற்படுகின்ற தீமைகளை நன்கு எடுத்துரைக்கின்றது. வன்முறையற்ற தர்மகர்த்தா முறையின் அவசியம் நன்கு வற்புறுத்தப்பட்டுள்ளது. பணக்கார முதலாளிகள் தமது சொத்துக்களையும், தொழிலகங்களையும் ஏழைகளின் நன்மைக்காக நிர்வாகம் செய்யும் தர்மகர்த்தாக்களாகத் தங்களை எண்ணிக் கொள்ள வேண்டும். அளவுக்குமேல் சேருகிற பொருளை, ஏழைத் தொழிலாளிகளோடு அவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்துத்தான் கதையின் ஆணிவேராக உள்ளது.

நெல்லையப்பர் என்பவர் ஒரு பணக்கார மில் முதலாளி. ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டிச் சுரண்டியே அவர் பெரும் பொருளைக் குவித்தார். நெல்லையப்பரிடம் சுந்தரம் எனும் ஏழை இளைஞன் எழுத்தராக (clerk)ப் பணிபுரிந்து வந்தான். நெல்லையப்பரின் மகள் வசந்தாவிற்கும், சுந்தரத்திற்கும் இடையே நெருங்கிய நட்பு வளர்ந்து வந்தது. இதை கண்டு ஐயுற்ற நெல்லையப்பர் சுந்தரத்தை வேலையில் இருந்து நீக்கினார். எனினும்

சுந்தரம் நெல்லையப்பர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளவில்லை. அகிம்சை வழியில் அவரைத் திருத்தி, நல்லதொரு முதலாளியாக மாற்ற வேண்டும் என்பதே சுந்தரத்துடைய குறிக்கோளாக இருந்து வந்தது.

நெல்லையப்பருக்கு விரோதமாகத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து வேலை நிறுத்தம் முதலிய வன்முறைப் புரட்சிகளில் இறங்கவைக்க வீரப்பன் என்ற ஒரு பொதுவுடைமைவாதி முயற்சி செய்து கொண்டிருந்தான். சுந்தரம் அவனை அணுகி அகிம்சை வழியில் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தி அதன் மூலம் நெல்லையப்பர் மனத்தை மாற்றித் தொழிலாளர்களுக்கு நன்மை செய்து வைப்பது நல்லதொரு வழி என்று எடுத்துக்கூறினான். வீரப்பனும் அவனது கருத்தை ஏற்றுக் கொண்டான். ஆனால் அவனது கட்சியில் இருந்த தன்னலங்கொண்ட குண்டர்கள் நெல்லையப்பர் ஆலை மீது வன்முறைத் தாக்குதலை நடத்தி, அவரது மகளைக் கடத்திக்கொண்டு வந்துவிடவேண்டும் என்று திட்டமிட்டனர். ஆலையைத் தாக்குகிற சாக்கில், நெல்லையப்பரின் சொத்தையெல்லாம் சூறையாடித் தமக்குள் பிரித்து வைத்துக் கொள்ளவேண்டும் என்பதே அவர்களின் உண்மையான நோக்கமாக இருந்தது. அதன்படியே ஆலைக்குள் கத்தி கம்புகளுடன் ஓரிருவர் வந்து ஆலையைத் தாக்கினர். இதனை அறிந்த சுந்தரம் நெல்லையப்பர் வீட்டுக்குச் சென்று அவரையும், அவரது மகளையும் காப்பாற்ற உதவி செய்தான். இதனைக் கண்ட நெல்லையப்பர் நன்றி உணர்ச்சியால் உந்தப்பட்டுத் தனது மகளை சுந்தரத்திற்குத் திருமணம் செய்து வைக்க முற்படுகின்றார். ஆனால் வசந்தாவுக்கும், தனக்கும் உள்ள தொடர்பு தூய்மையான அன்பின் பாற்பட்டதே ஆகும் என்று கூறி அவளது உண்மைக் காதலனும், நெல்லையப்பரால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவிற்குச் சென்று மேற்படிப்புப் படித்துவந்த மோகனுக்கே மணம் முடித்து வைக்குமாறு சுந்தரம் நெல்லையப்பரிடம் கேட்டுக் கொள்கிறான்.

எல்லாரும் நினைத்தபடி வசந்தாவிற்கும், சுந்தரத்திற்கும் உள்ள அன்பு காதல் உணர்ச்சியின்பாற்பட்டதல்ல என்பதை யாவரும் அறிகின்றனர். தனது மகளைச் சுந்தரத்திற்குக் கொடுக்கலாம் எனத் தொடக்கத்தில் நினைத்திருந்த அவனுடைய சொந்த மாமனும், அவனை உள்ளூரக் காதலித்து வந்த மாமனின் மகளும் சுந்தரத்தின் மீது கொண்ட ஐயத்திலிருந்து விடுபட்டனர். சுந்தரம் தன் மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்ளுகின்றான்.

இரண்டு திருமணமும் நெல்லையப்பரின் சொந்தச் செலவில் அவர் வீட்டிலேயே நடைபெறுகின்றன. திருமண விழாவில் அவர்

ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிடுகிறார். தமது சொத்து முழுவதையும் தமது உறவினர்களுக்கும், ஆலையில் வேலை செய்த தொழிலாளர்களுக்குமாகப் பிரித்து எழுதிவிட்டதாகவும், இனி, தமக்கும் ஆலைக்கும் தொடர்பில்லை என்றும் கூறுவதிலிருந்து காந்தியடிகளால் போதிக்கப்பட்ட சர்வோதயக் கொள்கையைத் தாம் கடைப்பிடித்துள்ளதை அறியமுடிகின்றது. நெல்லையப்பரின் இந்த மனமாற்றத்திற்குக் காரணம் சுந்தரத்தின் அன்புடன் கூடிய அகிம்சையே. தன் கதையில் வெளிப்படுத்தியதன் வழியே காந்தியடிகளால் வலியுறுத்தப்பட்ட முக்கியக் கொள்கைகளில் ஒன்றான தர்மகர்த்தா முறையை இந்நாடகத்தின் மூலம் பொது மக்களுக்கு உணர்த்திய பெருமை கவிஞரையே சாரும்.

கவிஞர் கட்டுரைகள் எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். அவற்றில் சீரிய கருத்துக்கள் மிகுந்து காணப்படும். படிப்பதற்கு எளிமையான, சுவையான நடையில் அவை அமைந்திருந்தன. கவிஞரின் 'ஆரியமாவது; திராவிடமாவது" எனும் கட்டுரை குறித்து இங்குக் காணலாம்.

## ஆரியமாவது ; திராவிடமாவது

இதில் உள்ள கருத்துக்கள் சிந்தையைக் கிளரக்கூடிய முறையில் அவர் எழுதியுள்ளார். தமிழ் நாட்டில் வாழ்கின்ற பிராமணர்கள் யாவரும் 'ஆரியர்கள்' என்றும், பிராமணர் அல்லாதாரனைவரும் 'திராவிடர்கள்' என்றும் தமிழ்நாட்டில் உலவிவந்த ஒரு கருத்தை எள்ளி நகையாடுகின்றது. பிராமணர்களும், பிராமணர் அல்லாதவர்களும் ஆகிய இருசாராருமே தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்றும் பிராமணர்கள் யாவரும் வடக்கே இருந்து வந்தவர்கள் அல்லர் என்றும் வாதிடுகின்றார். அவருடைய கருத்தின்படி அவ்விருவரும் ஒரே இனத்தைச் சார்ந்தவர் என்பது ஆகும். எனினும் பண்பாட்டின் வழிப் பார்க்கும் போதுதான் பிராமணர்கள் ஏனையோரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றனர்.

வடமொழியை ஆழ்ந்து படித்து, அம்மொழியில் எழுதப்பட்டுள்ள சாத்திரங்களின்படி தங்கள் வாழ்க்கையைப் பிராமணர்கள் ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பதால் தான், தமிழ்மொழியை மட்டுமே படித்துத் தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் பிராமணர் அல்லாதாருக்கு அவர்கள் அந்நியர் போல் காணப்படுகின்றனர். இத்தகைய வேற்றுமை ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள் தமிழ்நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களே என்பது கவிஞரின் கருத்து. இடைக்காலத்திலே பெரும் கோயில்களைக் கட்டிய அம்மன்னர்கள்

அக்கோயில்களில் ஆகம முறைப்படி பூசை செய்வதற்குத் தக்க பூசாரிகள் கிடைக்காததால், பிராமணர்களைப் பிடித்து அவர்களுக்கு நிலங்களை இனாமாகக் கொடுத்தும், பல சலுகைகளை அளித்தும் வேதபாராயணம் செய்யவும் கோயில்களில் அவர்களை நியமித்தனர். தங்கள் தொழிலைச் செவ்வனே செய்யவேண்டி, எப்போதும் சமஸ்கிருத சாத்திரங்களையே ஓதிவந்த பிராமணர்கள், அச்சாத்திரங்களில் கூறப்பட்ட பண்பாட்டையே தங்கள் வாழ்க்கை நெறியாக அமைத்துக் கொண்டுவிட்டனர். அதனால் தமிழ்பேசும் சாதாரண மக்களுக்கும், பிராமணர்களுக்குமிடையே ஒரு வகையான வேறுபாடும், பிளவும் தோன்றலாயின என்பது கவிஞரது வாதமாகும். வடமொழிப் பண்பாட்டைப் பிராமணர்கள் வளர்த்துக் கொண்டிருந்த வேளையில், தமிழர்கள் தமிழ் இலக்கியத்தைப் படித்து அவ்விலக்கியத்தில் காணப்பட்ட தமிழ்ப் பண்பாட்டைத் தமது வாழ்க்கை நெறியாகக் கொண்டனர். அப்படி அவர்கள் கடைப்பிடித்த தமிழ்ப்பண்பாடும் கூட, முற்றிலும் தூய்மை வாய்ந்த தனிப்பண்பாடு என்று கூறிவிட முடியாது. ஏனெனில் ஏற்கெனவே சமஸ்கிருதப் பண்பாட்டில் காணப்பட்ட நற்கருத்துக்களையெல்லாம் தமிழர்கள் தமது தாய் மொழியில் புகுத்திவிட்டனர். எனவே தமிழ்ப்பண்பாடு என்பது பண்டைய தமிழ்ப்பண்பாடும் இடையில் தோன்றிய சமஸ்கிருதப் பண்பாடும் கலக்கப்பெற்ற ஒரு கலப்புப் பண்பாடாகவே காணப்பட்டது. இதுதான் ஆரியப்பண்பாடு, இதுதான் திராவிடப் பண்பாடு என்று பிரித்துப் பேசுவதில் பயனில்லை. பிராமணர்களும், பிராமணர் அல்லாதாரும் ஆரியர்கள், திராவிடர்கள் என்று கூறிக் கொள்வதில் பொருளே இல்லை. இருவருமே தமிழ்த் தாயின் மக்கள். அவர்கள் ஒருவரையொருவர் வெறுப்பதை விட்டு நேசத்துடன் சமாதானமாக வாழக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று கவிஞர் வேண்டுகோள் விடுக்கின்றார். வடமொழியில் ஓதப்படும் சதுர்வர்ண முறையில் உயர்வும் தாழ்வும் பிறப்பினால் மட்டுமே ஏற்படக்கூடியன. ஆனால் தமிழ் நூல்களின் கருத்துப்படி கல்வியும் ஒழுக்கமுமே ஒருவனுடைய உயர்வுக்கு காரணம். பிறப்பினால் மட்டுமே ஒருவனுக்கு உயர்வு தாழ்வு அமைந்து விடாது என்பது தமிழ் நூல்களின் திரண்ட கருத்து ஆகும் என்பதனைக் கவிஞரின் ஆரியமாவது, திராவிடமாவது எனும் கட்டுரை விவரிக்கின்றது.

**என்கதை**

என்கதை எனும் தன் வரலாற்று நூலை நோக்கும் போது சுயசரிதை எழுதுவதில் அவருக்கு நிகர் அவர் மட்டுமே என்றுதான் கூறவேண்டும். நாவல் அல்லது புதினம் போன்று படிப்பவருக்குச்

சலிப்பு ஏற்படாத வகையிலும் எழுதியுள்ளார். அவரது வாழ்வின் பல நிகழ்ச்சிகள் தனித்தனிக் கதைகளின் வடிவில் எடுத்துக் கூறப்பட்டன. அவ்வாறு கூறும்போது அவர் கால வரிசையைக் கடைப்பிடிக்கவில்லை. சலிப்பு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை யெல்லாம் சுவை தரக்கூடிய சில நிகழ்வுகளாக மட்டும் அவர் விரிவாக எடுத்துக்கூறியுள்ளார். 'வரலாற்றின் முக்கிய அடையாளமாவது அப்பழுக்கற்ற உண்மையைக் கூறுவதாகும்'. என்ற தாமஸ்கார்லைலின் கருத்து கவிஞரின் 'என்கதை'க்குப் பெரிதும் பொருந்துவதாகும். ஏனெனில் தமது நற்பண்புகளை மட்டுமே கூறாமல் தம்மிடம் காணப்பட்ட குறைகளையும் பலவீனங்களையும் கூட ஆங்காங்கே அவர் வெளியிட்டுள்ளார். சான்றாக, தமது முதல் மனைவியைத் தகாத முறையில் நடத்தி எவ்வாறு துன்புறுத்தினார் என்பதையும், புலால் உண்ணக் கூடாது என்பது எப்படி அவரால் காப்பாற்ற முடியாமல் போனது என்பது இப்படி சில நிகழ்வுகளை அவர் ஒளிவு மறைவு இன்றி எடுத்துக் கூறியுள்ளார். பணத்தைக் கையாள்வதிலும், சிக்கனமாக வாழ்வதிலும் தமக்கிருந்த பலவீனத்தையும், அதனால் அவர் பல துன்பங்களுக்கு எப்படி ஆளாக நேர்ந்தது என்பதையும் ஒப்புக் கொள்கிறார். இவை போன்ற நிகழ்வுகளை ஒப்பிடும் போது அவர் காந்திக்கு ஒப்பானவராக காணப்படுகின்றார்.

- நாமக்கல் கவிஞரின் தன்வரலாறு படித்து இன்புறுவதையே நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது.
- நீதிபோதனைக்கு இவருடைய தன் வரலாற்றில் இடமில்லை. நாமக்கல் கவிஞரின் வாழ்க்கை வரலாறு முழுமையாக இடம்பெறவில்லை.
- கதை கூறும் முறையில் வரலாற்றினைச் சுவையுடன் எழுதிச் செல்கின்றார்.
- கவிஞர் சார்ந்திருந்த கொள்கையின் தாக்கம் வெளிப்படுகின்றது.
- தன் சொந்த விருப்பிற்கு ஏற்பக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.
- தன் குடும்ப நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பொது நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார். கவிஞரின் என்கதை குறைபாடற்ற வாழ்க்கையினையே கூறுகின்றது.

### மொழிநடை

நாமக்கல் கவிஞரின் உரைநடை நூல்களில் காணப்படும் மொழிநடை இங்குக் காணப்படுகின்றது. தமிழகத்திற்குக் கவிதைகளால் அறிமுகமாகிய நாமக்கல் கவிஞர், உரைநடை நூல்களும் படைத்துள்ளமையைக் கண்டோம். கவிஞரின் கதையில் இலக்கியங்களுக்குரிய மொழிநடையைக் காணலாம்.

### கூற்று முறை

கவிஞர் தனது உரைநடை நூல்களில் தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் கூற்று முறைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

### தன்மைக்கூற்று

கவிஞர் 'சங்கிலிக்குறவன்', 'தாயார் கொடுத்த தனம்', 'தேசபக்தர் மூவர்', 'என்கதை' முதலிய நூல்களில் தன்மைக் கூற்று நிலையில் செய்திகளைக் கூறுகின்றார். இவையாவும் வாழ்க்கை அனுபவங்களை வெளிப்படுத்தும் நூல்களாக இருப்பதனால் தன்மைக் கூற்று முறையைப் பயன்படுத்தியுள்ளார்.

வாழ்க்கை வரலாறுகள் பிறரால் கூறப்படுவதைவிடச் சுயமாக எழுதப்படும் போதே அனுபவ வெளிப்பாடுகள் தெளிவாகப் புலப்படுவதற்குக் காரணத் தன்மை கூற்று உத்தி முறைகளேயாகும் என்று கூறுவர்.

கவிஞர் 'என்கதை' என்னும் நூலில் தம் வாழ்வில் நடந்த அனுபவங்கள் அனைத்தையும் அவரே கூறுவதாக அமைத்துள்ளார். அவரவர் அனுபவத்தை அவரவரே கூறினால் தான் சுவையாகவும், தெளிவாகவும் கூறமுடியும் என்பதை உணர்ந்து இந்நூலைப் படைத்துள்ளார். தன் சொந்த அனுபவங்களைத் தன்மைக் கூற்று முறையிலேயே அமைத்துள்ளார்.

சான்றாக, தன்னை அன்புடன் வளர்த்த முஸ்லீம் பெண்ணின் கதையைக் கூறும்போதும், தன்னுடன் தூய அன்பு கொண்டு பழகிய சீதாவின் நட்பினைக் கூறும் போதும் தன்மைக் கூற்றோடு, தன்னுணர்ச்சி வெளிப்படும் விதமும் விளங்கும்.

> என்னுடைய வாழ்க்கையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் இன்றைக்கும் கொஞ்சம் கூட மங்காமல் மறக்க முடியாமல் என் மனதில் பச்சைப்பசேலென்று இருந்து வருவது சீதாவின் மாசற்ற அன்பும் வெங்கடவரதனின் கம்பீரமான நட்பும் தான்

என்று தன்மைக் கூற்று உத்தியினைப் பயன்படுத்துகின்றார்.

முன்னிலைக்கூற்று

கருத்து விளக்க நூல்கள் யாவும் முன்னிலைக் கூற்றாக அமைந்துள்ளன.

கருத்துக்களை விளக்க முன்னிலைக் கூற்றுகளைப் பயன்படுத்துகின்றார். 'நாம் அறியாமலே நமக்குள் குமுறிக் கொண்டிருக்கும் உணர்ச்சிகளின் ஒரு சிறுபகுதியே இந்தத் தமிழிசை இயக்கம்' என்னும் முன்னிலைக் கூற்று எழுத்தாளனையும், வாசகனையும் இணைக்கும் கூற்றாக உள்ளது. இக்கூற்றின் வழியாக எழுத்தாளரின் உணர்வினை அனுபவிக்க வாசகனுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இம்முறையினையும் கவிஞர் தன் உரைநடையில் கையாண்டுள்ளார். சான்றாக 'மலைக் கள்ளன்' எனும் நாவலில்

> வீரராஜன், குட்டிபட்டி ஜமீன்தார் முதலிய செல்வந்தர்கள் காத்தவராயனைப் பயன்படுத்திப் பல கொள்ளைகளை நடத்தி, அவற்றில் பங்குபெற்று அதனால் மேலும் மேலும் செல்வந்தர்களாகிக் கொண்டு இருந்தவர்கள். காத்தவராயனுக்குக் கொள்கை எதுவும் இல்லை. தன் எஜமானர்களுக்காக அவன் எத்தகைய தீய செயல்களையும் செய்யத் துணிந்தவன். அறத்துக்குப் புறம்பான அவனது செயல்களை முறியடிப்பதையே மலைக்கள்ளன் தனது தொழிலாகக் கொண்டிருந்தான்.

இது முன்னிலைக் கூற்று உத்தி பயின்று வந்துள்ளமையை விளக்குகின்றது.

படர்க்கைக் கூற்றுமுறை

கவிஞர் அவர்கள் பெரும்பாலும் திறனாய்வு நூல்களில் படர்க்கைக் கூற்றுமுறையினைப் பயன்படுத்துகின்றார். திருவள்ளுவர் விவாதங்களை உண்டாக்கக் கூடிய வேதாந்த, சித்தாந்த சமய வாதங்களில் இறங்கவில்லை. வேதாந்திகளானாலும் சித்தாந்திகளானாலும், வெயிலில் நின்றும், மழையில் நனைந்தும், உண்டி சுருக்கியும், பனியில் விரைத்தும், இன்னும் இவை போன்ற மிகக் கடுமையான அப்பியாசங்களைச் சாதித்தும் அவற்றின் பயனாக எந்த ஒரு மனப்பக்குவத்தைத் துறவியானவன் அடையவேண்டுமோ அதை மட்டும்தான் இந்தத் 'தவம்' என்ற அதிகாரத்தில் சொல்லுகின்றார் என்ற படர்க்கைக் கூற்று முறையில் நாமக்கல் கவிஞர் தம் கருத்துக்களை விளக்கிச் செல்கின்றார். படர்க்கைக் கூற்று முறையில் நாமக்கல் கவிஞர் அரிய கருத்துக்களை எளிமையாக விளக்குவதில் தம் ஆளுமையை வெளிப் படுத்துகின்றார்.

### எளியநடை

அரிய கருத்துக்களையும் அனைவரும் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு உரைப்பதே உரைநடை என்பர் கார்டினர் (சோசபு சுந்தரராசு, உரைநடைத்திறன், ப.8). பேசுகின்ற மொழிக்கும், எழுதுகின்ற மொழிக்கும் அதிக வேறுபாடு இருக்கக் கூடாது. பொதுமக்கள் நடையினையே உரைநடைக்குப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் அறிஞர்களுடைய கருத்து பொது மக்களைச் சென்று சேரும் என்கின்றார் இராசேந்திரப்பிரசாத். (சோமலே, வளரும் தமிழ், 158).

பெரும்பான்மை கல்வியறிவுடையவர்கள் படித்தறிதற் கென்று எழுதப்பெற்ற செந்தமிழ் நடை மறைந்து சிறிது கல்வியறிவு உடையவர்களும் படித்தறிந்து கொள்வதற்குரிய எளியநடை பழக்கத்திற்கு வந்த காலத்தில் நாமக்கல் கவிஞர் தம்முடைய நடையினை எளிய முறையிலேயே அமைத்துள்ளார்.

> எதிர் பாராதபடி காலில் விழுந்துவிட்ட என்னைச் சுப்பையா ஒரு குழந்தையைத் தந்தை தூக்குவது போல் வாரியெடுத்து, தட்டிக்கொடுத்து, தைரியப்படுத்தி, ராமலிங்கம்! நீ வெகு நல்ல பிள்ளை. ரொம்பயோக்யன் என்பதை இப்போது கண்டு கொண்டேன்.

தாயார் கொடுத்த தானம் (ப.21) என்ற உரைநடை நூலில் இவ்வாறு கூறியதை நோக்கும்போது எளிமையாகவே உரைநடையினைக் கவிஞர் கையாண்டமை தெளிவாக விளங்கும்.

### சொற்கள்

எல்லோருக்கும் புரியக்கூடிய எளியநடையினைப் பயன்படுத்தும் நாமக்கல் கவிஞர், உரைநடையில் எல்லா மக்களுக்கும் புரியக்கூடிய 'பொதுச் சொற்களை'யே பயன்படுத்துகின்றார்.

### பிறமொழிச் சொற்கள்

'போலீஸ் இன்ஸ்பெக்டர்', 'ஜிம்னாஸ்டிக்ஸ்', 'ஹைஜம்ப்', 'லாங்ஜம்ப்', பிரின்சிபால்', 'லீவ்', செலக்ஷன், பெயில், அரித்மெடிக், குஷன்டயர், ப்ரீவீல், பப்ளிக் ஹெல்த் டைரக்டரும், ஆர்க்காலஜிகல் போன்ற பல ஆங்கிலச் சொற்களைக் கவிஞர் தம்முடைய உரைநடையில் பயன்படுத்தியுள்ளார். கவிஞர் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும் போது அதற்கு நேரான தமிழ்ச் சொல்லையும் பொருள் புரிவதற்காகப் பயன்படுத்துகின்றார்.

சான்று : 'அரித்மெடிக்' (எண் கணக்கு)

'லாங்ஜம்ப்' (நீளமாகத் தாண்டுதல்)

என்று அடைப்புக் குறிக்குள் எழுதுகின்றார்.

**பேச்சுவழக்குச் சொற்கள்**

"எங்கப்பராணை".

'ஒங்களை ரொம்ப நல்ல மனுசருன்னு நினைச்சேன் மட்டு மரியாதையில்லாம நீங்க பேசரதைப் பார்த்தால் ரொம்ப அல்ப்ப சாகுசமாக வல்ல இருக்குது?

'இவுகளை', 'வர்ரேணுங்கோ'

'இவுகளா, இவுக எழுதினா இது! இவுகளை

அந்தப் பிரமா இன்னுதான் சொல்லனும்'.

கவிஞர், உண்மை நிகழ்ச்சிகளைக் கூறும்போது, நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட பாத்திரங்களையே பேசவைப்பதால் பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை புரிகின்றது. பாத்திரங்களுக்கு ஏற்பவும் சொற்களை, மொழிநடை போன்றவற்றை, கதை இலக்கியங்களில் பேச்சு மொழியைத் தழுவியதாக உரைநடை அமையும்படி சொல்லாட்சியையும் பயன்படுத்தியுள்ளார். சான்று:

*நான் அந்த மூட்டையைச் சரியா இருக்கிக் கட்டித் தூக்கறதக்குள்ள, நீங்களெல்லாம் போயிட்டிங்களா?*
*நான் அதைத் தூக்கிட்டுப் பின்னாலே வந்தேன்.*
*எனக்குப் பின்னால் நாலஞ்சு பேர் ஓடியாந்த ஓசை கேட்டது. ஓ! சிக்கிக்கிட்டோ முண்ணு தெரிஞ்சு,*
*ஒடனே நகை மூட்டையைக் கத்தாளைச் சந்திலே போட்டுட்டு ஓட்ட மெடுத்தேன்* **(மலைக்கள்ளன், ப.111)**

என்று கவிஞர் நாவலில் வரும் பாத்திரங்களுக்கு ஏற்ற உரையாடல்களை மிகுதியாகப் பயன்படுத்தியமை தெள்ளிதின் விளங்கும்.

கவிஞர் அலங்கார நடையினை விட எளிமை, தெளிவு அமையப்பெற்ற நடையினையே பயன்படுத்தியுள்ளார்.

கருத்துத் தெளிவிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்.

கதை இலக்கியங்களில் பாத்திரத்திற்கு ஏற்ற உரைநடையை அமைத்துள்ளார்.

## கவிஞரின் உரை ஆய்வுத்திறன்

தமிழ் இலக்கியத்தின் மீது ஈடுபாடுடையவர்கள் யாவரும் திருக்குறள் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டவராக விளங்குகின்றனர். அவ்வாறு திருக்குறளில் ஈடுபாடு கொண்டவர்கள் காலத்திற்கு ஏற்பவும், சார்ந்திருக்கும் இயக்கத்திற்கு ஏற்பவும் காலந்தோறும் பல உரைகளை எழுதியுள்ளனர்.

- சமயவாதிகள் பலரும் தங்கள் தங்கள் சமயத்திற்கு ஏற்பப் பொருள் கூறும் முயற்சியும் இந்த அடிப்படையில் அமைந்ததே ஆகும்.
- கொள்கையைச் சார்ந்தவர்களும் தங்கள் கொள்கையினைத் திருக்குறளில் காண முயன்றுள்ளனர்.

இதன் காரணமாகத் திருக்குறளில் எண்ணற்ற உரைகள் தோன்றியுள்ளன. தமிழில் ஈடுபாடு கொண்ட நாமக்கல் கவிஞரும் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்.

## திருக்குறள் பரிமேலழகர் உரை ஆய்வு

கவிஞர் சிறையில் வாழ்ந்து கொண்டிருந்தபோது தம்முடன் சிறையில் இருந்தவர்களுக்குத் திருக்குறளைப் பற்றி அடிக்கடி சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். அங்ஙனம் நிகழ்த்தியபோது திருக்குறளுக்குப் பரிமேலழகர் செய்துள்ள பேருரையே அவர் பெரும்பாலும் பின்பற்றினார். ஏனெனில் அவ்வுரையே மற்ற எல்லா உரைகளையும்விடச் சிறந்தது என்று தமிழறிஞர்கள் கூறி வந்தனர். ஆனால் நாமக்கல் கவிஞர், பலருடைய உரைகளையும் படித்து, இறுதியில் அகராதி, அறிவு, அனுபவம் என்னும் கருவிகளைத் துணையாகக் கொண்டு புதிய உரையை எழுதி முடித்தார். புது உரை படைத்ததாகக் கவிஞர் 'என்கதை' (252) எனும் சுயசரிதையில் குறிப்பிடுகின்றார். வேலூர்ச் சிறையில் உரை எழுதுவதற்கான சூழ்நிலை இருந்தாலும் மதுரைச் சிறையில்தான் திருக்குறள் உரை எழுதுவதற்குரிய அனைத்துக் குறிப்புகளையும் எழுதி முடித்தார் என்ற குறிப்பும் காணக்கிடக்கின்றது.

## அதிகார விளக்க உத்திகள்

நாமக்கல் கவிஞர், குறள்கள் அடுக்கப்பட்டதற்குரிய காரணத்தைக் கூறுகின்றார். ஒவ்வோர் அதிகாரத்தின் முதற் குறளும் அதிகாரத்தின் பெயர் எந்த விஷயத்தைக் குறிக்கிறதோ அந்த விஷயத்தின் எல்லையை வரையறுக்கத்தக்கதாக அமைக்கப் பட்டுள்ளது என்று கருதுகின்றார்.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிர்த மென்றுணரற் பாற்று (குறள். 11)

என்னும் முதல் குறள் 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில் அடங்கியுள்ள மழையின் பயனை 'எல்லைகாட்டி'க் கூறுவதாக எண்ணுகின்றார். ஒவ்வோர் அதிகாரத்தின் முதல் குறளும் அதிகாரத்தின் கருவாக அமைந்துள்ளது என்றும், பரிமேலழகரைத் தவிர, அவருக்கு முன் இருந்த தருமர், மணக்குடவர், தருமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர் முதல் குறளுக்கும் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பினைச் சிந்திக்காமல் குறள் அடுக்கு முறையில் மாறுபடுகின்றனர் என்றும் கருதுகின்றார் கவிஞர்.

பரிமேலழகர், வள்ளுவர் காலத்திலிருந்து வாழையடி வாழையாக வந்த பிரதிகளைக் கொண்டே மூலத்தை அமைத்துத் தம்முடைய உரையை எழுதியிருக்கிறார் என்பதனைக் கவிஞரின் 'வள்ளுவர் உள்ளம்' (ப.24) எனும் நூலின் வழி அறிய முடிகின்றது. இவற்றினை நோக்கும் போது பரிமேலழகரின் அதிகாரக் குறள் வைப்பு முறைகளில் எவ்விதக் குறைபாடும் இல்லை என்று கருதுகின்றார் என்பது தெளிவாகின்றது. கவிஞர் எழுதிய புதுஉரையில் அதிகார வைப்பு முறையினை விளக்குகின்றார்.

**கவிஞரின் திருக்குறள் பணி**

நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர் நாமக்கல் கவிஞர். கவிதை நூல்களாக, கட்டுரை நூல்களாக, திறனாய்வு நூல்களாக இவை விளங்குகின்றன. தன் வரலாற்று நூலையும் படைத்தவர் இவர். பழைய நூல்களைப் புதிய பார்வையில் பார்த்துத் தம் புலமைத் திறத்தைப் புலப்படுத்தியவர். சங்க இலக்கியத்தைப் பயின்று பயின்று இன்பங் கண்டவர். சிலம்பின் தமிழிலும் கம்பரின் கவிதையிலும் ஆழங்கால்பட்டவர்.

நாமக்கல் கவிஞரின் புதியபார்வைக்கு விடுதலைக் காலமும் அக்காலத்தில் மலர்ந்த இலக்கியமும் சூழலாக அமைந்தன. அவருடைய விடுதலை வேட்கையும் காந்திய அரசியலும் திறனாய்வு நோக்கில் இணைந்தன. விடுதலை உணர்வோடு தமிழ் உணர்வையும் மக்களுக்குச் செம்புலப் பெயர் நீராய் ஆக்கி அளித்தமையை அவர்தம் படைப்புகளை ஆராய்வோர் எளிதில் அறிவர்.

கம்பனைப் போல் வள்ளுவரைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாண்டும் பிறந்ததில்லை எனும் உண்மையை ஏற்றவர் நாமக்கல் கவிஞர். கம்பனின் கவிதை நலமும் இளங்கோவின் இன் தமிழும் ஈர்த்தன போலவே வள்ளுவரின்

வாக்கும் அவரை வயப்படுத்தியது. திருக்குறளைப் பிறருக்கு எடுத்துரைத்தார். உரை எழுதும் சூழல் ஏற்பட்டது. உரையில் தெளிவு கூட ஆய்வையும் மேற்கொண்டார். ஆய்வு அவர் உள்ளத்தினைத் திருக்குறள் உள்ளமாகவே ஆக்கியது.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று போற்றிய பாரதியின் கருத்துக்குச் சான்று வேண்டுவதில்லை. உலக அறிஞர் பலரும் திருக்குறளைப் பயின்றவுடன் தோய்ந்து பாராட்டியுள்ளமை கருதத்தக்கது. பிறமொழியினரையே ஈர்த்த திருக்குறள் கவிஞரும் தமிழ் உணர்வாளருமாகிய நாமக்கல்லாரை ஆட்கொண்டதில் வியப்பில்லை. ஆறுநூல்களைப் படைத்து அகமகிழ்ந்தார். படிக்கிற காலத்திலேயே குறளைச் சிந்தித்தார். படித்தவரிடத்தில் பழகுகிறபோது அவர்தம் குறட்சிந்தனை வளர்ந்தது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாகச் சிறையில் வாடவேண்டி வந்தது. சிறையில் வாட்டம் போக்கும் மருந்தாகத் திருக்குறளைச் சிந்தித்தார் கவிஞர்; திருக்குறளைக் கற்பித்தார் கவிஞர். தொடர்ந்து அவர் அரசியலில் ஈடுபட்ட காலத்திலும் திருக்குறளையே எண்ணி எண்ணி வாழ்ந்தார்.

தனியே சிந்திப்பதற்கும் பலரோடு கூடிச் சிந்திப்பதற்கும் வேறுபாடு உண்டு. தனியே சிந்திக்கும் போது ஒரு நோக்கில் ஓடும் சிந்தனை பலரும் கூடிச் சிந்திக்கிறபோது பலநோக்கும் வெளிப்படும். சிக்கல் கூடினாலும் தீர்வும் வெளிப்படும். விடுதலை வீரர் சிலரை வேலூர்ச் சிறையில் அடைத்தனர். அவர்கட்குத் தமிழ் வகுப்பு எடுக்க முனைந்தார் சிறையில் அடைப்பட்ட கவிஞர். ஓமந்தூரார், சுப்பண்ணக் கவுண்டர், முத்துக்கவுண்டர், நல்லாக் கவுண்டர், தேவாரம் பாரதி முதலியோர் பாடல் கேட்டு மகிழ்ந்தனர். ஆசிரியரான நாராயணசாமி முதலியாரும் கவிஞரிடம் பாடம் கேட்டார். நாள்தோறும் கம்பனில் இருபது பாட்டுக்களும் குறளின் ஓர் அதிகாரமும் பாடமாயின.

பரிமேலழகரின் உரையைக் கொண்டு விளக்கி வந்தார். அந்த உரைப் பத்தியைப் பலரும் மனங்கொண்டு போற்றினர். சில குறட்பாக்களுக்குத் தக்க விளக்கம் கிடைக்காமல் தடுமாறவும் செய்தனர். பாடங்கேட்டவர்கள் மாணவர்கள் அல்லர். அவர்தம் அனுபவமும் ஆன்ற புலமையும் உயர்ந்த எண்ணமும் பலவாறு சிந்திக்க வைத்தன. ஆராய்ச்சிக்களமாகவே சிலபோது தோன்றும் வகுப்புகளாயின. ஒருமுறை சத்தியமூர்த்தியும் வந்திருந்து கவிஞரிடம் பாடம் கேட்டாராம். 'பொருள் செயல்வகை' எனும் அதிகாரம் அன்றைய பாடமாக அமைந்தது.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை (குறள். 758)

எனும் குறளுக்குக் கவிஞர் விளக்கம் தந்தார். அந்தக் குறளின் பொருளை இயைந்துப் பார்ப்பதில் ஓமந்தூரார்க்கு நிறைவு இல்லை.

> தன்கையிற் பொருளை வைத்துக்கொண்டு ஒருகாரிய முயற்சி செய்வதற்கும் மலையின்மேல் இருந்து கொண்டு கீழே நடக்கும் யானைச் சண்டையைப் பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம்

என்று கேள்வி எழுப்பினார் ஓமந்தூரார். கேட்டிருந்த அனைவர்க்கும் அவர் வினா சிந்தனையைத் தூண்டியது. சத்தியமூர்த்தி,

> தன்முயற்சியாகத் தன்னுடைய தனத்தைக் கொண்டு காரியத்தைச் செய்யவேண்டியவன், தான் சும்மா இனிதிருந்து கொண்டு வல்லாரை ஏவிக் காரியத்தை முடித்துக்கொள்வான் என்பதில் அர்த்தமில்லையே

என்றார். இருவர்தம் வினாக்களும் கேட்டோர் வாய்களை அடைத்தன. ஆசிரியராக இருந்து பாடஞ்சொன்ன கவிஞர் தன்முனைப்புக் காட்டாமல் அவர் தம் வினாக்களைப் போற்றி மகிழ்ந்தார்.

'மிகவும் மதிநுட்பமுள்ள அந்த நியாயம் என் மனதுக்கும் சரியென்றே பட்டது' என்றார் கவிஞர். விடை காண்பதை நோக்கமாகக் கொண்டு சிந்தித்தார் கவிஞர். ஓமந்தூரார் கவிஞரையே புதிய உரை எழுதுமாறு வற்புறுத்தினார். எளிய நடையில் அமைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அன்றே உரை எழுதும் எண்ணம் உதித்தது.

> தப்போ தவறோ திருக்குறளுக்கு வேறு ஒரு உரை எளிய நடையாகவாவது எழுதி விடுவது என்ற தீர்மானத்தை அன்றைக்கே செய்துகொண்டேன். அதற்குப்பின் எந்நேரமும் அதே சிந்தனைதான். ஒரே குறளைத் திரும்பத் திரும்ப வெவ்வேறு விதமாகப் பதம் பிரித்துப் பார்த்துக் கொண்டே சிற்சில இரவுகள் தூங்காமலே விடிந்து போனதாம்.

ஓயாமல் சிந்தித்து, இரவு பகலாக உழைத்து உரையை உருவாக்கினார். ஆனால் அது வருவதற்கு முப்பத்திரண்டு ஆண்டுகள் ஆயின. திருக்குறள் புது உரை என வெளியிட்டார்.

அந்நூலைத் தொடர்ந்து மேலும் குறள் தொடர்பான நூல்களைப் படைத்தார் கவிஞர்.

> வள்ளுவரின் உள்ளம், திருவள்ளுவர் திடுக்கிடுவார், திருவள்ளுவரும் பரிமேலழகரும், திருக்குறள் கருத்துரை, திருவள்ளுவர் இன்பம், திருக்குறள் புது உரைச் சுருக்கம் ஆகியன. திருக்குறள் புதுஉரைச் சுருக்கம் என்பது திருக்குறள் புது உரையை வெளியிட்டு விழாவில் வழங்கிய உரையின் சுருக்கமாகும்.

திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் எந்த உரையும் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. பல நூற்றாண்டு கழித்த பின்பே உரைகள் தோன்றின. வள்ளுவரின் உள்ளத்தை முழுதும் உணரும் வாய்ப்பு எவர்க்கும் வாய்க்கவில்லை என்பதை உறுதிபடக் கூறியுள்ளார் கவிஞர். காலம், இடம், நிறம், சமயம், ஜாதி முதலானவற்றையெல்லாம் கடந்து நிற்கின்ற சத்தியங்களைச் சொல்லுகின்ற திருவள்ளுவரின் கருத்துக்களைக் கொண்டது திருக்குறள். ஆனால் அதற்கு உரை செய்தவர்கள் காலம், இடம், சமயம் முதலியவற்றை ஒட்டிய முறையில் பொருள் செய்தமையால் உரைகளில் மாற்றங்கள் உள்ளன. அடுக்குமுறைகள் கூட மாற்றம் பெற்றுள்ளன. திருக்குறளுக்குப் பொருள் கூறுவதைவிட விரிவாக இலக்கண விளக்கங்களில் இறங்கிவிடுகிற நிலைமையும் உள்ளது என்பதை உணர்ந்து உணர்த்தினார் கவிஞர். புத்துரை எழுதியதன் நோக்கமும் அதன் இயல்பும் விளங்குமாறு இக்கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார் கவிஞர்.

காலம், இடம், நிறம், சமயம், சாதி கடந்து உண்மைகளைச் சொல்லும் திருக்குறளைக் கற்றால் மெய்யறிவு பெறலாம் என உறுதியாக நம்பியவர் நாமக்கல்லார். காட்டுக் குகையிலும் வேறு பல இடங்களிலும் அலைந்து திரிந்து சித்தி பல செய்து உண்மையைத் தேடுவோர் கண்டறிந்தவற்றைத் திருக்குறள் கற்று எளிதாகப் பெறலாம் என்கிறார் மெய்யறிவு பெற்ற கவிஞர்.

> காடுசென்று குகையடைந்து கண்கள்மூடி எண்ணியும்
> காவிகட்டி ஓடெடுத்துக் கஷ்டவாழ்க்கை பண்ணியும்
> தாடிவைத்து மொட்டைதட்டித் தவசியென்ற பேருடன்
> தரணிமெச்ச ஊர்கள் சுற்றித்தருமபோதம் கூறியும்
> கூடுவிட்டுக் கூடுபாயும் சித்துசெய்யக் கோரியும்
> கோடிகாலம் வாழஎண்ணிக் காயகற்பம் தேடியும்
> தேடுகின்ற உண்மையாவும் ஓடிவந்து நிற்குமே
> தெய்வவாக்கு வள்ளுவன் திருக்குறள்கள் கற்கவே
>
> (நா.க.பா. 97–98)

உண்மையை ஒப்பற்ற தமிழ் இலக்கியத்தில் எளிதில் அறியலாம் என்னும் கவிஞரின் எண்ணம் ஆய்வில் தோய்ந்த பின் தோன்றியதாகும்.

பரிமேலழகரின் உரையைக் கொண்டு வகுப்பு நடத்தினாலும் பலரின் உரைகளையும் படித்தே விளக்கம் கூறியவர் கவிஞர். பரிமேலழகர் உரை சிறந்தது என்பதையும் வெளிப்படுத்தியவர். சிறந்த உரை என்றாலும் காலம் இடம் சமயம் சார்ந்தவர்களாக இருந்து உரை எழுதும் போது விழிப்புணர்வு பெற்று இருந்தாலும் சிலபோது தம்மையுமறியாமல் தம் கருத்துக்களை இயைப்பதுண்டு. பரிமேலழகரும் விதிவிலக்கல்லர். அதற்காகப் பரிமேலழகரைக் குறைகூறக்கூடாது. குறள் பலவற்றுக்குச் சிறந்த உரையை எழுதியுள்ள பரிமேலழகர் சில குறட்பாக்களுக்கு எழுதிய உரை பொருந்துமாறில்லை என்பதால் குறை கூறக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார். தவம் எனும் அதிகாரத்தில் ஒன்பது குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் உரை பொருந்தவில்லை என்றார் கவிஞர். தம் அதிகாரத்தின் அமைப்பையும் அதன் நோக்கத்தையும் பரிமேலழகர் காணத்தவறியதால் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைச் சொல்லுவதாகத் தோற்றமளிக்கிறது அவரது உரை என்று குறிப்பிட்டுள்ளார் (திருவள்ளுவரும் பரிமேலழகரும், ப.7). அந்த அதிகாரத்துக்குக் கவிஞர் செய்த உரை வள்ளுவருடைய கருத்துக்குப் பொருத்தமானது எனப் பலரும் பாராட்டினாலும், பரிமேலழகர் உரைக்குப் பழுது சொல்லிவிட்டாரே எனும் வருத்தம் சிலருக்கு இருந்ததை அறிந்திருந்தார் கவிஞர். அதனால்,

> பரிமேலழகர் நாம் வணங்கவேண்டிய மிகவும் பெரியவர். அவர் தோன்றியிராவிட்டால் உலக இலக்கியங்களுக்குள் தலை சிறந்த இலக்கியமாகிய திருக்குறள் இந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்திருக்காது.

என்று போற்றும் கவிஞர்,

> அவரும் அவருக்கு முன்னாலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைப் பின்பற்றி, உரைகளைச் சொந்தமாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்துவிட்டார் என்பதை எடுத்துச் சொல்லக் கூடாதா? 'நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றம்தான்' என்ற பரம்பரையில் வந்த நாம் இதை ஒத்துக்கொண்டால் என்ன?

என வினவுகின்றார். மேலும்,

பரிமேலழகர் மிகப்பெரிய உரையாசிரியர்தான். ஆனால், திருக்குறள் அவரைவிட மிகப்பெரிய விஷயம் அல்லவா? பரிமேலழகர் மீது நமக்குள்ள பாசத்தால் திருக்குறளுக்குத் தீங்குவரச் செய்யலாமா? எனக்கேட்டு, குறளுக்குத்தான் உரையே ஒழிய உரைக்குக் குறள் அன்று என்பதை நினைவூட்டுகின்றார். (திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக்.7-8).

பரிமேலழகர் உரையை வேறொரு நூலிலும் சிறப்பாகவே போற்றியுரைத்துள்ளார்.

> பரிமேலழகரின் உரை மற்றெல்லா உரைகளிலும் மிகச்சிறந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை

என்றும்,

> தமிழுலகத்தின் நன்றி நிறைந்த வணக்கத்துக்கு உரியவர். தமிழ் மரபையும் தமிழ் இலக்கியங்களையும் தமிழ்ப் பண்புகளையும் தழுவித்தான் மிகுந்த நுண்ணறிவுடன் உரை செய்திருக்கிறார்

என்றும் கூறி (வள்ளுவரின் உள்ளம், ப.24) பரிமேலழகரின் மீது மதிப்புக் கொண்டிருந்தமையைக் காட்டினார் கவிஞர். ஆனால் குறளின் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தமையை அறியமுடிகின்றது. அவரது ஆய்வில் நடுநிலைமை இருந்தமையையும் அறியமுடிகின்றது.

திருக்குறள் பரிமேலழகரை விடப்பெரிய விஷயம் என்பதை மனத்தில் நிறுத்த ஓர் எடுத்துக்காட்டினையும் காட்டியுள்ளார் கவிஞர்.

திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கவே மாட்டார் என்று நாம் நிச்சயமாகக் கூறமுடியுமோ அதையே பரிமேலழகர் திருக்குறளுக்கு உரையாகச் சொல்லியிருப்பதை நிரூபித்துள்ளார் கவிஞர்.

> சாம, தான, பேத, தண்டம் என ஒரு சிக்கலுக்குத் தீர்வு காணவேண்டும் என உலக இலக்கியம் யாவும் கூறும் நல்லறிவும் இதுதான். ஆனால் பரிமேலழகர் தண்டம், பேதம், தானம், சாமம் எனச் சிக்கலுக்குத் தீர்வு காணவேண்டும் என்கிறார். வள்ளுவர் கருத்தும் அதுவே என்கிறார். இது விபரீதமானது. எல்லா நீதி நூல்களுக்கும் விரோதமானது என்கிறார் கவிஞர். அதற்காக வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை

செயல்வகை ஆகிய மூன்று அதிகார வைப்புமுறையைக் கொண்டு விளக்குகின்றார்.

(திருவள்ளுவரும் பரிமேல்ழகரும், பக்.8-10)

**சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது** (குறள். 671)

என்னும் குறளுக்கும்

**தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை** (குறள். 672)

என்னும் குறளுக்கும் சரியாக உரைசொன்ன பரிமேலழகர்

**ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல்** (குறள். 673)

என்னும் குறளுக்கு மட்டும் சரியான உரை இல்லை என்கிறார். வினை என்பதற்குப் போர் எனப் பொருள் கொண்டதால் ஏற்பட்ட பிழை இது என்பதை விளக்கியுள்ளார் கவிஞர் (மேலது, பக்.10,11,13).

இவ்வாறே, தவம் பற்றிக் குறிப்பிடும்போது கவிஞர்,

> திருவள்ளுவர் சொல்லுகின்ற தவம்'' தத்துவமுறையில் அமைக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பரிமேலழகர் சொல்லுகின்ற உரை உலக வழக்கிலுள்ள முறையில் அமைந்திருக்கிறது
>
> (மேலது, ப.22)

எனக் கூறி விளக்கம் தந்துள்ளார்.

தம் உரையைப் புதுஉரை எனக் குறிப்பிட்டுள்ளமைக்குத் தக்க விளக்கமும் அளித்துள்ளார். புதிதாக ஆக்கப்பட்டது என்பதை விடப் புதுமையாக ஆக்கப்பட்டது என்னும் பொருள் பொருந்தும் என்பதாக விளக்கமளித்துள்ளார் கவிஞர்.

> இந்த நூலுக்குத் 'திருக்குறள் புதுஉரை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இதிலுள்ள உரைகள் மிகவும் எளிய நடையில் ஒரு புதுமுறையில் சொல்லப்படுகின்றன என்பதற்காக மட்டும் அல்ல. பழைய உரைகளில் பல குறள்களுக்கு மிகவும் தவறாகச் செய்யப்பட்டுள்ள உரைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட புதுஉரைகள் சொல்லப்பட்டிருப்பதே 'புதுஉரை' என்ற பெயருக்குக் காரணம் (திருக்குறள் புதுஉரை, ப.4).

என்று விளக்கம் தந்துள்ளமை எண்ணத்தக்கதாகும்.

குறட்பாக்களைக் குறிக்கும்போது குறள்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். 1330 குறட்பாக்களுக்கும் 'திருக்குறள்' என்று பெயருள்ளமையைக் கவிஞர் மறந்திருக்கமாட்டார். ஒருமையிலும் பன்மையிலும் 'குறள்' என்னும் சொல்லே பயன்படும். ஆனால் ஒரு குறளைக் குறிக்கிறதா பலகுறளைக் குறிக்கிறதா என்னும் குழப்பம் பாமரர்க்கு வாராதிருக்கவே பன்மையில் குறிப்பிடும்போது 'குறள்கள்' என உரைத்துள்ளார். கவிஞர்.

கவிஞருடைய புதுஉரையில் அவர்கொண்ட முடிவு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளமையை அறிஞர் போற்றி உரைத்துள்ளனர்.

**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற** (குறள். 61)

என்னும் குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், 'அறிவற்ற மக்கள்' என்னும் கருத்து பெண்பாலை யொழிந்து நின்றது என்று கூறுகிறார். அவ்வாறு பரிமேலழகர் குறிப்பது முறையற்றது. திருவள்ளுவர் பெருமைக்கு நாம் செய்யக்கூடிய அநியாயம் அதைவிட வேறில்லை எனக் கடுமையாகச் சாடுகின்றார் கவிஞர். மேலும் இவ்வதிகாரப் பெயர் 'புதல்வரைப் பெறுதல்' அன்று. மக்கட்பேறு என்கின்றார். மேலும் பரிமேலழகர், அறிவறிந்த என்னும் தொடருக்கு, 'ஆண்மக்கள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் (திதி கொடுத்தல் முதலியன) என்ற 'அறிவை அறிந்த' என விளக்கம் தந்தமையையும் மறுக்கின்றார் கவிஞர். இத்தகு பொருள்கொள்வதற்குப் பதங்களில் இடமில்லை என்கின்றார். மேலும்,

> ஆண் மக்கள் அறியவேண்டிய அறிவு நீர்க்கடன் செய்வது மட்டுமல்ல. மேலும் நீர்க்கடன் என்பது ஒரு சாராருடைய சடங்கு நம்பிக்கை. திருவள்ளுவர் அப்படிப்பட்ட நம்பிக்கைகளை அவமதிப் பதில்லையானாலும் சடங்குகளை அவர் திணிப்பதில்லை. அதனால்தான் எல்லா மதத்தினரும் திருக்குறளைப் பொதுமறையாகப் போற்றுகின்றார்கள்

என்று விளக்கம் தந்துள்ளார். கவிஞர் எழுதிய உரையில்,

> வள்ளுவர் சடங்குகளைத் திணிக்க விரும்பாதவர் என்று கூறும் முடிவு ஏற்றுக் கொள்ளவேண்டிய முடிவேயாகும்

என இ. சுந்தரமூர்த்தி குறிப்பிடுவதைக் கொண்டு கவிஞரின் புதுஉரை வள்ளுவர் உள்ளத்திற்கு உகந்தது என உணரலாம். (வள்ளுவம், இதழ், சூலை-ஆகஸ்டு, 1999). ஒரு சாராருடைய் நம்பிக்கை எனக் குறிப்பிட்டதால் ஒருசாரர் பாரதி அளவுக்கு நாமக்கல் கவிஞரை உயர்த்திப் பிடிக்கவில்லை என்னும் உண்மையையும் உணரமுடிகின்றது.

பலஇடங்களில் பரிமேலழகரை மறுக்கும் கவிஞரின் ஆய்வுத்திறன் நுட்பமானது.

பயனில் சொல்லாமை'- இதற்குப் பரிமேலழகர்

> அறம், பொருள், இன்பம் பயவாத சொற்களைச் சொல்லாமை

என்று விளக்கம் தருகின்றார்.

கவிஞர் அவர்கள், 'பயனற்ற வீண் வார்த்தைகளைப் பேசாமலிருப்பது' என்று விளக்கம் கொடுக்கின்றார். இவ்வாறு யாவும் ஒரே பொருளைத் தருவதாக எண்ணி யேங்கிவிடக்கூடாது என்பதற்காக ஒரு அதிகாரத்தை விளக்கும்போது தொடர்புடைய பிற அதிகாரங்களையும் விளக்குகின்றார். இது, மக்களிடம் தெளிவினை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தின் தூண்டுதல் எனலாம். சில இடங்களில் அதிகார விளக்கங்கள் மக்களின் தேவையைக் கருதி விரிவான விளக்கத்தினையும் படைத்துள்ளார்.

பரிமேலழகர், 'தீ வினையச்சம்' என்னும் அதிகாரத்திற்குப் பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்' என்று எளிமையான விளக்கம் தருகின்றார்.

கவிஞர் பிறருக்குத் தீங்கு செய்தால் தனக்குப் பாவம் வருமே என்று பயந்து யாருக்கும் தீங்கு செய்யாதிருக்கும் குணம் என்று விளக்கம் தருகின்றார்.

இதில் உரையாசிரியர் 'தீ வினையச்ச'த்தைத் தொழிற் பெயராகவும், கவிஞர் காரணப் பெயராகவும் கொண்டது புலப்படும். இது கவிஞரின் விரிவான விளக்கத்தின் விளைவாக ஏற்பட்ட வேறுபாடாகும்.

விரிவாக விளக்குவதிலும் கவிஞர் சில இடங்களில் வேறுபடுகின்றார்.

பரிமேலழகர், 'ஈகை' எனும் அதிகாரத்திற்கு 'வறியராயேற்றார்க்கு மாற்றாது கொடுத்தல்' என்கின்றார்.

கவிஞர் பொதுவாக ஏழைகளுக்குக் கொடுப்பதையும் சிறப்பாக இருப்பவர்களுக்குத் தானம் கொடுப்பதையும் குறிப்பது என்று விளக்கம் தருகின்றார்.

பரிமேலழகர் ஏழைகளுக்குக் கொடுப்பதை மட்டும் கூறுகின்றார். கவிஞர் ஏழைகளைப் பொதுவாகவும், இருப்பவர்களைச் சிறப்பாகவும் குறிப்பிடுகின்றார். 'ஈகை' என்பதற்குத் 'தானம்' என்று பொருள் தருகின்றார். ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் சிறுபொருள் ஈகையில் அடங்காது. அவர்களுடைய வறுமை நீங்கும் வகையில் கொடுப்பதே ஈகையாகும் என்னும் கருத்தை வலியுறுத்தவே நாமக்கல் கவிஞர் பரிமேலழகரின் அடிப்படைப் பொருளில் ஒன்றுபட்டாலும் கூறும் முறையில் வேறுபாடு காட்டுகின்றார்.

காலத்திற்கு ஏற்றாற் போன்றும் விளக்கத்தில் வேறுபாடு காட்டுகின்றார். சான்றாக, திருவள்ளுவர் அரசியல் பற்றிக் கூறும்போது, நாமக்கல் கவிஞரும், பரிமேலழகரும் வேறுபடுகின்றனர்.

அரசருக்குரிய செய்திகளாகப் பரிமேலழகர் கூறியதையெல்லாம் கவிஞர் பொதுமக்களுக்குரியதாக எண்ணி விளக்கம் தருவதைக் காணமுடிகின்றது.

### இயல் விளக்கங்கள்

நாமக்கல் கவிஞர், பரிமேலழகரை விட மிக விளக்கமான, எளிமையான விளக்கம் தருகின்றார். இயல் பற்றிய விளக்கங்கள், துறவறவியலை விளக்கும் போது இருவரும் வேறுபடுகின்றனர்.

பரிமேலழகர் இல்லறத்தான் வீடுபெறும் பொருட்டுத் துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார். இக்கருத்தினைக் கவிஞர் மறுக்கின்றார்.

கவிஞர் இல்லறத்தை முடித்துக் கொண்டுதான் துறவறத்துக்குப் போக வேண்டும் என்றோ அல்லது போக முடியும் என்றோ கூறுவது சரியன்று. துறவறம் என்பது இல்லறத்தார்க்கும், துறவறத்தார்க்கும் பொருந்தும் என்று கூறுகின்றார். இக்கருத்தினை வள்ளுவரின் இல்வாழ்க்கை எனும் கருத்தினை ஆதாரமாகக் கொண்டு விளக்குகின்றார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக உள்ளது.

அரசியல் என்னும் இயலில் பரிமேலழகர் அரச நீதியைப் பற்றியும், அரசின் காவலைப் பற்றியும் கூறுகின்றார்.

நாமக்கல் கவிஞர் இதனை அரசன் அல்லது அரசாங்கத்தின் தலைவனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் என்று விளக்கம் தருகின்றார். இவ்விளக்கம் பரிமேலழகரின் வழியிலும், தற்கால அரசியல் நிலைக்கு ஏற்பப் புதிய வழியிலும் அமைந்துள்ளது.

காமத்துப்பாலைப் பற்றிய பொதுவான விளக்கம் கவிஞரிடம் காணப்படுகின்றது. பரிமேலழகரிடம் இவ்விளக்கம் இல்லை. கவிஞர் 'காமத்துப்பால்' விளக்கும் செய்தியைச் சுருக்கமாகக் கூறுகின்றார். காமத்துப்பாலில் பழங்காலச் சமுதாயநிலை வெளிப்படுவதாக எண்ணுகின்றார். பண்பாடு மாறினாலும் அடிப்படை உணர்வுகள் என்றும் மாறா என்பதை உணர்த்துவதாக இவருடைய காமத்துப்பால் விளக்கம் அமைந்துள்ளது என்று கூறலாம்.

முற்றுந்துறந்த முனிவர்கள்கூட அடக்க முடியாமல் அவதிப்படுகின்ற காமத்தை துறவிகள் அல்லாதவர்கள் மிக சுலபமாக, அலட்சியமாகத் திருக்குறளில் காமத்துப்பால் இல்லாமல் இருப்பது சிறந்தது என்று சொல்லத் துணிகின்றார்கள். திருக்குறளில் துறவறம் கூறப்பட்டிருக்கின்றது. அதே சமயம் இல்லறத்தைக் கருதித்தான் வள்ளுவர் திருக்குறளை எழுதியிருக்கிறார் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. இவ்வகையான இல்லறத்திற்குக் காமம் அடிப்படையான ஒன்று. அறம், பொருள், இன்பம் மூன்றும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. மூன்றில் ஒன்றை விலக்கினாலும் வாழ்க்கை செம்மையாக இராது. காமத்தை விட்டொழித்த துறவிக்கு அறம் ஒன்றைத்தவிர மற்ற இன்பம், பொருள் என்ற இரண்டும் இல்லை. அந்த அறமும்கூடத் தன் உடலையும், மனத்தையும் பற்றிய துறவு ஒழுக்கமேயன்றிப் பிறருக்குச் செய்ய வேண்டிய அறம் ஒன்றும் துறவிக்கு இல்லை. என்று கவிஞர் காமம் பற்றிய அதிகாரத்திற்கு விளக்கம் கொடுக்கின்றார்.

பரிமேலழகரை ஏற்றுக்கொண்டு அவரை ஒட்டி விளக்கங்களும் தந்துள்ளார் கவிஞர். பரிமேலழகர் அதிகார வைப்புமுறைக்குரிய காரணத்தை ஒவ்வோர் அதிகாரத்திலும் கூறிக்கொண்டே செல்கின்றார்.

கவிஞர் இதனை ஏற்றுக்கொண்டதனால் தம்முடைய புதிய உரையில் வைப்புமுறைக் காரண விளக்கத்தைத் தவிர்த்துள்ளார் எனலாம். ஆனால் வான் சிறப்பில் மட்டும் அதிகார வைப்பு முறை விளக்கம் காணப்படுகின்றது.

இருவரும் அதிகார விளக்கத்தில் அதிகாரத்திற்குரிய பெயரினை விளக்குகின்றனர்.

பொருட்பால் முழுவதையும் பரிமேலழகர் அரசனுக்குரியதாக எண்ணி விளக்குகின்றார்.

கவிஞர் எல்லாருக்கும் பொதுநீதியைக் கூறுவதாகக் கூறுகின்றார். 'செங்கோன்மை', 'கொடுங்கோன்மை', 'வெருவந்த செய்யாமை', 'ஒற்றாடல்' ஆகிய அதிகாரங்கள் அரசனுக்கு மட்டும் உரியனவாகப் பரிமேலழகர் வழியிலேயே கூறுகின்றார்.

கவிஞர் சில அதிகாரங்களில், அதிகாரங்களின் கருத்தை முன்னுரையாக அதிகார விளக்கத்தில் கூறுகின்றார். இம் முன்னுரை பரிமேலழகரிடம் காணப்படவில்லை.

'நீத்தார் பெருமை', 'தீ நட்பு', 'கூடா ஒழுக்கம்' 'புலவி', ஆகிய அதிகாரங்களை முன்னுள்ள அதிகாரங்களுடன் தொடர்பு படுத்தி விளக்கும் திறம் நாமக்கல் கவிஞரிடம் காணப்படுகின்றது.

இயல் விளக்கம் கவிஞரிடம் காணப்படுகின்றது. இதற்குப் பரிமேலழகர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அங்கவியலைப் பரிமேலழகர் அரசியலுக்குரிய அங்கங்களாக எண்ணுகின்றார். நாமக்கல் கவிஞர் இவ்வியலை எல்லாருக்கும் பொதுவானதாக எண்ணுகின்றார்.

நாமக்கல்லாரின் உரையிலும் குறைகாண முயன்றவர் இருந்தனர். இதனை நடுநிலை வாய்ந்த கவிஞர் ஏற்றுக் கொண்டாலும் மறுக்க வேண்டிய விளக்கங்களை மறுத்து எழுதினார்.

**கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅ ரெனின்** (குறள். 2)

என்னும் குறளுக்குக் கவிஞர் தரும் உரையை நயமானது என்று போற்றுகின்றார். இ. சுந்தரமூர்த்தி.

> கல்வி கற்பது அறிவுக்காக, நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்து கொண்ட அறிவுக்குமேல் இன்னும் அறிய வேண்டிய அறிவு இருந்து கொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ளமுடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் 'வாலறிவன்' என்றும் 'பகவன்'

> என்றும் சொல்லுகிறோம். அந்தப் பகவான் என்ற பூரண அறிவிற்கு மிகமிகவும் குறைந்ததுதான் நம்முடைய அறிவு என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் கற்ற கல்வியின் பயன் என்னவோ! ஒப்புக்கொண்டால் அதற்கு வணங்க வேண்டும்

என்னும் உரையில் கல்வியின் இலக்கு இறைவனே எனக் கூறாமல் பகுத்தறிவுச் சிந்தனையோடு பொருள் செய்தமையால் குறைகாணுகிறார் கா. அப்பாத்துரையார்.

> பகுத்தறிவுக் கருத்தையும் ஏற்று, சமயப் பண்பையும் முழுதளவாக ஏற்றவர் கவிஞர் இராமலிங்கனார். இப்பண்பு திருவள்ளுவரை அணுக உதவும் பண்பே. அவரும் அணுகியுள்ளார். ஆனால் அவர் பகுத்தறிவு வேறாக, சமயப்பண்பு வேறாகத் தொடர்பற்றுச் செல்வதால், இரண்டும் இணைந்த திருவள்ளுவர் பண்பை எட்டிப்பிடித்தும், நம் காலக்காற்று அவரைப் படிதழுவ விட்டுப்பின் தட்டித்தடவும் படி செய்து விடுகிறது

என்று கூறுகின்றார். கடவுள் கல்வியின் இலக்கு என்று கூறாமையால் அப்பாத்துரையார் மேலும்,

> கண்டு எடுத்த வைரத்தை எறிந்து விட்டுக் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து அடுக்குகிறார்

என்றும் குறிப்பிடுகின்றார் (மணி விளக்கவுரை, ப.239)

ஆனால் திரு.வி.க. நாமக்கல்லாரின் புது உரையைப் படிக்கக்கேட்டு அதனைப் பாராட்டியுள்ளார்.

> புதுஉரை பழமைக்கு முரண்படாதது; புதுமைக்கு அரண்செய்வது; காலத்துக்கு ஏற்றது; அதன்கண் காந்தீய மணங்கமழ்கிறது

(திருக்குறள் புதுஉரை ப.5), என்றார்.

கவிஞர், ஒவ்வொரு குறளின் இறுதியிலும் அடுத்த குறளுக்குரிய பொருளோடு தொடர்புபடுத்தி உரையமைத்துள்ளார். முதல் குறளில் இருந்தே இவ்வமைப்பினைக் கையாண்டுள்ளார் கவிஞர். அதிகாரத்தினுள்ளும் பொருள் இயைபு ஏற்படுத்தித் தொகுத்துரைத்துள்ளார். அதிகார வைப்புமுறைக்கான காரணங்களையும் ஆராய்ந்துள்ளார் கவிஞர். வள்ளுவர் கூறிய கருத்தினை வைத்தே பல குறட்பாக்களுக்குப் பொருள் காணும் நினைவாற்றல் உள்ளவர் என்பதும் அவர்தம் புதுஉரையால்

விளங்குகின்றது. மேலும் திருக்குறளுக்கு உரை தக்கவாறு எழுத திருக்குறளே வழிகாட்டும் என உறுதிபட நம்புகின்றார்.

இதனை அவரே,

> *பொதுவாக ஒரு குறளுக்கு உரை செய்யும் போது அந்த உரை திருக்குறளின் பண்புகளுக்குப் பொருந்துமா என்பதைக் கவனிக்க வேண்டும். கூர்ந்து பார்த்தால் எந்த உரைபொருந்தும் எதுபொருந்தாது என்பதைத் தீர்மானிக்கத் திருக்குறளே வழிகாட்டும்*
> **(திருவள்ளுவரும் பரிமேலழகரும், ப.86)**

என்று குறிப்பிட்டுள்ளமை வள்ளுவர் உள்ளத்தோடு ஒன்றியவர் கவிஞர் என்பதை உறுதிப்படுத்தும்.

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையும் இவர்தம் புதுஉரையைப் போற்றியுள்ளார். பரிமேலழகரை ஆராய்ந்து இ. சுந்தரமூர்த்தி அவர்கள் கவிஞரின் திருக்குறட்பணி குறித்த ஆய்வுரை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

> *விடுதலைப்பணியையும் தமிழ்ப்பணியையும் ஒருங்கே ஆற்றிய காந்தியுகக் கவிஞர் இராமலிங்கனாரின் திருக்குறட் பற்றையும், திருக்குறளின் பெருமையை அவர் உலகிற்கு உணர்த்திய விதத்தையும் வள்ளுவமே காந்தீயம் என்று கொண்ட உள்ளத்தையும் இனிது அறியலாம். நாமக்கல்லாரின் குறள் ஆய்வு நூல்களால் அவர் தரும் புதுமை விளக்கங்களையும் பழமைக்கு மாறுபடாத ஆனால் புதுமைக்கு அரண் செய்யும் புத்துரையின் அமைப்பினையும் ஆய்வுத்திறனையும் உணரலாம் (வள்ளுவம், சூலை-ஆகஸ்டு, 1999).*

வள்ளுவரின் உள்ளத்தை உள்ளவாறு உணர்ந்தவர் நாமக்கல் கவிஞர். அவர் உள்ளத்தை நாம் வள்ளுவத்திலும் காணலாம் அவர் படைப்புகளிலும் காணலாம். சிறந்த படைப்பாளராகவும் திறனாய்வாளராகவும் விளங்கும் கவிஞரின் புலமைக்குத் திருக்குறள் பற்றிய நூல்களே போதுமான சான்றுகளாகும்.

காமத்துப்பாலைப் பற்றிய பெதுவான விளக்கம் கவிஞரிடம் காணப்படுகின்றது. பரிமேலழகரிடம் இவ் விளக்கம் இல்லை. கவிஞர் 'காமத்துப்பால்' விளக்கும் செய்தியைச் சுருக்கமாகக் கூறுகின்றார். காமத்துப் பண்பாடு மாறினாலும் அடிப்படை உணர்வுகள் என்றும் மாறா என்பதை உணர்த்துவதாக இவருடைய காமத்துப்பால் விளக்கம் அமைந்துள்ளது என்று கூறலாம்.

முற்றுந்துறந்த முனிவர்கள் கூட அடக்கமுடியாமல் அவதிப்படுகின்ற காமத்தைத் துறவிகள் அல்லாதவர்கள் மிகச்

சுலபமாக, அலட்சியமாகத் திருக்குறளில் காமத்துப்பால் இல்லாமல் இருப்பது சிறந்தது என்று சொல்லத் துணிகின்றார்கள். திருக்குறளில் துறவறம் கூறப்பட்டிருக்கின்றது. அதே சமயம் இல்லறத்தைக் கருதித்தான் வள்ளுவர் திருக்குறளை எழுதியிருக்கிறார் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. இவ்வகையான இல்லறத்திற்குக் காமம் அடிப்படையான ஒன்று. அறம்,பொருள், இன்பம் மூன்றும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. மூன்றில் ஒன்றை விலக்கினாலும் வாழ்க்கைச் செம்மையாக இராது. காமத்தை விட்டொழித்த துறவிக்கு அறம் ஒன்றைத் தவிர மற்ற இன்பம், பொருள் என்ற இரண்டும் இல்லை. அந்த அறமும் கூடத் தன் உடலையும், மனத்தைமே பற்றிய துறவு ஒழுக்கமேயன்றிப் பிறருக்குச் செய்ய வேண்டிய அறம் ஒன்றும் துறவிக்கு இல்லை. என்று கவிஞர் காமம் பற்றிய அதிகாரத்திற்கு விளக்கம் கொடுக்கின்றார்.

இருவரும் அதிகார விளக்கத்தில் அதிகாரத்திற்குரிய பெயரினை விளக்குகின்றனர்.

பொருட்பால் முழுவதையும் பரிமேலழகர் அரசனுக்குரியதாக எண்ணி விளக்குகின்றார்.

கவிஞர் எல்லாருக்கும் பொது நீதியைக் கூறுவதாகக் கூறுகின்றார். செங்கோன்மை, கொடுங்கோன்மை; வெருவந்த செய்யாமை; ஒற்றாடல் ஆகிய அதிகாரங்கள் அரசனுக்கு மட்டும் உரியனவாகப் பரிமேலழகர் வழியிலேயே கூறுகின்றார்.

கவிஞர் சில அதிகாரங்களில், அதிகாரங்களின் கருத்தை முன்னுரையாக அதிகார விளக்கத்தில் கூறுகின்றார். இம்முன்னுரை பரிமேலழகரிடம் காணப்படவில்லை.

'நீத்தார் பெருமை', 'தீ நட்பு', 'கூடா ஒழுக்கம்', 'புலவி' ஆகிய அதிகாரங்களை முன்னுள்ள அதிகாரங்களுடன் தொடர்புபடுத்தி விளக்கும் திறம் நாமக்கல் கவிஞரிடம் காணப்படுகின்றது.

இயல் விளக்கம் கவிஞரிடம் காணப்படுகின்றது. இதற்குப் பரிமேலழகர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அங்கவியலைப் பரிமேலழகர் அரசியலுக்குரிய அங்கங்களாக எண்ணுகின்றார். நாமக்கல் கவிஞர் இவ்வியலை எல்லாருக்கும் பொதுவானதாக எண்ணுகின்றார்.

நாமக்கல்லாரின் உரையிலும் குறை காணமுயன்றவர் இருந்தனர். இதனை நடுநிலை வாய்ந்த கவிஞர் ஏற்றுக் கொண்டாலும் மறுக்க வேண்டிய விளக்கங்களை மறுத்து எழுதினார்.

# நாமக்கல் கவிஞர் காட்டும் வாழ்வியல் நெறிகள்

நெருக்கடிமிக்க இன்றைய காலகட்டத்திலும் தமிழர் அமைதியாக வாழும் வழிமுறையைக் கண்டறிந்து கூறியவர் நாமக்கல் கவிஞர். மென்மையும் மேன்மையும் நம்முடைய சொத்துகள் என்று உணர்த்தியவர். அதே வேளையில் உறுதியும் நெஞ்சுரமும் தேவை என வலியுறுத்தியவர். நாமக்கல் கவிஞரின் கவித்துவத்தைப் பாராட்டிய ம.பொ.சி. அவர்கள் கூறிய கருத்து எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

> எளிய நடை; பாமரரும் பாடி மகிழத்தக்க பாணி; பாடுவோரைச் 'சந்தி'யில் நிறுத்திச் சங்கடப்படுத்தாத புலமை; சரித்திர உண்மைகளை மறைக்கும் திரையாக அமையாத வருணனை. இவையனைத்தும் கூடியது நாமக்கல் கவிஞரின் கவித்துவம். இவர், பண்டிதர்-பாமரர் ஆகிய இரு சாராரிடையேயும் விடுதலை ஆவேசத்தை வளர்த்தார்.

(விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப.155)

மென்மையாகப்பாடி நெஞ்சுரத்தை வளர்ந்த பெருந்தகை நாமக்கல் கவிஞர். போர்கூட மென்மையானதாக இருக்க வேண்டும் என்று விரும்பியவர். காந்தி நடத்திய போரை அதனால்தான் ஆதரித்தார். அந்தப்போர் உறுதியாக வெற்றி பெறும் என நம்பி உண்மை உள்ளத்துடன் பாடலாக்கினார். பட்டி தொட்டி எங்கும் அது எதிரொலித்தது.

எல்லாக் கவிஞரையும் அடையாளங் காட்டும் பாடல்களை அறிவோம். ஒவ்வொரு கவிஞரைப்பற்றி நினைவுகூரும்போதும் அவர்தம் ஒரு பாட்டு மனத்தில் தோன்றும். நாமக்கல் கவிஞர்க்கும் ஒரு பாட்டு அவர்க்குப் புகழைத் தேடித்தந்தது. அது போரைப் பற்றிய மென்மையான பாட்டு. 'இந்தப் பிரசித்தி பெற்ற பாட்டுத்தான் நாமக்கல் கவிஞரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது. காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது, இப்பாடலைப் பாடித் தந்து தமிழ்மக்களின் உள்ளத்தில் இடம் பெற்றார். இராஜாஜி

தலைமையில் நடைபெற்ற வேதாரண்ய உப்புச்சத்தியாக்கிரகத்தின் போது தொண்டர்கள் வழிநெடுகிலும் இப்பாடலைப் பாடிச் சென்றனர். அத்தகைய சிறப்பு மிக்க பாடல்.

**கத்தியின்றி ரத்தமின்றி**
**யுத்த மொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை**
**நம்பும்யாரும் சேருவீர்....** (நா.க.பா. ப.115)

என்பதாகும். சுதந்திரம் எது என்றும் அதன் தன்மைகளையும் எடுத்துரைக்கின்றார். அச்சம் அற்றதும், அன்பு கொண்டதும் பிறருக்குத் துன்பம் செய்யாததும் பிச்சை பெற விரும்பாததும் நேர்மைத் தன்மை உடையதும் அறியாமை அகன்றதும் கடமையை நன்கு உணர்ந்ததும் அடிமைத்தனத்தை வெறுக்கின்ற தன்மை உடையதும் சுதந்திரம் என்று மிக நீண்ட பட்டியலைத் தருகிறார்.

**ஏழை செல்வனென் றெண்ணாது**
**எவருக் கும்குறை பண்ணாது**
**ஊழிய னாகப் பணிசெய்யும்**
**உலகுக் கெல்லாம் அணிசெய்யும்**
**வாழிய மக்கள் எல்லோரும்**
**வாழிய வென்றே அது கோரும்** (த.இ. ப.78)

என்று சுதந்திரத்தின் தன்மைகளைக் கூறுகிறார். அத்தகைய சுதந்திரத்தைப் பெறுவதற்குரிய வழிமுறைகளையும் கூறுகிறார். சுத்தம், பக்தி, சத்தியம் கொண்டு விளங்க வேண்டும். உழைத்தால் உயர்வுபெறுவது நிச்சயம். அன்பால் அனைவருக்கும் சேவைகள் செய்ய வேண்டும். சொல்வதைச் செய்ய வேண்டும் செய்வதையே சொல்ல வேண்டும்.

**கடவுள் நம்பிக்கையும் காந்தீயச் சிந்தனையும்**

உலக உயிர்கள் யாவற்றையும் ஆராய்ந்தால் அவற்றுக்குத் தோற்றத்தைக் கொடுக்கின்ற கருத்தா ஒருவன் இருக்க வேண்டும். அந்தக் கருத்தாவை மக்கள் தத்தம் மதங்களுக்கேற்ற வகையில் பெயர் சூட்டி வழிபட்டு வருகின்றனர். சான்றாக முகம்மதியர் 'அல்லா' என்றும், கிறித்தவர்கள்'பாமண்டலத்தே வாழும் பிதா' என்றும் சைவர் அரன் என்றும் வைணவர் அரி என்றுமாய்ப் பற்பலர் பற்பல முறைகளில் வணங்குகின்றனர். பெயர்கள் மதத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்றாலும் யாவரும் வணங்குகின்ற தெய்வம் ஒன்றே ஆகும். அழிகின்ற தன்மை உடைய பொருளைத் தேடி அலையாமல் அழியாத் தன்மை பெற்ற இறைவனை எண்ணுங்கள் என்று கூறுகிறார். இத்தகைய சிறப்புடைய தெய்வத்தை எண்ணுவதற்குக்கூட நேரம் இல்லை என்று கூறுகின்ற மக்களை

எண்ணி வருந்துகின்றார் கவிஞர். இத்தகையோருக்கு இறைவனைக் காண்பதற்குரிய எளிய வழிகளைக் கூறுகிறார். அதாவது தாம் செய்கின்ற செயல்கள் பலவற்றின் மூலமாகவே இறைவனைக் காணமுடியும் என்கின்றார். அவர் கூறுகின்ற செயல்களாவன:

1. துன்பப்படுபவரது துயரத்தைக் காணப் பொறுக்காமல் துடிதுடித்து ஓடித் துன்பம் நீங்கத் துணைபுரிதல்.
2. இன்பம் தமக்கென எதையும் வேண்டாமை.
3. யாவரும் சுகமாய் வாழச் சேவை புரிதல்.
4. பசியால் வாடுகின்ற மக்களைக் காணும்போது, வேகமாய் ஓடி அவர்களின் பசியைப் போக்குதல்.
5. நோயால் வாடுபவரைக் கண்ட அளவில் தாய்போல நோய் உற்றார் அருகிலிருந்து நோய் நீங்கத் தொண்டு செய்தல்.

**பரதேசி என்று வந்தோர் யாரானாலும்**
**பரிவோடு உபசரித்துப் பங்கும் தந்த**
**ஒருதேசம் உலகத்தில் இருக்கு மானால்**
**உண்மை, அது தமிழ்நாடு ஒன்றே யாகும்**
**(த.இ. ப. 103)**

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் அறப்போர் தொடங்கி வெற்றி பெற்ற சிறப்பெல்லாம் தமிழருக்கே மிகுதியாகச்சேரும்.

சத்தியா கிரகத் தொண்டர்களின் ஆர்வத்தினை மிகுதிபடுத்துவதற்குப் பாரதியாருடைய பாடல்கள் மிகவும் பயன்பட்டன. மேலும் விடுதலை இயக்கத்தில் கலந்துகொள்வதற்கும் பொது மக்களிடமிருந்து பயத்தைப் போக்கவும் அவை உதவின என்பது நாமக்கல்லாரின் நம்பிக்கை.

தெய்வபக்தி, காந்தீயம், தேசபக்தி, தேசத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்கள், தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, சமுதாயம், சமாதானம் என்று அவர் மனத்தின் பாடுகளங்கள் பலவாறாக விரிந்த தன்மையை அவருடைய பாடல்களும், நூல்களும் பறைசான்றுகின்றன.

**கடவுள் சிந்தனை**

இப்பூவுலகினைப் படைத்துக்காத்து வரும் இறைவன் உருவம் அற்றவன். மனத்தில் சலனமில்லாமல் எண்ணுவோர்க்குச் சத்திய வடிவினனாய் விளங்குபவன். பல்வேறு சமயங்களாகப் பிரித்து வழிபடுவோர்க்கும் கடவுள் என்ற நிலையில் ஒரு தனியனாக

இருந்து அருளுபவன். விஷ்ணு, சிவன், புத்தர், ஏசு என்று அவர்வர்க்கேற்ற நிலையில் நிற்பவன். இறைவன் ஒருவனே அவனே பல்வேறு கடவுளர்களாகக் காட்சி அளிக்கிறான் என்பதை,

**அல்லாவாய்ப் புத்த னாகி**
**அரனரி பிரம்ம னாகி**
**அருளுடைச் சமணர் தேவும்**
**அன்புள்ள கிறிஸ்து வாகிக்**
**கல்லாத மனத்திற் கூடக்**
**காணாமல் இருப்பா ரந்தக்**
**கடவுளென் றுலகம் போற்றும்**
**கருணையைக் கருத்தில் வைப்போம்**

**(நா.க.பா.ப.2)**

என்ற பாடலின்வழி அறியலாம். இவ்வாறு இறைவனின் இயல்பினை எடுத்தியம்பிய கவிஞர் பராசக்தி, கண்ணன், முருகன் என்ற ஒவ்வொரு கடவுளர் குறித்தும் தனித்தனியே இயம்பியுள்ளார். கவிஞர் தெய்வபக்திப்பாடல்கள் இயற்றுவதிலும் பாரதியைப் பின்பற்றி உள்ளார் என்பதை இதன்மூலம் அறியலாம். இயற்கை நிகழ்வுகள் யாவும் நடைபெறுவதற்குக் காரணமாக இருப்பவன் இறைவன். இயற்கைவடிவங்களைத் தாங்கி நிற்பவனும் இறைவன் என்கிறார்.

**தெய்வபக்தி தீமை செய்ய இடந்தராது**
**தீங்குவர நேர்ந்தாலும் இழந்திடாது**
**தெய்வ நிலையில்லாத நெஞ்சினோரே**
**தீங்கிழைக்க ஒரு சிறிதும் அஞ்சிடாதார்**

**(நா.க.பா. ப.393)**

என்னும் அடிகளில் தெய்வபக்தியின் தேவையை எடுத்துரைக்கிறார். கடவுள் நம்பிக்கையையும் ஆலய வழிபாடுகளையும் வெறுத்துப் பேசுபவர்களையும், கேலிசெய்வோரையும் கண்டு கவிஞரின் உள்ளம் வருந்தியது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழ்நாட்டில் போற்றி வளர்த்த பண்பாட்டிற்கு இச்செய்கை விரோதமானது என்கிறார். வானளாவ விளங்குகின்ற கோபுரங்களும் ஆலயங்களும் இறைவனின் இருப்பினை நமக்குப் பறைசாற்றுகின்றன. தமிழ் இலக்கியங்களில் மிகப் பழங்காலந்தொட்டே பக்திமணம் கமழ்வதை எடுத்துக்காட்டுகிறார்.

**கோயில்களின் பெரும்பயனைக் குறைத்துப்பேசி**
**கும்பிடுவோர் நம்புவதைக் குலைத்தும் ஏசித்**
**தூயவழி வாழ்வதற்கு நல்லோர் கண்ட**
**துறவுமனப் பொறைஅறிவைத் துவேசம்சொல்லி**

வாயில்வந்த கொச்சைகளால் வசைகள்வீசி
வகுப்புகளில் வெறுப்புகளே வளரச் செய்யும்
ஞாயமற்ற பேச்சுகளை நீக்காவிட்டால்
நம்முடைய தமிழ்வாழ்வு நாசமாகும்

*(நா.க.பா.ப.50)*

*என்று கூறுகின்றார். தமிழ்வாழ்வு சமயஞ்சார்ந்த வாழ்வு என அழுத்தமாக உரைக்கின்றார். காந்தீயத் தாக்கம் இவருடைய படைப்பான மரகதவல்லி என்ற புதினத்திலும் காணப்படுகிறது. முற்றிலும் காதல் தொடர்பான இப்புதினத்தில் பரமசிவன் என்ற பாத்திரத்தின் வழியே காந்தியச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார். சான்றாக அப்பாத்திரத்தின் தன்மைகளை எடுத்துரைக்கும் போக்கினை இங்குக் காண்போம்.*

> *டாக்டர் பரமசிவம் மிகவும் உண்மையான காந்தி பக்தர். மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் நடத்திய காலத்தில் சிறை சென்றவர். தன்னுடைய தொழிலில் ஏழை மக்களுக்கு மிகவும் உபகாரி. காந்திய சாந்த சத்திய சன்மார்க்கமே மனித வர்க்கத்தில் காணப்படுகிற பலவித சச்சரவுகளையும் தீர்க்கக்கூடிய நன்மருந்து என்ற நம்பிக்கையுடன் நடந்து கொள்பவர். எந்த நேரத்தில் எவர் வந்து எங்கே கூப்பிட்டாலும் முகம் கோணாமல் ஓடி உதவக்கூடிய உத்தமர்.*
>
> *(நாமக்கல் கவிஞரின் உரைநடைப் படைப்புகளில் காந்தியமும் தேசியமும், ப.89)*

*கடவுளுக்கு அடுத்த நிலையில் கவிஞர் வணங்குவது காந்தியடிகளையே. உலகத்தில் காணப்படுகின்ற துன்பங்கள் தீமைகள் யாவற்றையும் போக்குகின்ற பெருமருந்தாக அமைவது அகிம்சை வழி என்பது அவருடைய திடமான நம்பிக்கை.*

**காந்தியம்**

*ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து கணப்படுகின்ற இந்நாட்டில் அனைவரையும் சரிசமனமாக எண்ணுகின்ற தன்மைகொண்ட காந்தியை எண்ணுவோர்க்குத் துயரங்கள் வராது என்கிறார் கவிஞர். தமிழ்கூறு நல்லுலகம் முழுவதும் காந்தீயத் தத்துவமான அகிம்சையைப் போதிக்க வாழ்வை அர்ப்பணித்த அண்ணல் காந்தியை ஓர் அவதாரமாகக் காண்கின்றார். பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் கூறிவந்த குறிக்கோள்கள் எல்லாம் சேர்ந்து ஓருரு கொண்டது போலக் காந்தியடிகளைக் கவிஞர் கண்டார். மேலும் காந்தியடிகளின் அன்றாட வாழ்க்கை முறையிலிருந்து*

ஒவ்வொருவரும் என்னென்ன கற்க வேண்டும் என்பதையும் எடுத்துரைத்துள்ளார்.

> காந்தியடிகளைப் போல அதிகாலை விழிக்க வேண்டும்; காற்றாட உலவவேண்டும்; குளிர் நீரில் முழுகவேண்டும்; அளவாகப் புசிக்க வேண்டும்; ஒழுங்காகத் திட்டம் போட்டுக் காரியங்களைச் செய்ய வேண்டும்; எத்தனைதான் கடிதங்கள் வந்திருப்பினும் அத்தனைக்கும் பதில் எழுதும் நியமம் வேண்டும்; காலந்தவறாமையைக் காக்க வேண்டும்; சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும்; குற்றம் ஒன்று செய்துவிடில் கூசாமல் மன்னிப்புக் கோரவேண்டும்; மற்றவர்கள் செய்துவிட்ட குற்றத்தை மன்னித்து மறக்க வேண்டும்; சிறு துளியும் வீணாகாமல் செலவு செய்யும் சிக்கனங்கள் பழக வேண்டும்; கைத்தொழிலின் பெருமை கொண்டு கைராட்டை நூற்க வேண்டும்; மக்களுக்குச் செய்கின்ற சேவையே இறைவனுக்குச் செய்கின்ற சேவையாகும் என்பதை உணர வேண்டும். எம்மதமும் சம்மதம் எனக் கருதவேண்டும்; கடவுளுக்கே அன்றி மற்ற யாவர்க்கும் அஞ்சலாகாது
>
> (நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை;
> இந்திய இலக்கியச் சிற்பிகள்; ப.57)

என்று காந்தி அடிகளிடமிருந்து கற்க வேண்டியவற்றை பட்டியலிடுகிறார். மேலும் அகிம்சாவாதிக்குரிய இலக்கணங்கள் பற்றி எடுத்துரைக்கிறார். பொறுமையின்வடிவமாகத் திகழ வேண்டும் என்பதை,

> குத்தீட்டி ஒருபுறத்தில் குத்த வேண்டும்
> கோடாரி ஒருபுறத்தைப் பிளக்க வேண்டும்
> ரத்தம்வரத்தடியாா ரணமுண் டாக்கி
> நாற்புறமும் பலர்உதைத்து நலியத் திட்ட
> அத்தனையும் நான்பொறுத்தே அஹிம்சை காத்தும்
> அனைவரையும் அதைப் போல நடக்கச் சொல்லி
> ஒத்துமுகம் மலர்ந்(து) உதட்டில் சிரிப்பி னோடும்
> உயிர்துறந்தால் அதுவேஎன் உயர்ந்த ஆசை
>
> (நா.க.பா.ப.111)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

கவிஞர் காந்தியடிகள்பால் ஈர்க்கப்பெற்றதற்குக் காரணமாகத் திருக்குறளைச் சொல்லலாம். அதாவது அதற்குக் காரணம் திருக்குறளில் பொதிந்து கிடக்கின்ற பண்டைய தமிழ்ச் செய்திகள், குறிக்கோள்கள் ஓர் உருவம் கொண்டு வந்ததைப்போலத் தோற்றம் அளிப்பதே ஆகும். அகிம்சை ஒன்றால் மட்டுமே போரையும் அதனால் ஏற்படுகின்ற இழப்புகளையும் தடுக்க முடியும் என்பதை,

**காந்திநாமம் வாழ்கவென்று**
**கைகுவித்துக் கும்பிடு**
**சாந்தமாக உலகமெங்கும்**
**சண்டையின்றி இன்புறும்** (நா.க.பா.ப.84)
**சத்தியம் சாந்தம் இரண்டு சரக்கைச்**
**சமனிடை அன்பெனும் தேனில் குழைத்துப்**
**பத்தியம் தெய்வ நினைப்போடும் உண்டால்**
**பாருக்குள் பேருக்கும் போரில்லைகண்டாய்**

என்னும் பாடலில் (காந்தியடிகளின் பெருமை) தெளிவாகக் கூறுகின்றார். இந்திய நாடானது சுதந்திரம் பெறுவதற்கு வழிகளைக் கண்டறிந்தவர் காந்தி. அவர் அஞ்சிக்கிடந்த மக்களைத் துணிவுடன் செயல்பட வைத்தார். பிறரைத் துன்பப்படுத்தாது வாழ்ந்தவர். ஆயுதங்கள் இன்றியும் மக்கள் வணங்குகின்ற அகிம்சை முறையினைக் கண்டு அறிந்தவர் காந்தியடிகள். உண்மை ஒன்றையே பேசிக் கோபத்தை நீக்கி வாழ்ந்தவர். தீண்டாமைக் கொடுமையை அகற்றினார். தனக்குத் துன்பம் இழைப்பவர்களுக்குக் கூட அன்பு செய்யும் தன்மையினை உடையவர்.

**உடலினும் உயிரினும் உள்ளிருக்கும் ஒன்று**
**உயர்ந்தது காணும் என்றே-இந்தக்**
**கடலுலகத்தினில் கண்ணுக்கு முன்னாகக்**
**காட்டிவிட்டார் காந்தி**
**காந்தியெனும் பெயர்சாந்தம் எனும் சொல்லின்**
**காட்சியின் சாட்சியன்றே-இனி**
**மாந்தர் எங்குமே ஏந்தி அதன்வழி**
**மங்களம் எய்திடுவார்** (தமிழன் இதயம், ப.32)

காந்தியடிகளைப் பற்றி மட்டுமல்லாமல் கதரின் சிறப்பு, கைத்தொழிலின் பெருமை, மதுவிலக்கின் மாண்பு, தீண்டாமையின் தீமை, கள்ளுக்கடை ஒழிப்பு முதலிய பல்வேறு பணிகள் பற்றியும் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார் கவிஞர்.

நாட்டைப் பற்றியும், காந்தியடிகள் பற்றியும் பல்வேறு பாடல்களைச் சிறப்பித்துப் பாடியுள்ள கவிஞர் அதனோடு

நில்லாமல் மற்றும் பலரைப் பற்றிப் பாடி அவர்களிடமிருந்து நாம் அறிய வேண்டியவற்றையும் அவர்களுக்காக நாம் செய்ய வேண்டியவற்றையும் பற்றி விரிவாகத் தம்முடைய பாடல்களின்வழி விளக்குகின்றார். அவ்வகையில் திலகர், இராமகிருஷ்ணர், நேரு, தாதாபாய் நௌரோஜி, கோகலே, வ.வே.சு. ஐயர், கவி தாகூர், கவிமணி தேசிகவிநாயகம், வ.உ.சி., சுப்ரமணிய பாரதி, உ.வே.சாமிநாத ஐயர் எனப் பற்பலரைப் பற்றிப் பாடியுள்ளார்.

**சமூகச் சீர்திருத்தங்கள்**

கவிஞர், நாட்டிற்குக் கேடு விளைவிக்கக்கூடிய சமுதாயப் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்துத் தொடர்ந்து சிந்தித்ததுடன் மட்டும் அல்லாமல், அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் ஆராய்ந்து எழுதிட உள்ளார். அவ்வழிமுறைகள் யாவும் காந்தியத்தினை அடிப்படையாகக் கொண்டவை. வறுமையும், ஏழ்மையும் இல்லாத ஒரு சிறந்த சமுதாயத்தினை உருவாக்குவதே அவருடைய விழைவாக இருந்துள்ளது.

பொதுவுடைமைவாதிகள் வன்முறைப் புரட்சி மூலம் பொருளாதாரச் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க எண்ணுவதால் இவர் அவர்களின்று வேறுபடுகின்றார். காந்தியடிகள், வினோபாஅடிகள் போன்றவர்களால் எடுத்துரைக்கப் பெற்ற தர்மகர்த்தா முறை என்ற அகிம்சை வழியின் மூலமாகச் சிறந்த, புதிய சமுதாயத்தை அமைக்க முடியும் என்கிறார் கவிஞர். வாய்மை, பிறருக்குத் துன்பம் தராத தன்மை இவற்றின் மூலமாகச் சமுதாயமாற்றம் நிகழ வேண்டும். மாற்றங்கள் ஏற்படுவதற்குப் புரட்சி வேண்டும். ஆனால் அந்தப் புரட்சியானது பிறரைத் துன்புறுத்தக்கூடிய போர் மற்றும் வன்முறையின் மூலமாக உருவாகக்கூடாது. பொருளாதாரச் சமத்துவம் குறித்துக் கவிஞர் பேசும்போது மேல்நிலையில் இருப்பவர்களைக் கீழ்நிலைக்குக் கொண்டுவர எண்ணவில்லை. கீழ்நிலையில் இருப்பவர்களையே மேல்நிலைக்குக் கொண்டுவர விரும்புகிறார்.

**சமுதாயச் சீர்திருத்தம்**

சமுதாயம், பண்பாடு ஆகிய துறைகளில் பரவிக்கொண்டிருந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் (Renaissance Movement) செல்வாக்குக்கு ஆட்பட்ட கவிஞர், சிசுக் கொலை, சதி, குழந்தைத் திருமணம், தீண்டாமை, வரதட்சணைக் கொடுமை போன்றவற்றை வெறுத்தார். மேலும் மறுமணம், தீண்டாமை ஒழிப்பு, கலப்பு மணம், சமபந்தி போன்றவற்றை ஆதரித்தார்.

இவர் விரும்பிய சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகள் இவருடைய படைப்புகளிலும் பறைசாற்றப்படுகின்றன. சான்றாகச்

சிலவற்றைக் காணலாம். கவிஞருடைய முதல் புதினம் 'மலைக்கள்ளன்'. இப்புதினத்தின் கதாநாயகன் மலைக்கள்ளன். மலைகளில் வாழ்ந்து வந்ததால் அவனை இவ்வாறு அழைத்தனர். விஜயபுரி என்ற செல்வம் மிகுந்த நிலக்கிழார்கள் வாழ்ந்த ஊரில் கொள்ளையடித்து வாழ்ந்தான். எதிர்பாராத சூழலில் பொருட்கள் மட்டும் அல்லாமல் பலர் காணாமல் போய்விடுவார்கள். அவற்றுக்குக் காரணம் மலைக்கள்ளன்தான் என்பது அனைவருக்கும் தெரியும். ஊராருக்குத் தீமை விளைவிக்கின்ற பணக்காரர்களை மட்டுமே அவன் தூக்கிச்சென்று துன்புறுத்துவான். தீய பணக்காரர்களிடமிருந்து கொள்ளையடித்து அவற்றை நல்லவர்களான வறியவர்களுக்கு வழங்குவான். அறத்துக்குப் புறம்பான செயல்களை முறியடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தான். இப்புதினத்தின் கதாநாயகனின் அறிமுகத்திலிருந்தே ஆசிரியரின் நோக்கம் வெளிப்படுகிறது. தன்னை ஒரு கொடிய வன்முறையாளன்போலக் காட்டிக் கொண்டாலும், உண்மையில் தானொரு அகிம்சைவாதியே என்றும், தற்காப்புக்கு மட்டுமே தான் வன்முறையைப் பயன்படுத்தியதாயும் தன்னால் கைப்பற்றப்பட்ட கைதிகளில் ஒருவனைக்கூடத் தான் கொல்லவோ, துன்புறுத்தவோ இல்லை என்றும் கூறுகிறான் மலைக்கள்ளன். ஒரு கொள்ளைக்காரனைக்கூட இம்சைவாதியாக ஆசிரியரால் சித்திரிக்க முடியவில்லை என்பதை இக்கதை மூலம் அறியலாம். மலைக்கள்ளன் தனக்குத் திருக்குறள் மீது மிகுந்த ஆர்வம் உண்டு என்றும் திருக்குறளில் கூறப்பட்டுள்ள செய்திகளே தன் குறிக்கோள் என்றும் கூறுவதாகக் கதைமாந்தர் இயல்பைச் சித்திரிக்கிறார். அதற்குச் சான்றாகக் குறளையும் எடுத்துரைக்கிறது அவருடைய கதாபாத்திரம்.

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கம் கடை** **(குறள். 328)**

அதாவது, ஒருவன் அடைய விரும்புகின்ற குறிக்கோள் பெரிதாக இருப்பினும் மக்களைக் கொல்வதன் மூலம் அதை அடைவதென்றால், அக்குறிக்கோள் உண்மையில் கடையாய தன்மையது என்பது இதன் பொருள். இதுவே காந்தியத் தர்மம்; காந்தியத் தாக்கம் நாமக்கல்லாரின் படைப்புகள் யாவிலும் விரவி இருப்பதைக் காணமுடிகிறது.

புதிய சமுதாயத்தினைக் காணவேண்டும் என்ற விழைவு அவர் உள்ளத்தில் இருந்த நிலையை அவருடைய பாடல்கள் வழி அறியலாம். அவர் காண விழைந்த புதிய சமுதாயம் எவ்வாறு

இருக்க வேண்டும் என்று அவரே தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

> பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்;
> பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்;
> கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்;
> குற்றேவல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்;
> வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டும்
> வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
> நாட்டோடு சேராத தனிபோக உரிமை
> நடவாதிங் கினியென்று நாமறிதல் பெருமை
>
> (இந்திய இலக்கியச்சிற்பிகள்-நாமக்கல்
> இராமலிங்கம்பிள்ளை, ப.132)

உடல் வடிவத்தில் மக்களுக்குள் வேறுபாடுகள் உண்டு. உள்ளம் எண்ணுகின்ற எண்ணங்களிலும் வேறுபாடுகள் உண்டு. ஆனால் இந்த உடலை ஆளுகின்ற பசியும் தாகமும் அனைவருக்கும் உரிய, சமமான ஒன்றாகும். கடலிலே பாடுபட்டு உழைக்கின்ற தொழிலாளர்கள் உண்பதற்குக் கஞ்சிகூட இல்லாமல் கண்ணீர் சிந்துகின்ற நிலைக்கு மாற்றம் எதுவும் வராது என்றால் மனிதர் பிறருக்கு அறிவுள்ள மாற்றங்கள் ஏன்?

நாளெல்லாம் பாடுபட்டு உழைத்துப் பெறுகின்ற பலன்களை யாரோ ஒருவன் முதலாளி என்ற பெயரில் பறித்துச் செல்ல, பசியோடு வாடிநிற்கும் தொழிலாளர்கள் நம்மைப் பகைவர்கள் என்று எண்ணிப் பழி வாங்குகிற நிலையினை அடைவதற்கு முன்பாக, இந்த இழிநிலையை மாற்றுவதற்கு அனைரும் ஒன்றுபடுவோம். வறுமை என்ற சொல்லுக்கே இடம்தராமல் சமுதாய வாழ்வினைப் புகழ் மிகுந்த முறையில் உருவாக்குவோம். எல்லார்க்கும் எல்லாமும் என்ற நிலையினை அடைய வேண்டும். என்று புதிய சமுதாயத்தினை உருவாக்குவதற்குரிய வழிமுறைகளை முன்வைக்கின்றார் கவிஞர்.

கடன்படுவதை எண்ணி ஒருதுளிகூட வருத்தமின்றிக் கடன்வாங்கும் மனிதர்களைப் பார்த்து மன உளைச்சலையும் வேதனையையும் தரக்கூடிய கடனை வாங்குவதால் ஏற்படும். தீமைகளைக் கூறுகிறார். திருப்பித் தரும் சக்தியின்றிக் கடன் வாங்குதல் ஏமாற்று வேலையாகும்.

> **கடன்பட்டே இன்புறுதல் சுவர்க்க மேனும்**
> **கடன் வாங்கும் துன்பத்தைத் தவிர்க்க வேண்டும்**
> **கடன் தீர்க்கும் வழிவகையை எண்ணிடாமல்**
> **கடன் பட்டிங் கழிவடைந்தோர் எண்ணிலாதோர்**
>
> **(நா.க.பா.ப.400)**

என்று இவ்வுலகில் கடன்பட்டு அழிந்தவர்களைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் தனிமனித ஒழுக்கம் எவ்வாறமைய வேண்டும் என்றும் கூறிய நாமக்கல்லார், மாணவன் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கிறார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் சான்றோர்களின் வாக்குப்படி மதித்து நடக்கின்ற பிள்ளைகள் ஆசானை வணங்கவும் செய்வார்கள். குருபக்தி இல்லாத மாணவர்களின் வாழ்க்கை குழப்பத்திற்கு உள்ளாகும். பள்ளியில் பயில்கின்ற கல்வியில் முக்கியமானது ஒழுக்கம் என்ற உண்மையை மாணவர்கள் உணர வேண்டும். வேதனைகள், துன்பங்கள் வந்தாலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்தால் வேதனைகள் விலகி நின்று வெற்றிக்கு வழி கொடுக்கும். எனவே அதனை உயிரைவிட மேலான ஒன்றாகக் கருதிக் காத்தல் நலம் பயக்கும்.

**வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்**
**வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவினோர்க்கே**
**ஆதலினால் மாணவர்நல் லொழுக்கம் தன்னை**
**ஆருயிர்போல் கருதி அதைக் காக்க வேண்டும்**
**(நா.க.பா.ப.395)**

என்னும் அடிகளால் சுட்டுகின்றார். பிள்ளைகள் தன் பெற்றோருக்குச் செய்யக்கூடிய மிகப்பெரிய உதவி நற்பெயரை ஈட்டித் தருவதுதான். அதையே வள்ளுவர்,

**மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்லெனும் சொல் (குறள். 70)**

என்னும் குறளில் குறிப்பிடுகின்றார். இக்கருத்தினை ஒட்டி நாமக்கல்லார்,

**என் மகனே உன் வாழ்வு சிறக்க வேண்டும்**
**எப்போதும் தெய்வபக்தி இருக்க வேண்டும்**
**நன்மகனென்றுனை யாரும் புகழச் செய்யும்**
**நானும்உன் நற்றாயும் மகிழச் செய்யும் (நா.க.பா.ப.393)**

என்று கூறுகின்றார். மேலும் அவர் பல்வேறு வகையான நற்கருத்துகளை மக்களுக்காக எடுத்துரைக்கிறார். மனிதனுக்கு ஆசை என்பது என்றும் உள்ளது. ஆனால் அந்த ஆசையானது அளவோடு இருக்கும்வரை தவறில்லை. அவ்வாசையே அளவுக்கு

அதிகமானால் அது வாழ்வின் அமைதியை அடியோடு சாய்த்துவிடும். செல்வத்தால் உயர்ந்தவன் அதை எண்ணிச் செருக்குக் கொண்டு அலைதல் கூடாது. மக்களுக்குள் பேதம் பிரித்துப் பார்த்தல் கூடாது. எளியோரை மதிப்பின்றி எண்ணக்கூடாது. எவராய் இருப்பினும் உதவி செய்தல் வேண்டும். இவ்வாறு நடந்துகொண்டால் இத்தகைய நற்குணங்களே அவனுக்கு இனிமையான வாழ்வினை நல்கும். செய்கின்ற தொழில் எதுவாய் இருப்பினும் அதனை மதித்துப் போற்றுதல் வேண்டும். பணிவு என்பது செயலிலும் பேச்சிலும் இருக்க வேண்டும். புன்னகையுடன் பேசுவதும் பழகுவதும் நலம் பயக்கும். இத்தகைய செயல்பாடுகள் எத்தகைய முரண்பாடுகளையும் உடைத்தெறியும். யாரிடமும் பகையினை உருவாக்கிக் கொள்ளாத பண்பினை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

**நகைமுகம் இனியசொலும் நல்ல செல்வம்**
**நஞ்சமன்ன வஞ்சரையும் நயந்துவெல்லும்**
**பகை எவரும் ஆகாமல் பார்த்துக் கொள்க**
**பகைநேரின் சமரசமாய்த் தீர்த்துக் கொள்க**

***(நா.க.பா.ப.394)***

என்கிறார் கவிஞர். இராமனுக்கு வசிட்டர் கூறும் அறிவுரையே இது.

யாதொரும் பகைகொள்ளலன் என்ற பின் போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்கும் என்பார் கம்பர்.

இதனை ஆண்மை என்றும் கூறுவார். அதன் இயல்பை,

**மிஞ்சாத கோபம் ஆண்மை**
**மிஞ்சினால் காத்தல் ஆண்மை**
**துஞ்சாத ஊக்கம் ஆண்மை**
**துன்பத்தில் துணையாம் ஆண்மை** ***(நா.க.பா.ப.408)***

என்னும் அடிகளில் இயம்புகின்றார்.

வாய்மையும் நேர்மையும் நல்லொழுக்கத்தைக் காத்து நிற்கும். உலக உயிர்கள் யாவற்றிற்கும் அன்பு செய்து வாழ்தல் அமைதி நிறைந்த வாழ்வினை நல்கும். அஞ்ச வேண்டிய செயல்களுக்கு அஞ்சி நடக்க வேண்டும் என்று பல்வேறு சிந்தனைகளை முன்வைக்கிறார்.

**கவிஞரின் தேசியச் சிந்தனைகள்**

விடுதலை பெறுவதற்கு முன்பே "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" என்று பாடியவர் பாரதியார். அடுத்து வந்த நாமக்கல்

கவிஞரும் நாடு விடுதலை அடைவதற்கு முன்னர்ச் சுதந்திரத்தின் இன்றியமையாமை பற்றியும், சுயராஜ்யம் அல்லது தன்னாட்சியைப் பற்றியும் ஏராளமான பாடல்களை பாடியுள்ளார்.

*பாரத நாடென்றன் பாட்டன்றன் சொத்து*
*பட்டயத் துக்கென்ன வீண்பஞ்சா யத்து?*
*யாரிதை வேறோர் அன்னியர் ஆள?*
*அஞ்சிக் கிடந்தது போனது மாள;*
*'வாரவர் போறவர்' யாரையும் நம்பி*
*வாடின காலங்கள் ஓடின தம்பி*
*வீரமும் தீரமும் வெற்றுரை யாமோ?*
*விடுதலை வேண்டுதல் விட்டிடப் போமோ?*
*(நா.க.பா.ப.117)*

தேசபக்தி உள்ளவர்கள் தேசியக் கொடியின்மீதும் பற்று இருக்க வேண்டும் என்று கூறுகிறார். தேசியக் கொடி குறித்த பாடல்களையும் பாடியுள்ளார். கற்புடைய பெண்கள் கணவன் தெய்வமாகப் போற்றப்படுவதைப்போல வீரம்மிக்க வீரர்களுக்குக் கொடியே தெய்வமாகும் என்று கூறுகிறார். மேலும் தேசியத் தலைவர்கள் பற்றியும் பாடியுள்ளார். திலகர், தாதாபாய் நௌரோஜி, கோகலே, இராமகிருஷ்ண பரமஹம்சர், தாகூர், வல்லபாய் பட்டேல், வ.உ.சி., விவேகானந்தர், திரு.வி.க. சத்தியமூர்த்தி, இராஜாஜி, காமராசர், பாரதியார் போன்றவர்களைப் பற்றிப் பாடி, அதில் அவர்களுடைய தனிப்பண்புகளை எடுத்தியம்புகிறார். இராமலிங்கம்பிள்ளை ஒரு ஓவியராக இருந்ததினால், பாடல்களின் மூலமும் தலைவர்களைப் பற்றிச் சொல்லோவியங்களைத் தீட்டியுள்ளார். சான்றாக அவர் பாரதியைப்பற்றிப் பாடுகின்றபோது அவரது பாடல்களைக் கேட்டவுடனே மக்கள் எவ்வாறு வீரமும் தீரமும் பெற்றுத் தேசவிடுதலைக்காகப் பாடுபட முன்வருவர் என்று கூறுகிறார்.

*படித்தறியா மிகஏழைக் கிழவ னேனும்*
*பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்*
*துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்*
*துளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி*
*எடுத்தெறிய வேண்டுமிந்த அடிமைவாழ்வை*
*இப்பொழுதே இக்கணமே! என்றென் றார்த்திங்(கு)*
*அடித்துரைத்தே ஆவேசம் கொள்வா னென்றால்*
*அப்பாட்டின் பெருமை சொலயாரோ – வல்லார்*
*(நா.க.பா.ப.33-34)*

குடியரசு தினம், தீபாவளி, பொங்கல் ஆகிய பண்டிகைகளைக் குறித்தும் பாடியுள்ளார். தேசியத் தலைவர்களின் பிறந்த நாட்களின்போது அவர்களை வாழ்த்திப் பாடுவார்.

ஆரோக்கியமாகவும் வாழவேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் அவர் பல பாடல்கள் புனைந்துள்ளார். தொடக்கத்தில் சுகதாரத்தைப் பற்றிப் பாடியுள்ளார். சுகாதார வாரக் கொண்டாட்டங்களில் அவரது பாடல்கள் பாடப்படுகின்றன. அப்பாடல்களின் மக்கள் எவ்வெவ்வாறு அன்றாடப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். தினமும் குளித்தல், மிதமாக உண்ணல், ஆரோக்கியமான பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை அவர் உணர்த்தியுள்ளார். ஆரோக்கிய விதிகளைக் கடைப்பிடிக்காமல் அவற்றை மீறி அவதிக்குள்ளாகும் அறிவீனர்கள், எல்லாம் தலைவிதி என்று பிதற்றுவதில் பொருளேயில்லை என்று அவர் கூறுகிறார்.

"தேசபக்தி தமிழை வளர்த்தது. தமிழ் தேசபக்தியை வளர்த்தது" என்று கூறுவார் ம.பொ. சிவஞானம் (விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப.63). நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையை நாமக்கல் கவிஞராக மாற்றியது இத்தகைய தேசபக்தி என்று கூறலாம். ஓவியராகத் திகழ்ந்த நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையை நாமக்கல் கவிஞராக மாற்றியது "இந்திய விடுதலையில் தான் கொண்டிருந்த தீராத தாகமேயாகும்" என்று தம்முடைய சுயசரிதையில் தாமே கூறுகின்றார் நாமக்கல் கவிஞர். (நாமக்கல் கவிஞர், என் கதை, ப.131). சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்து, தனித்துயர்ந்து நின்ற இந்தியர், வறுமை, பஞ்சம், நோய் இவற்றில் சிக்கிட அடிமைகளாய் மானம் இன்றி வாழ்கின்ற நிலையையும், இவ்இழி நிலையை அவர்கள் அடைவதற்குக் காரணம் எவையென்றும் விளக்குகின்றார். சுயநலமும் ஒற்றுமையின்மையும் பண்டைய நீதி நெறிகளின் வழி நடவாமையுமே இத்தகைய எல்லாத் தொல்லைகட்கும் காரணம் என்பதைத் தம் பாடல்கள் வழியே தெளிவாக உணர்த்துகின்றார்.

**மான மிழந்து மதியிழந் துபுகழ்**
**தானமி ழந்துத வமிழந்து**
**ஞானமி ழந்துநல மிழந்துநாமும்**
**போன கதியினைப் பாருங்கடி**
**நல்ல குடியிற் பிறந்தோ மடி, நாமும்**
**நல்ல நிலையிலிருந்தோமடி**
**தொல்லைப் பிறப்பும் புகழும் மறந்து நாம்**
**தொண்டுசெய் தொண்டரின் தொண்டநானோம்**

***(நா.க.பா.ப.304)***

"இனி நாம் செய்ய வேண்டுவதென்ன?" என்பதைக் கூறுகிறார். இனம், குலம் முதலிய வேறுபாடுகளை மறந்து இந்தியத் தாயைப் போற்ற வேண்டுமென்றும் சுதேசியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். சமத்துவ, சகோதரத்துவ சிந்தனைகளை,

இந்தியத் தேவியைப் பூஜை செய்யுமந்த
இந்திய ரெல்லாரும் ஒன்றடியே
எந்த மதத்திற்கும் எந்தக் குலத்திற்கும்
சொந்தமடி அவள் சொந்தமடி
பறையரு மெங்கள் குலத்தரடி சுத்தப்
பார்ப்பனருமெங்கள் பந்துவடி
எந்தக் குலத்தில் பிறந்தாலும் அவர்
எந்த நிலையி லிருந்தாலும்
இந்து நிலத்தில் பிறந்தவரெல்லாரும்
இந்தியத் தேவியின் மக்களடி (நா.க.பா.ப.313)

என்பன போன்ற பாடல் அடிகளின் வழியே விளக்குகின்றார். அக்காலத்தில் நிலவிய சுதேசியக் கொள்கையை வலியுறுத்தி அதன் மூலம் வர இருக்கின்ற பயன்களையும் எடுத்துரைக்கின்றார்.

கைத்தொழில் கெட்டுக் கலங்குதடி தேசம்
கைத்தொழிலின்றிப் புலம்புதடி
கைத்தொழில் தம்மை விருத்தி செய்தாலந்தக்
கண்ணுடைத் தேவியும் கண்விழிப்பாள்
அன்னியர் சரக்கைத் தீண்டோமே நாமும்
அன்னியர் தயவை வேண்டோமே
அன்னியர் பொருளைத் தீண்டுந் தோறும் அந்த
அன்னை வயிற்றிலடிப்பதுபோல்
(நா.க.பா. ப.313)

நீதி என்றும் நிலைக்கக்கூடிய தன்மை கொண்டது. சூதுகளும் வாதுகளும் மறையக் கூடியவை. புண்ணியங்கள். பலிக்கக் கூடியவை. தருமம் என்றும் வெல்லும். கோபத்தைத் தவிர்த்த நற்குணம் மிக்கவர்களின்முன்பு ஆயுதங்களும் முனை மழுங்கி நிற்கும். கொல்லுகின்ற தீச்செயலைச் செய்யாதவர்களே உண்மையான வீரர்கள். ஆன்ம சக்தி கொண்டு விளங்குகின்ற அன்பு மிகுந்திருப்போரை அடிமைப்படுத்த எவராலும் முடியாது. இவ்வாறு சத்தியாக்கிரக வழியின் பெருமைகளை எடுத்தியம்புகிறார்.

சாந்திசாந்தி சாந்தி என்று சங்கூதுவோம்!
சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்!
காந்தி காந்தி காந்தியென்று நம் நாட்டிலே
கால்நடக்கும் வேதமென்று சங்கூதுவோம்
(நா.க.பா.ப.156)

தேசத்தொண்டு புரிவதன் குறிக்கோள் விடுதலை அடைவதே ஆகும் என்று இவர்தம் பாடல்கள் பறைசாற்றுகின்றன.

வேறு பல குறிக்கோள்களும் இதனுடன் எடுத்தியம்பப்படுகின்றன. விடுதலைக்குப்பின் புதிய அரசியல் அமைப்பை அமைக்க வேண்டும். அதன்வழி நாட்டில் நிலவுகின்ற கொடுமைகளான பசி, பட்டினி, பஞ்சம், கல்லாமை, சாதி வேற்றுமைகள், மனிதனை மனிதன் நோகடித்தல், வறுமை, போர் மூலம் மக்களை மாய்த்தல் முதலிய யாவற்றையும் ஒழித்திடுதல் வேண்டும் என்பதை,

**பஞ்சக் கொடுமையை ஒழித்திடவும்**
**பாரத நாடினிச் செழித்திடவும்**
**அஞ்சும் அடிமைத் தனம்நீங்கி**
**அன்பின் ஆண்மை வேண்டுமென்றால்**
**சோறும் துணியும் இல்லாமல்**
**சோம்பியிங் கெவரும் நில்லாமல்**
**வீறும் புதுமைப் பொதுவாழ்வின்**
**விடுதலை யின்பம் வேண்டுமென்றால்**
**பட்டினி கிடப்பவர் இல்லாமல்**
**படிக்கா தவரெனச் சொல்லாமல்**
**எட்டின மட்டிலும் எல்லாரும்**
**இன்புறும் ராஜ்ஜியம் தென்படவே**

*(நா.க.பா. ப.338)*

என்னும் தம்முடைய பாடல்வழி விளக்குகின்றார். அன்பால் உருகி அனைவருக்கும் தொண்டு செய்யவேண்டும். பிறரைத் தியாகம் செய்யச் சொல்லிவிட்டு, தன்னலத்தில் எள்ளளவும் குறைத்துக் கொள்ளாமல் இருத்தல், சொல்வதைச் செய்கின்ற, செய்வதையே சொல்கின்ற உண்மைத்தன்மை இல்லாமல் இருத்தல், ஒற்றுமையைப் பேசிவிட்டு வேறுபட்டு நிற்றல், சத்தியத்தைப் பற்றியும் சாந்தத்தைப் பற்றியும் இடைவிடாது பேசி, அதை நடைமுறையில் கடைப்பிடியாமல் இருத்தல், சொற்களால் மட்டும் காந்தியைப் புகழ்ந்த அவருடைய கொள்கைகளைச் சிறிதும் பின்பற்றாமல் இருத்தல் என்பன போன்ற இழிசெயல்களைக் களைந்தெறிந்தால்தான் விடுதலை கிடைக்கும்.

நாம் பெற்ற விடுதலை, நாட்டின் நலம் முதலியவை என்றும் நிலைத்திருக்க ஒருமைப்பாடு இன்றியமையாததாகும். சமுதாயம், மொழி, சமயம் போன்ற எல்லாத் துறைகளிலும் ஒருமைப்பாட்டுணர்ச்சி வளர வேண்டும். இத்தகைய சிறப்புமிக்க ஒருமைப்பாட்டுக்கு இடையூறாய் விளங்குபவை சமயவெறி, மொழிவெறி, நிறவெறி, இனவெறி முதலிய வெறிகளாகும். விடுதலை இந்தியாவில் இவை இடம்பெறக்கூடா என்கிறார்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று பாரதி கூறுகின்ற ஒருமைப்பாட்டினை, நாமக்கல் கவிஞர் தம் படைப்புகளில் பல்வேறு இடங்களில் எடுத்தியம்புகிறார். ஒருமைப்பாடெனும் சூரியன் வருகை புரிந்தால், மாநிலப்பற்று, மதவெறி, இனவெறி, சாதியவெறி, சமயவெறி, மொழிவெறி முதலிய தீமை விளைவிக்கக் கூடிய பனித்துளிகள் காணாமற் போயிவிடும். தீவிரவாதம், பயங்கரவாதம், சாதிக் கலவரங்கள் முதலிய கொடிய செயல்கள் பரவி வருகின்ற இத்தருணத்தில் நாமக்கல் கவிஞரின் கருத்துகள் இன்றியமையாதனவாய்த் திகழ்கின்றன. வெறிகள் வேர்கொண்டவை அல்ல. வேர்பிடித்து வளர்ந்த செடியின் மீது விழுந்துள்ள பனித்திவலைகளே! அவை கதிரவனைக் கண்டபோது மறைந்துவிடும். நாம் கதிரவனாக இருக்க வேண்டும். அவ்வளவுதான். பனித்துளியைத் தொடக்கத்திலேயே உதிர்த்துவிட்டால் செடியும் தழைக்கும். நாமும் மகிழ்வான அமைதியான வாழ்வை வாழலாம்.

**கவிஞரின் மொழிப்பற்று**

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்பதுபோல அவரவர்க்கு அவரவர் தாய்மொழியே மற்ற மொழிகளைவிடச் சிறந்தது. ஒவ்வொரு தமிழனும் தமிழ் மொழியின் தொன்மை குறித்தும், கன்னித் தன்மை குறித்தும் பெருமிதம் அடைய வேண்டும். ஆனால் மொழிப்பற்று மொழிவெறியாக மாறுதல் கூடாது. நாட்டுப்பற்று குறுகி விடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான வட்டாரப் பற்று தேசிய மனப்பான்மைக்கு முரண்பட்டதல்ல என்று விளக்கவரும் கவிஞர் அதற்கு ஓர் அருமையான உவமையைக் கையாள்கிறார். ஒருவன் தனது தாயின் மீது வைத்திருக்கும் பக்தி, ஏனைய பெண்களை அவன் வெறுப்பதாகக் காட்டாது. அதுபோல, தாய்மொழியின்மீது ஒருவன் கொள்ளும் பற்று மற்ற மொழிகள் மீது அவன் வெறுப்புக் கொள்வதாகக் காட்டாது.

"எம்மதமும் சம்மதம்" என்பது தமிழரின் தனிப்பெரும் கொள்கை என்று கூறுகிறார்.

> **வேற்றுமை பலவிலும் ஒற்றுமை கண்டிடும்**
> **வித்தையிற் சிறந்தது தமிழ்நாடு!**
> **மாற்றொரு மதத்தையும் போற்றிடும் பெருங்குணம்**
> **மதமெனக் கொண்டவர் தமிழர்களே**
> **(நா.க.பா.ப.32)**

சமுதாயத்தில் பெண்களின் நிலை குறித்துக் கூறுகையில், சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்ற பாரதியின் கருத்தை இவர் ஆதரித்திருப்பினும் முழுமையாகஆண், பெண்சமத்துவத்தை விரும்பவில்லை. பெண்டிர் தமக்கே உரிய பண்புகளைப் பேணி

வளர்க்கவேண்டும் என்கிறார். எல்லாவிதச் சமுதாய, அரசியல் நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டு வீரமும் தீரமும் மிக்கவர்களாகத் திகழ வேண்டும் என்கிறார். கற்பைப்பற்றிக் கூறும்போது பாரதியையொட்டி ஆண்பெண் இருபாலருக்கும் பொது என்கிறார். ஆனால் ஆண்களைவிடப் பெண்களுக்கே அது பெரிதும் பொருந்தும் என்பது அவருடைய கருத்தாக உள்ளது.

**கவிஞர் கூறும் குறள்வழிச் சிந்தனைகள்**

நாமக்கல் கவிஞரிடம் ஒருவர் "எதற்காகத் திருக்குறளுக்குப் புது உரை?" என்றார். "திருக்குறளுக்குச் சரியான உரை இல்லை. அதற்காக" என்று பதிலளித்தார் கவிஞர். உலகத்தில் மனிதனுக்கு மனிதன் என்ற முறையிலாவது அரசனுக்கு அரசன் என்ற முறையிலாவது ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால் முதலில் அந்த விவகாரத்தைச் சமாதான முறையிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். அது முடியாமல் போனால் சிறிதுவிட்டுக் கொடுத்துத் 'தானம்' என்ற முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதுவும் முடியாமற்போகும் நிலையில் 'பேதம்' என்ற முறையில் எதிரிக்குச் சொல்லக் கூடியவர்களைக் கொண்டு அவன் மனத்தைப் பேதித்து இளகும்படி செய்ய வேண்டும். அது முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்துவிட்ட பிறகு தான் 'தண்டம்' என்ற போர் முறையில் இறங்க வேண்டும். இதைத்தான் சாம, பேத, தான, தண்டம் என்று சொல்லுவது. இன்றளவும் உலகத்தில் தோன்றிய எல்லா இலக்கியங்களும் அறிஞர்களும் போதித்து வந்திருக்கிற செயல்முறைக்கான நல்லறிவு இதுதான் என்ற குறள் வழிச் சிந்தனையைப் பல்வேறு படிநிலைகளில் தெளிவாக எடுத்துரைக்கின்றார் நாமக்கல் கவிஞர் தம்முடைய புத்துரையில்.

திருக்குறளில் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால் குறித்துப் பெரும்பான்மையோரின் எண்ணங்களை ஆராய்கையில் வெவ்வேறு வகையிலான கருத்துகள் புலப்படும்.

- காமப்பகுதியை வள்ளுவர் எதற்காக எழுதினார், இதை எழுதாமல் விட்டிருக்கலாமே? என்று வினவுகின்ற தன்மையினர்.
- அறம், பொருள் ஆகிய இரண்டு பகுதிகளை மட்டும் அச்சிடுவது சிறந்தது என்று எண்ணும் தன்மையர்
- காமத்தை அறவே விலக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு குறைத்துப் பேசும் துறவியர்.

இக்கருத்துகளில் கூறும்வகை வேறுபட்டுப் காணப்படினும் கூறுகின்ற நோக்கம் ஒன்றேயாகும். இவற்றிற்கு நாமக்கல் கவிஞர் கூறுகின்ற விளக்கம் வேறுபட்டதாகும். முதல் இருதரப்பினரும்

காமத்தின் காரணமாக விளைந்துள்ள தீமைகளை மனத்திற்கொண்டு, நல்லெண்ணங்களோடுதாம் இவ்வாறு கூறினர் என்றாலும் அது அறிவுடைமை ஆகாது என்கிறார். இக்கருத்தினைக் கவிஞர் வாழ்வியல் நிகழ்ச்சிகளோடு பொருத்தி விளக்கம் அளிப்பது குறிப்பிடத்தக்கது.

> பணத்தால் எண்ணிறந்த தீமைகள் விளைகின்றன. பணத்தைக் கொண்டு அந்தத் தீமைகளைச் செய்கிறவர்களை வெறுக்கலாம். ஆனால் பணத்தை வெறுத்து விடலாமா? அளவு கடந்து உண்பதனால் அநேக நோய்கள் உண்டாகின்றன என்பது உண்மை. அதற்காக அளவு கடந்து உண்பதை வெறுத்துப் பேசலாம். ஆனால் உணவையே வெறுத்துப் பேசலாமா? அதுபோலக் காமத்தால் விளையும் தீமைகளை விலக்கலாம். ஆனால் காமத்தை எப்படி விலக்க முடியும்?

என்று வினவுகிறார் நாமக்கல் கவிஞர். மூன்றாவதாகத் துறவிகள் காமத்தை வெறுப்பதையும் கண்டிக்கிறார்.

> துறவிகள் காமத்தை விலக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் காமத்தைக் குறைத்துப் பேசுகிறார்கள் என்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களுங்கூடப் பெண்பாலை இகழ்ந்து பேசுவது குற்றமாகும். காமத்துக்குக் காரணமும் பொறுப்பாளிகளும் பெண்கள் மட்டுந்தானா?
>
> (திருவள்ளுவர் இன்பம், ப.9)

> மக்கள் சமுதாயம் 'வாழையடி வாழை'யாக மகிழ்ச்சியுள்ளதாக நடந்துவர இல்லறத்தை எண்ணியே எழுதப்பட்ட திருக்குறளில் காமத்துப்பால் இல்லாதிருக்க இயலாது. திருவள்ளுவர் சொல்லியிருக்கிற காம இன்பம், விபசாரக் குற்றங்களோடு சேர்த்துப் பேசப்படுகிற காமத் தீமையல்ல. தூயதான காம உணர்ச்சியையும் துப்புரவான காதல் உறவையும் மிக நல்ல கற்பனைக் காட்சிகள் அடங்கிய நாடகமாக நடத்திக் காட்டப்பட்டிருக்கிற திருக்குறளிலுள்ள காமத்துப்பால் அவமதிப்பான எண்ணத்தினால் அலட்சியம் செய்யப் பட்டிருக்கிறது
>
> (திருவள்ளுவர் இன்பம், ப.9-10)

இவ்வாறு காமம் குறித்துச் சிறந்து சிந்தித்திருக்கின்றார் கவிஞர். காமம் சிறந்தது. ஆனால் அது எத்தகைய சூழலில் என்பதைத் தமது உரையின்கண் வெளிப்படுத்தியுள்ளார். பிறரின் உரைகள் திருக்குறளின் பொருளைக் கூறும் நோக்குடன் இயற்றப் பெற்றிருப்பினும் அவை வள்ளுவரின் நோக்கை வெளிப்படுத்தாமல் அதன் ஆணிவேரையே அசைக்கும் வகையில் அமைந்துள்ளன என்பதை நயமாக எடுத்துரைத்துள்ளார். சான்றாக, சிலவற்றைக் காண்போம்.

**மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
**செவ்வி தலைப்படு வார்** (குறள். 1289)

> காமம் என்பது மலரைக் காட்டிலும் மென்மையானது. அதைக் கசங்கிப் போகும்படி மோந்து பார்ப்பதோ, கையாளுவதோ கூடாது. ஆனால் அம்மென்மையை உணர்ந்து பக்குவம் பார்த்து அனுபவிக்கின்ற மனிதர்கள் சிலரே. பெரும்பாலும் மக்கள் அந்த மென்மையை மதிக்காமலும், பக்குவம் பார்க்காமலுந்தான் அந்த மலர் வாடிக் கசங்கிக் குழைந்து, மணம் கெட்டுப் போகும்படி நடந்து கொள்ளுகிறார்கள். அது குற்றம் என்று புத்தி புகட்டுவது இந்தக் குறள். 'மலரினும் மெல்லிது காமம்' என்ற உபமானத்தினாலும் அதன் செவ்வி தலைப்படுவார் சிலர்' என்ற சொற்களாலும், திருவள்ளுவர் மலரினும் மெல்லிய காமத்தின் செவ்விதலைப்படாத பெரும்பான்மையான (சிலர் அல்லாத பலராகிய) மக்களைக் கருதித்தான் இதைச்சொல்லி இருக்கிறார் என்பது நிச்சயம்
>
> (திருவள்ளுவர் இன்பம், ப.11)

என்று கூறுகிறார் நாமக்கல் கவிஞர்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் செய்துள்ள உரை திருவள்ளுவரின் எண்ணத்தைப் பரதிபலிப்பதாக இல்லை.

> தொட்ட துணையானே மணச்செவ்வியழிவதாய மலர் எல்லாவற்றிலும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும் வேட்கையும் நுகர்ச்சியும் இன்பமும் ஒரு காலத்தின் கண்ணேயொத்த நுகர்தற்குரியாரிருவர் அதற்கேற்ற

> இடனும் காலமும் உபகரணங்களும் பெற்றுத் கூடி நுகர வேண்டுதலின் அதன் செவ்வி தலைப்படுவார் சிலரென்றும், அவற்றுள் யாதானு மொன்றனாற் சிறிது வேறுபடினும் வாடுதலின், 'மலரினு மெல்லி' தென்றுங் கூறினார். குறிப்பொவ்வாமையின் யானது பெறுகின்றிலேன் என்பதாம். தலை மகளுடன் தீர்வது பயன் என்பது விளக்கம். இந்த உரையும் விளக்கமும் இந்த அருமையான குறளின் நோக்கத்தைப் புகட்டுவதாக இல்லை. அன்றியும் இந்த உரை இக்குறளின் நோக்கத்துக்கு முற்றிலும் வேறுபட்ட 'இடம், காலம், உபகரணங்கள்' என்பனவற்றையே முக்கியமாக நினைக்கச் செய்கிறது

என்று பிறர் உரை குறளின் பொருளுக்கு முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுவதை எடுத்துரைக்கிறார் நாமக்கல் கவிஞர். மேலும் இத்தகைய உரைகளும் எளிதில் புரிந்து கொள்ள இயலாத உரைகளும் திருக்குறளுக்கு எழுந்துள்ள காரணத்தினால் நாமக்கல் கவிஞர் புது உரை ஒன்றை எல்லாருக்கும் எளிதில் விளங்கும் வகையில் எளிய நடையில் இயற்றியுள்ளார்.

## இலக்கியக் கதைமாந்தர் வழி வெளிப்படும் கவியின் கருத்துகள்

நாமக்கல் கவிஞரின் சிறு காப்பியங்களுள் மிக நீளமானது "அவளும் அவனும்" என்னும் காப்பியப் புதினமாகும். இக்கதையில் மக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் பல ஆராயப்பட்டு அவற்றுக்கு ஏற்ற தீர்வுகளும் தரப்பட்டுள்ளன. காமம், காதல் இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைக் கதைமாந்தர் வழி விளக்குகின்றார். உடலுக்கு முக்கியத்துவம் தருவது காமம். ஆன்மாவிற்கு முக்கியத்துவம் தருவது காதல். காமவயப் பட்டோர் ஆசையை அடைய இயலாத நிலையில் கோபமடைந்து ஆத்திரம் கொள்கின்றனர். அந்நேரத்தில் முரட்டுத்தனத்தைக் கையாள்வர். ஆனால் காதல் வயப்பட்டோர் தம்மால் நேசிக்கப்பட்டோர் தம்மை நேசிக்க மறுத்தாலும் வெறுக்க மாட்டார்கள். அவர்களுக்காக எதையும் இழக்கத் தயாராக இருப்பர். உடல் மனம் இரண்டையும் கடந்த ஓர் உணர்ச்சி. காமம் ஒன்றைவிட்டு மற்றொன்றிற்கு மாறும். ஆனால் காதலோ இத்தன்மைக்கு முற்றிலும் மாறானது.

தமது நாட்டுக்கு நல்லது சொல்ல வந்த கவிஞர் உலக நன்மை குறித்தும் பாடியுள்ளார். மக்களனைவரும் கலகம் இன்றிச்

சமாதானத்துடன் வாழ வேண்டும் என்கிறார். அவ்வாறு வாழ வேண்டியதன் அவசியத்தையும் கூறுகிறார். "அவளும் அவனும்" என்ற இக்காப்பியத்தில் அவருடைய புதினத்தில் வீர தீரத்தைப் பற்றிக் கூறுகையில் மறைந்திருந்து பகைவர் மீது குண்டு வீசுகின்ற போர்முறையைக் கோழைத்தனம் என்கிறார். தீமைகளைக் காந்தீய முறையில் எதிர்ப்பதே உண்மையான வீரம் என்கிறார். "புகழவொண்ணாக் கருணை ஜோதி" என்ற தலைப்பில் அவர் பாடுகையில் இரண்டாம் உலகப்போரின் கொடுமைகளையும் அதற்குக் காரணமாயிருந்தவர்களின் அழிவையும் எடுத்துக்காட்டி, அகிம்சா வாதிகளின் வழியைப் புகழ்ந்துள்ளார்.

மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்துப் புதியதோர் சமூக அமைப்பை ஏற்படுத்த வேண்டும். வழக்கம் என்ற பெயரில் மூடக் கொள்கைகளை வளர்க்கின்ற தன்மையைக் கடுமையாகச் சாடுகின்றார். சமுதாயத்தைச் சாக்கடையாக்குகிற பழமைவாதிகளை வெறுக்கிறார். புதியது என ஏற்றுக்கொள்ளுகின்ற பழக்கங்களின் காரணமாக என்றும் மாறாத அடிப்படையான அறங்களை மக்கள் கைவிடுதல் கூடாது என்றும் எச்சரிக்கிறார்.

**மன்னவன் என்ற மனிதனில்லை-அங்கே**
**மந்திரி தந்திரி யாருமில்லை**
**சின்னவர் என்றும் எவருமில்லை-பட்டம்**
**தேடிய லைந்திடும் மக்களில்லை (நா.க.பா.ப.109)**

என்று தமது கற்பனைத் தேசத்தைப் பற்றி எடுத்தியம்புகிறார். இக்கதையின் இடையில் தொட்டிலில் தூங்கும் குழந்தைக்காகத் தாய் பாடுகின்ற தாலாட்டின் வரி சமூக அநீதிகள் பலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றை அழித்திடவேண்டும் என்று கூறுகிறார்.

**அதிகாரம் என்று சொல்லி**
**அநியாயம் செய்தறியோம்**
**சதிகாரத் தந்திரத்தால்**
**சம்பாதித் துண்பதில்லை**
**துதிபாடிப் பொய்பேசிச்**
**சுகித்திருக்கும் சூதறியோம்**
**கதிகேடு வந்துவிடக்**
**காரணங்கள் இல்லையம்மா**
**வாதவழக் கறியோம்**
**வம்புதும்பு செய்தறியோம்;**
**சூது புரிந்த றியோம்**
**பொய்சாட்சி சொன்னதில்லை**
**நீதி நெறி தவறி**
**நிந்தை சொல்ல நின்றதில்லை**

ஏதும் ஒரு கெடுதி
இங்கு வர ஞாயமில்லை
வேலையின்றிக் கூலி கொள்ளும்
வித்தைகளைக் கற்றறியோம்
கூலியின்றி வேலைகொளும்
கொடும்பாவம் செய்தறியோம் ( நா.க.பா.ப.194)

என்று பலவாறாக அடுக்கிக்கொண்டே செல்கின்றார். "அன்பு செய்த அற்புதம்" என்ற காவியத்தில் வருகின்ற பல நிகழ்வுகள் இரண்டாம் உலகப்போர், காந்தியடிகளால் துவக்கப்பட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கம், சுபாஸ் சந்திரபோஸால் துவக்கப்பட்ட இந்தியத் தேசியப்படை இயக்கம் ஆகிய பேரியக்கங்களோடு தொடர்புள்ளனவாக அமைந்துள்ளன. இக்கதையில் கதாபாத்திரங்கள் உரையாடுகின்ற பொழுது காந்தியத்தின் பல்வேறு கூறுபாடுகளின் அருமை பெருமைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. கைத்தொழில் குறித்த சிந்தனைகள் பேசப்படுகின்றன. ''மலைக்கள்ளன்'' ''கற்பகவல்லி'', "தாமரைக்கண்ணி" என்பன இவருடைய வேறு சில புதினங்கள். இப்புதினங்களின்வழி இவர் எடுத்தியம்பும் வாழ்வியல்சார் சிந்தனைகள் சிலவற்றை இங்குக் காண்போம்.

'மலைக்கள்ளன்' புதினத்தின் கதாநாயகன் ஒரு பெரும் கொள்ளைக்காரன். நல்லவர்களுக்கு நல்லவனாயும், தீயவர்களுக்குத் தீயவனாயும் விளங்கினான். கதைமாந்தருள் தலைமை வகிக்கும் கதாநாயகன் கள்ளன் என்று அழைத்தபோதிலும் அவனுடைய இயல்பு பற்றிக் கூறுகையில் நல்லவனாகவே சித்திரிக்கிறார். இக்கதையின் மூலமாகப் பழமொழிகளின் பயன்பாட்டினை வெளிப்படுத்துகிறார் எனலாம். உருவத்தைக் கண்டு ஒருவரை உயர்த்தியோ, தாழ்த்தியோ மதிப்பிடல் கூடாது என்கிறார். "வெளுத்ததெல்லாம் பாலல்ல", "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்னும் பழமொழிகளின் பொருண்மைகளை உணர்த்தும் வகையில் கதை மாந்தர்களைப் படைத்துள்ளார் கவிஞர். இதனுடன் காந்தியக் கொள்கைகளையும் புகுத்தியுள்ளார்.

கதையின் இறுதிக் கட்டத்தில், மலைக்கள்ளன் பூங்கோதையுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது, தான் வெளிக்கு ஒரு கொடிய வன்முறையாளன்போலக் காட்டிக்கொண்டாலும், உண்மையில் தானொரு அகிம்சைவாதியே என்றும் தற்காப்புக்கு மட்டுமே தான் வன்முறையைப் பயன்படுத்தியதாயும் தன்னால் கைப்பற்றப்பட்ட கைதிகளில்

ஒருவனைக்கூடத் தான் கொல்லவோ துன்புறுத்தவோ இல்லை என்றும் எடுத்துக் கூறுகிறான்

*(நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, கி.ர. அனுமந்தன், ப.103)*

'கற்பகவல்லி' நாவலில் கலப்புத் திருமணத்தின் தேவைபற்றிக் கவிஞர் மறைமுகமாகத் தம் கருத்தை வெளியிட்டுள்ளார். ஒரு வடநாட்டுச் சேட்டின் மகளான கங்காபாய், தென்னாட்டைச் சேர்ந்த மாணிக்கத்தைத் திருமணம் செய்துகொள்வதாகக் காட்டியிருப்பது இத்தகைய எண்ணத்தின் விளைவே எனலாம்.

"தாமரைக் கண்ணி" என்பது இவர் எழுதிய சமுதாய நாவலாகும். அவர் விரும்பும் இந்து - முஸ்லிம் ஒற்றுமை குறித்தும் கூறுகின்றார்.

நாமக்கல் கவிஞரின் நாடகங்களுள்ளும் அவருடைய சிந்தனைகளின் பிரதிபலிப்பைக் காணலாம். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் இலக்கியம் படைக்க வல்லவராய்த் திகழ்ந்தார். "அரவணை சுந்தரம்" என்ற நாடகத்தில் மக்களுக்கு வேண்டிய சுகாதாரக் கருத்துகள் பலவற்றைக் கூறியுள்ளார். இந்நாடகத்தில் முஸ்லிம் வள்ளல் ஒருவர் முக்கியப்பங்கினை வகிக்கின்றார். இந்து-முஸ்லிம் ஒற்றுமைபற்றிய கவிஞரின் கருத்து இந்நாடகத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடுகள் மறைந்து அனைவரும் சமநிலை பெறவேண்டும் என்னும் தம் வேட்கையையும் அளவுக்கதிகமாக இருக்கின்ற பொருட்களை முதலாளிகள் தொழிலாளிகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்னும் தமது ஆசையையும் "மாமன் மகள்" என்னும் நாடகத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்ப் பண்பாட்டின் சாரமாக, ஆன்ம வீரம், தெய்வ நம்பிக்கை, சத்தியம், சீவ காருண்யம், மனத்திண்மை, சமய சகிப்புத்தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார்.

தனிமனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்ற வகையிலான வாழ்வியற் சிந்தனைகளைத் தம்படைப்புகளின் வழி வெளிப்படுத்துகின்றார். மக்கள் அடைகின்ற இன்னல்களையும் அவற்றை மாற்றுவதற்குரிய வழிமுறைகளையும் கூறியுள்ளார். சமுதாய, சமய ஒருமைப்பாட்டினையும் புதிய சமுதாய அமைப்பின் தேவையையும் வலியுறுத்துகிறார். நாமக்கல் கவிஞர் குறித்துக் கல்கி கூறுகையில்,

அன்பைக் கவர்ந்தவர்; கள்ளங்கபடமற்ற தூய உள்ளத்தினர்; புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்படாதவர்; ஆடம்பரத்தை அடியோடு வெறுப்பவர்; 'ஆடு ராட்டே! சுழன்றாடு ராட்டே' என்று பாடி அந்தப் பாட்டின் மயக்கத்திலே தமிழ்நாட்டையே களிப்பால் சுழன்றாடச் செய்தவர். அவர் நீடூழி வாழ்க!

என்பார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நாமக்கல் கவிஞரைப் பற்றி,

சிந்தையினால் வாக்கதனால் செய்கை தன்னால்
தேசத்திற் கோயாது தொண்டு செய்தோன்;
முந்துமன்பே உருவாக வந்த மூர்த்தி
மூதறிஞன் காந்திமகான் வழிபின்பற்றி
செந்தமிழ்நாட் டாஸ்தான கவிஞனாகிச்
சீரோங்கு ராமலிங்க நண்பனேநீ
சந்தமும் இவ்வுலகில் வாழச் செந்தில்
சண்முகனை வேண்டிநிதம் போற்று வேனே

என்று பாராட்டிப் பாடுகின்றார்.

தமிழக வாழ்வுச் சூழல் அமைதியும் பொறுமையும் நிறைந்தது. காந்திய நெறியோடு பொருந்தியது. இச்சூழலை உலகிற்கு அறிமுகப்படுத்தினால் உலகில் அன்பு தழைக்கும். அமைதி மேலோங்கும். ஒற்றுமை பெருகும். நாமக்கல் கவிஞரின் வாழ்வியல் சிந்தனைகள் அவர் வாழ்வில் இருந்து முகிழ்த்தவை. அவற்றை உணர்ந்து உணர்த்தியுள்ளார் எனக் கூறலாம்.

தனிமனிதன் தொடங்கி உலகமக்கள் வரை அனைவருக்குமான வாழவியல் சார்ந்த பல்வேறு கருத்துக்களைத் தம் படைப்புகளின் மூலமாகக் கூறியுள்ளார். சமய நூல்கள் மூலமாக நீதிகளைப் போதித்ததைப் போல, கவிஞர் அரசியலின் மூலமாக அப்பணியைச் செய்துள்ளார். பொருளாதாரச் சமத்துவத்தையும் சமுதாய ஒருமைப் பாட்டினையும் எடுத்தியம்பியுள்ளார். பாவேந்தரைப் போன்று புதியதோர் உலகம் செய்ய் விழைந்துள்ளார். மனிதர்கள் வாழவேண்டியதற்கான வழிமுறைகளைக் கூறிய கவிஞர் அவர்களுக்கு எவை எவை அணிகலன்களாக நின்று அழகூட்டும் என்பதையும் விரிவாக எடுத்தியம்பியுள்ளார். அறிவும் அன்பும் மிகச்சிறந்த அணிகலன்கள் என்று கூறி எது அறிவு? எது அன்பு? என்பதையும் எடுத்தியம்பியுள்ளார். கல்வி, கேள்வி பொன்னாகத் திகழ்வன. கருணை அதில் வீசும் ஒளியாய்த் திகழும். சிறந்த நட்புகளே

நவமணிகளாகத் திகழ்வன. புன்சிரிப்போடு கூடிய முகத்தைக் கிடைத்தற்கரிய தவம் எனலாம். இவ்வணிகலன்கள் தம்மை அணிவோர்க்குப் புதிய தென்பினைத் தரும். இவற்றையெல்லாம் விடச் சிறந்த அணிகலன் ஆண்டவன் நினைவு என்கிறார்.

*அறிவே மக்களின்அணிகலமாம்*
*அன்பே அதில்ஒளிர் மணியெனலாம்*
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
*உண்மையை நாடுதல் அறிவாகும்*
*உயிர்களுக் கன்பே நெறியாகும்*
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
*கல்வியும் கேள்வியும் பொன்னாகும்*
*கருணையின் மெருகே மின்னாகும்*
*நல்லின நட்புகள் நவமணிகள்*
*நகைமுக அணிகலம் தவமெனலாம்*
*பூண்டவர் தமக்கொரு தென்புதரும்*
*புறத்துள எவர்க்கும் இன்புதரும்*
*ஆண்டவன் நினைவோடு பணிபுரியும்*
*அன்புடை அறிவே அணிகலமாம்*

*(நா.க.பா.ப.414–412)*

திலகர் விதைத் விதை பாரதியாக முளைத்தது; காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது என்பார் இராஜாஜி (நா.க.பா.ப.)

" 'பிரார்த்தனை' என்ற அவரது நூலைப்பற்றி "இந்து" நாளேட்டில் நல்ல திறனாய்வுகள் எழுதப்பட்டன. 16.10.1938 "இந்து" இதழில் வெளியான ஒரு திறனாய்வில் "சண்டாளனைப்" பற்றிக் கவிஞர் எழுதிய கவிதைகள் மிகவும் புகழப்பட்டிருந்தன. அக்கவிதைகள் "இனிமையும் எனிமையும் வாய்ந்தவைகளாக இருந்ததுடன் இதயப்பூர்வமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாகவும் இருந்தன" என்று அதில் கூறப்பட்டிருந்தது.

அந்நூலுக்கு முகவுரை எழுதிய இராஜாஜி "மதிப்பிற்குரிய சுப்பிரமணிய பாரதியின் கவிதைகளைவிட ஒருபடி உயர்ந்தனவாக நாமக்கல் கவிஞரின் கவிதைகள் சில விளங்குகின்றன" என்று கூறியுள்ளார்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆற்றிய தொண்டுகள் குறிப்பிடத்தக்கன. அவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, எல்லோரும் வியப்படையும் அளவுக்கு மிகுதியானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் சிறப்பில் அவை அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தன.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாகுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 280.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 | 100.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2 | 100.00 |
| நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |

**636 நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி** **30.00**